உ

# புன்னைநகர் மாண்மியம்



கலாபூஷணம், வைத்தியகலாநிதி
தியாகராஜா ஐயர் ஞானசேகர ஐயர்

உ

# புன்னைநகர் மான்மியம்

கலாபூஷணம் டாக்டர் தி. ஞானசேகர ஐயர் (B.A)

76ஆவது வெளியீடு

**நூல்:**
புன்னைநகர் மான்மியம்
(வரலாறு)

**ஆசிரியர்**
தி. ஞானசேகர ஐயர்

**பதிப்பு**
முதலாம் பதிப்பு, 2021

**பதிப்பகம்**
ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6
இலங்கை
தொலைபேசி: + 94 11 2586013
தொலைநகல்: + 94 11 2362862
மின்னஞ்சல்: editor@gnanam.info
இணையத்தளம்: www.gnanam.info

**BOOK:**
Punnainagar Manmiam
(History)

**Author**
T.Gnanasekara Iyer

**Edition**
1st Edition, 2021

**Publisher**
Gnanam Pathippakam
3B, 46th Lane, Colombo 6
Sri Lanka
Tel: + 94 11 2586013
Fax: + 94 11 2362862
Email: editor@gnanam.info
Web: www.gnanam.info

**Pages**
(x+ 166)


**Price**
Rs.500/=

**ISBN**
978-955-8354-53-7

This licensed work is free to use, share, remix, and redistribute with attribution to Gnanam Pathippakam, but not permit for any commercial work

ௐ

# சமர்ப்பணம்



முன்னறி தெய்வங்களான

எனது பெற்றோர்

பிரம்மஸ்ரீ. து. தியாகராஜா ஐயர் - பாலாம்பிகை தம்பதியினருக்கு

இந்நூல் சமர்ப்பணம்

# பதிப்புரை

மான்மியம் எனும் சொல் 'மஹாத்மியம்' எனும் வடமொழிச் சொல்லிலிருந்து மருவி வந்தது. மஹாத்மியம் என்பது பெருமை என்னும் பொருள் தருவது. தற்காலத்தில் மான்மியம் என்னும் சொல் 'புராணம்' அல்லது 'வரலாறு' என்னும் பொருள் தருவதாயுள்ளது.

ஞானம் பதிப்பகத்தின் 76ஆவது வெளியீடான எந்தை எழுதிய புன்னைநகர் மான்மியம் என்னும் இந்நூல் புன்னை நகரின் பெருமைகளைக் கூறுவதாய் அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் வடபால் அமைந்துள்ள புன்னாலைக் கட்டுவன் என்னும் ஊருக்கு அப்படியென்ன பெருமை!?

நாம் தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகப் போற்றுகின்றோம். தமிழில் எமக்கு கிடைக்கப்பெறும் முதல்நூலாம் தொல்காப்பியத்தை உரைக்குறிப்புகளால் விளக்கி, சங்க இலக்கியமான அகநானூறுக்கு பொருள் தந்து, இரகுவம்சக் காவியத்துக்கு உரையெழுதி, சென்ற நூற்றாண்டுவரை ஈழத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களின் சரித்திரங்களை 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்' என்ற நூலில் தந்தவர் புன்னாலைக்கட்டுவன் வித்துவசிரோமணி சி.கணேசையர் அவர்கள். ஈராயிரம் வருடங்களுக்கும் மேலான தமிழ்ப் பரப்பில் இலக்கண, இலக்கிய, சரிதம் என்று பரந்து விரிந்த ஆழமான தளத்தில் தொண்டாற்றியவர் இந்தப் பெருமகன்.

இவரைப் போன்றே இவரது தந்தையாரது சகோதரியின் புதல்வரான காசிவாசி செந்திநாத ஐயர் சைவத்துக்கு ஆற்றிய தொண்டுகள் ஈடில்லாப் பெருமைகொண்டவை. இவற்றை விரிவஞ்சி பதிப்புரையில் பட்டியலிட இயலாதுள்ளது. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் வார்த்தைகளில் கூறின் 'தமிழுக்கு உ.வே. சாமிநாதஐயர் போன்று சித்தாந்தத்துக்கு செந்திநாத ஐயர்' என்பதே இவர் ஆற்றிய தொண்டுகளுக்கான ஒரு சிறப்புக் கணிப்பீடாகும்.

இவர்கள் இருவரையும் புன்னைநகர் தந்து தமிழையும் சைவத்தையும் உய்வித்தது. தொடர்ந்து இவர்களின் பேரரான கதாகாலட்சேப கலாநிதி, முத்தமிழ் வித்தகர், நல்லை ஆதீன முதல்வர் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களைப் புன்னைநகர் தந்தபோது தமிழ்கூறும் நல்லுலகம் வியந்து சிலிர்த்தது.

இவ்வழியில் வரும் தி.ஞானசேகரஐயர், அவர்கள் 'தி.ஞானசேகரன்' என்ற பெயரில் தற்கால நவீன தமிழ் இலக்கியத்துக்கு ஆற்றிவரும் பணிகளை நான் இங்கு கூறுவது 'தந்தைபுகழ் பாடும் தனயன்' என்னும் நிலைமையைத் தந்துவிடும்.

இலக்கியத்துக்கான அரச விருதுகளையும், கௌரவங்களையும் பெற்ற தி. ஞானசேகரன் எழுதிய சிறுகதைகள், நாவல்கள், இலங்கை இந்தியப் பல்கலைக்கழகங்களில் பாடநூல்களாகவும் பட்டப் படிப்புகளை நிறைவு செய்ய உயர்வகுப்பு மாணவர்களால் எடுத்துக் கொள்ளப்படும் ஆய்வுக்குரிய படைப்புகளாவும் விளங்குகின்றன. அத்தோடு இவர் நடத்திவரும் 'ஞானம்' கலை இலக்கியச் சஞ்சிகை, மற்றும் இவர் தமிழுக்குத் தொகுத்தளித்த ஞானம் சிறப்பிதழ்கள், கீரிமலை நகுலேஸ்வர ஆலய கும்பாபிஷேக மலரான 'நகுலநாதம்' ஆகியவை இவரது திறமைகளையும் பெருமைகளை விண்டுரைப்பன.

இந்தச் செழுமைகளையெல்லாம் அருளியவர் புன்னைநகர் மன்னவரான ஆயாக்கடவைச் சித்திவிநாயகர். பல மேதைகளையும் அறிஞர்களையும் சான்றோர்களையும் காலத்துக்காலம் தொடர்ச்சியாக அருளிப் புன்னை நகரின் புகழ் ஓங்கச் செய்பவர் அவர்.

புன்னை நகர் மான்மியம் என்னும் இந்நூல் புன்னைநகர் மன்னவன் பற்றியும் அவரது ஆட்சிப்பிரதேசச் சிறப்புகள் பற்றியும் அங்கு வாழும் மக்களின் சான்றாண்மையையும், அன்பையும் பண்பையும், தியாகங்களையும், சேவைகளையும் ஆதாரபூர்வமாக ஆவணப்படுத்துகிறது.

கணேசையர், செந்திநாதஐயர், தம்பிரான்சுவாமிகள், இவர்கள் வழிவந்த ஞானசேகரஐயர் ஆகியோரைத் தவிர்த்து தமிழ்கூறு நல்லுலகின் வரலாற்றை எழுதிவிட முடியாது. இவ்வறிஞர்களின் பெருமைகளை, புன்னைநகரை விடுத்துக் கூறிவிடமுடியாது.

இத்தகைய புன்னைநகரின் மாண்புகளை ஆவணப்படுத்தும் வரலாற்று நூலாக அமைகிறது இந்தப் புன்னைநகர் மான்மியம்.

**ஞானம் பாலச்சந்திரன்**

15.04.2021
3B, 46ஆவது ஒழுங்கை,
கொழும்பு 06.

உ
சிவமயம்

**சித்தி யுறுவார் தெளியுங் கலையுறுவார்**
**பத்தி யுறுவார் பயனுறுவார் – அத்திமுக**
**முன்னவனை யைங்கரனை முத்திதரும் புன்னைநகர்**
**மன்னவனை முன்போற்று வார்.**

# என்னுரை

எமது கிராமமாகிய புன்னாலைக்கட்டுவன் ஓர் உன்னதமான வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டது. நல்லறிஞர்களும், சிறந்த பண்பாட்டாளர்களும், பக்திமான்களும், புரவலர்களும் தொன்றுதொட்டு வாழும் இக்கிராமத்தின் வரலாறு சமீபகாலங்களில் மறக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் வருவதை எம்மால் உணர முடிகிறது.

உதாரணமாக ஒன்றைக் கூறுவதானால், அயற் கிராமங்களின் பாடசாலைகள் தோன்றுவதற்கு முன்னரே எமது கிராமத்தில் தமிழ் பாடசாலை 1875ஆம் ஆண்டளவில் தோன்றிவிட்டது. ஆனாலும், அப்பாடசாலையின் புதிய கட்டிடம் ஒன்றுக்கு அத்திபாரம் இடப்பட்ட 1927ஆம் ஆண்டையே பாடசாலை ஆரம்பித்த ஆண்டாகக் கணித்து பாடசாலையின் பவளவிழா 2005ஆம் ஆண்டில் நடந்தேறியுள்ளது. ஆதாரபூர்வமாக இத்தவறு சுட்டிக்காட்டப்பட்ட போதும் அதன் பின்னரும் அத்தவறு திருத்தப்படாது பாடசாலையின் 80 வருட பூர்த்தி விழா 2010இல் கொண்டாடப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இத்தகைய தவறுகளைப் பேணிப் பாதுகாப்பதால் வரலாற்று உண்மைகளை ஒருபோதும் மாற்றிவிட முடியாது. இத்தகைய வேறும் பல வரலாற்றுத் தவறுகள் பேணப்பட்டு வருவதையும் எம்மால் அவதானிக்க முடிகிறது.

எமது கிராமத்தின் சரியான வரலாறு பேணப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தினாலேயே இந்தப் புன்னைநகர் மான்மியம் என்ற நூலை எழுதத் துணிந்தேன். எமது கிராமத்தில் முதன் முதலில் பாடசாலை நிறுவிய கதிர்காம ஐயரது பெறாமகன் சோ.குமாரசாமிஐயர் என்பார்

18-08-1867இல் பிறந்தவர். அவருடைய முதுமைக்காலத்தில், ஏறத்தாழ 10 வருடங்கள் நான் அவருடன் பழகி இருக்கிறேன். அதே போன்று கதிர்காம ஐயரது இன்னொரு பெறாமகனும் அவரிடம் கல்வி கற்றவருமாகிய வித்துவசிரோமணி கணேசையர் 1887இல் பிறந்தவர். அவரது முதுமைக்காலத்தில் ஏறத்தாழ 15 வருடங்கள் நான் அவருடன் பழகியிருக்கிறேன். இவர்கள் தமது மூதாதையரின் சமூகச் செயற்பாடுகள் பற்றிக் கூறியிருப்பதை நான் கேட்டும் அறிந்துள்ளேன்.

மேலும், மேலே குறிப்பிட்ட சோ. குமாரசாமி ஐயர் அவர்கள் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தை முதன்முதலில் மண்கட்டிடமாக அமைத்த சங்கரஐயர் அவர்களின் பேரர். சங்கர ஐயர் வாழ்ந்த காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்.

இவர்களது அடுத்த சந்ததியைச் சேர்ந்த சிவானந்தக் குருக்களிடம் நான் சமஸ்கிருத குருகுலக் கல்வி பெற்றுள்ளேன். அவரது ஒன்றுவிட்ட சகோதரரான கே.சி.பி.ஐயரிடம் நீண்ட காலம் பழகியுள்ளேன். கே.சி.பி ஐயர் அவர்களே புன்னை நகரில் தபாற்கந்தோர், மருத்துவமனை ஆகியவை தோன்றுவதற்கு காரணராக விளங்கியவர். இவர்களது அடுத்த சந்ததியினரான எனது தந்தையார் மற்றும் பெரிய தந்தையார் ஆகியோரிடம் புன்னைநகர் வரலாறு பற்றிக் கூறக் கேட்டுள்ளேன். ஏறத்தாழ 300 வருடங்களை அடக்கிய வரலாற்று நிகழ்வுகளை இவர்கள் யாவரிடமிருந்து ஆப்த வாக்கியமாக நான் அறிந்துள்ளேன். இவர்களைவிட ஊர்ப்பிரமுகர்களான டாக்டர் நன்னித்தம்பி, இ.விக்கினராசா, மற்றும் ஆயாக்கடவை கோவில் பூசை உருத்துடைய 94 வயதுவரை வாழ்ந்த திருமதி அன்னலட்சுமி தங்கசாமிஐயர் ஆகிய முதியவர்களிடமும் பல வரலாற்றுச் செய்திகளைக் கேட்டு உறுதி செய்துள்ளேன்.

மேலும், இந்த நூலினை எழுதுவதற்கென பல நூல்கள், கட்டுரைகள், கோயில் பெருவிழா மலர்கள், பழைய உறுதிகள், கல்வெட்டுக்கள் போன்றவற்றையும் ஆய்வு செய்து சான்றாதாரங்கள் பெற்று இந்நூலில் சேர்த்துள்ளேன். நான் பெற்ற சான்றாதாரங்களின் பிரதிகளும் இந்நூலில்

போட்டோ பிரதிகளாக பதியப்பட்டுள்ளன. நான் கேட்டறிந்தவை நூல்களில் பெற்றவை, நேரில் பார்த்து அறிந்தவை என்பவற்றின் ஆதாரங்களோடு இந்நூலை எழுதியுள்ளேன்.

புன்னைநகரின் வரலாற்றுத் தகவல்களை இயலுமானவரை முதன்மை ஆதாரங்களின் துணையுடன் ஒரு நூற் கட்டமைப்புக்குள் கொண்டுவருவது இந்நூலின் நோக்கமாகும். மேலும் பெருமைமிக்க புன்னாலைக்கட்டுவன் கிராமத்தின் முன்னைப்பழமைச் சிறப்பினை பறைசாற்றும் வரலாற்றாதாரங்களை அழித்துவிட்ட நிகழ்வுகள் சிலவும் கடந்த இரண்டு தசாப்தங்களில் நடந்தேறியுள்ளன. உதாரணமாகக் கூறுவதானால் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆயாக்கடவை ஐங்கரன் தீர்த்தக்கேணி, வீதி புனரமைப்பு என்ற பெயரில் மூடப்பட்டுவிட்டது.

அதனருகே இருந்த வாசிகசாலை மற்றும் சமூக முன்னேற்றத்துடன் தொடர்புபட்டிருந்த மடங்கள் தரைமட்டம் ஆக்கப்பட்டு விட்டன. புன்னாலைக்கட்டுவனில் முதன் முதலில் ஏறத்தாழ 145 வருடங்களுக்கு முற்பட்ட பாடசாலையின் எச்சங்களாக இருந்த அதன் தூண்கள் இடித்துத் தள்ளப்பட்டு விட்டன. இவையாவற்றையும் பாதுகாத்து வேலி அமைத்து ஒரு பூந்தோட்டத்தைப் பாதுகாப்பது போன்று பாதுகாத்திருக்க வேண்டும்.

தேசியத் தலைவர் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் 1927ஆம் ஆண்டு அத்திபாரம் இடப்பட்ட பாடசாலைக் கட்டிடத்தை இடித்துவிட்டு அந்த இடத்தில் புதிதாக வேறு ஒரு கட்டிடம் அமைக்க முயன்றுள்ளனர் பாடசாலைச் சமூகத்தினர். அதனை அறிந்த ஒரு சிங்கள இராணுவ அதிகாரி கப்டன் ஜெயமுனி துஸ்மந்த என்பவர் அந்தச் செயலைத் தடுத்து நிறுத்திய காரணத்தால் இன்றும் சேர்.பொன்.இராமநாதனின் பெயரைத் தாங்கிய பெயர்ச்சின்னத்துடன் அக்கட்டிடம் காணப்படுகிறது. அதுவே எங்களது கிராமத்தில் அதிபழமைவாய்ந்த கட்டிடம் என்ற பதிவுடன் காட்சி தருகிறது. இவையாவும் போர்க்காலத்தில் புன்னாலைக்கட்டுவன் மக்களில் பலர் புலம்பெயர்ந்து விட்ட நிலையில் இடம்பெற்றன.

தற்போது புன்னாலைக்கட்டுவன் கிராமத்தின் பெருமைமிக்க வரலாற்றை ஆர்வம் காரணமாக எழுத முற்படும் இளம் தலைமுறையினர் பலர் திரிபுபட எழுதுவதைக் காணமுடிகிறது. எவ்வித ஆதாரங்களுமற்ற வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. ஆலய வரலாறு, பாடசாலை வரலாறு, சனசமூக நிலைய வரலாறு இவையாவும் திரிபுபடுத்தப்பட்டுள்ளன.

இலங்கைத்திருநாட்டில் தமிழர்தம் வரலாறு திரிபுபடுத்தி எழுதப்பட்டு வருவதாக வரலாற்று ஆசிரியர்கள் பலர் சுட்டிக்காட்டுகின்றனர். அத்தகைய ஒரு நிலைமை புன்னாலைக்கட்டுவன் கிராமத்தின் வரலாற்றுக்கும் ஏற்படாமல் பாதுகாப்பது எமது தார்மிகக் கடமையாகும்.

இந்நிலையில் நமது எதிர்கால சந்ததியினர் நமது கிராமத்தின் வரலாற்றுப் பெருமைகளை அறிந்துகொள்ள இந்த நூல் வழிவகுக்கும் என நம்புகிறோம். இந்நூலில் உள்ள சில பகுதிகள் எனது அனுபவப் பகிர்வாக அகவயம் சார்ந்து எழுதப்பட்டுள்ளன. நான் புன்னைநகர் மைந்தன் என்ற நிலையில் அது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இந்த நூலில் உள்ள தரவுகளில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் எமக்கு அறியத்தந்தால் எதிர்காலத்தில் அடுத்து வெளிவர இருக்கும் பதிப்புக்களில் அவற்றைத் திருத்தி வெளியிடுவோம்.

நன்றி

**தி. ஞானசேகர ஐயர்**

15.04.2021
'இராஜஸ்தானி'
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | புன்னை நகர் | 01 |
| 2. | ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயம் | 07 |
| 3. | புன்னை நகர் கல்விசார் முயற்சிகள் | 23 |
| 4. | கணேச சனசமூக நிலையம் | 39 |
| 5. | வித்துவசிரோமணி கணேசையர் வாழ்வும் பணிகளும் | 47 |
| 6. | ஊருக்கு உழைத்த உத்தமர்கள் | 58 |
| 7. | சோமையர் சங்கரஜயர் | 81 |
| 8. | ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகள் | 82 |
| 9. | கதிர்காமையர் | 87 |
| 10. | காசிவாசி செந்திநாதையர் | 90 |
| 11. | 'இயலிசைவாரிதி' பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் | 94 |
| 12. | பிரம்மஸ்ரீ கா.அப்பாச்சாமி ஐயர் | 98 |
| 13. | ஈவினை கற்பகவிநாயகர் ஆலயம் | 103 |
| 14. | புன்னாலைக்கட்டுவன் ஐயனார் ஆலயம் | 117 |
| 15. | புன்னாலைக்கட்டுவன் குளத்தடி நாச்சிமார் கோவில் | 127 |
| 16. | கட்டுக்குள கந்தசாமி ஆலயம் | 135 |
| 17. | புன்னைநகர் நூல் ஆசிரியர்கள் | 138 |
| 18. | பின்னிணைப்பு | |
| | ❍ புன்னை நகரின் அழிக்கப்பட்ட வரலாற்றுத் தடயங்கள் | 151 |
| | ❍ நினைவுத் தடங்கள் | 155 |
| | ❍ திரிபுபடுத்தப்பட்ட புன்னைநகர் தொடர்பான வரலாறுகள் | 159 |

உ
சிவமயம்



01

# புன்னை நகர்

**யா**ழ் தீபகற்பத்தின் வரலாற்றிலே புன்னாலைக்கட்டுவன் கிராமம் ஓர் உன்னதமான இடத்தை வகிக்கின்றது. நல்லறிஞர்களும், சிறந்த பண்பாட்டாளர்களும், பக்திமான்களும், புரவலர்களும் தொன்றுதொட்டு வாழும் இந்த நற்பதியை அருளாட்சிசெய்பவர் ஆயாக்கடவைச் சித்திவிநாயகப் பெருமான் ஆவார்.

இற்றைக்கு நானூறு வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் ‘பொன்னாலயம்’ என்ற தலப்பெயருடன் இவ்வூர் விளங்கியது. காலக் கிரமத்தில் ‘புன்னாலை’ எனத் திரிபு அடைந்து புன்னாலைக்கட்டுவன் ஆகியது என்பதற்கான சான்று ‘யாழ்ப்பாண வைபவ கௌமுதி’ (1918) என்ற வரலாற்று நூலிலே காணப்படுகிறது.

மேலும், இலங்கையை ஆட்சி செய்த போர்த்துக்கேயர், டச்சுக்காரர் காலத்திலிருந்தே புன்னாலைக்கட்டுவனில் புகழ்பெற்ற பேரறிஞர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கான சான்றுகளும் மேற்படி நூலில் காணப்படுகின்றன.

புன்னாலைக்கட்டுவன் கிராமத்தை 'புன்னை நகர்' என்று சிறப்புப் பெயர்கொண்டு குறிப்பிடும் வழக்கம் நீண்ட காலமாகவே இருந்துவருகிறது. ஆயாக்கடவை ஐங்கரன்மீது திருவூஞ்சல் பாடிய வித்துவசிரோமணி கணேசையரவர்கள் "புன்னை நகர் மன்னவனே ஆடீரூஞ்சல்" எனப்பாடிப் போந்தார். கணேசையரின் சிறப்பினைப் பாடப் புகுந்த சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர், "புன்னை நகர்ச் சின்னையன் நாதன் மைந்தன்" எனக் குறிப்பிடுகிறார். அதேபோன்று நவாலியூர் க.சோமசுந்தரப்புலவர் அவர்கள் "புன்னைமாநகரிற் பூசுரர் புகழுஞ் சின்னைய நாமச் செம்மல்" எனக் கணேசையரை ஏற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். இவ்வாறு நமது கிராமத்தை 'நகர்' எனப் புலவர்கள் சிறப்பிப்பதற்கு காரணமாக இருப்பது புன்னாலைக்கட்டுவன் கொண்டுள்ள பல்வேறு சிறப்பம்சங்களாகும்.

புன்னைநகர், யாழ்ப்பாணத்திலிருந்து பலாலிக்குச் செல்லும் வீதியின் ஏழாவது மைலில் உள்ளது. இந்த வீதியானது கிராமத்தைக் கிழக்கு மேற்காக ஊடறுக்கின்றது. கிராமத்தின் கேந்திர ஸ்தானமாக விளங்குவது ஆயாக்கடவைப் பிள்ளையார் கோயில். இக்கோயில் முந்நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமை வாய்ந்தது.

சிலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் சோழநாட்டிலிருந்து வந்த காசிப கோத்திர அந்தணர்களும் முதலிவழி மாப்பாணர்வழி வேளாண்குல திலகர்களும் புன்னாலைக்கட்டுவனில் பலபகுதிகளிலும் குடியேறினர். அந்தணர்கள் விசேடமாகப் புன்னாலைக்கட்டுவன் வடக்கில் மாப்பாணர் வளவிலும், தெற்கில் கிரியப்புலம் அயலிலும், இதன் தென்பகுதியிலுள்ள பிராமண வளவிலும், தற்போது பாடசாலை அமைந்திருக்கும் பகுதியின் அயலிலும் குடியேறினார்கள் என அறியமுடிகிறது.

சைவமும் தமிழும் செழித்தோங்கும் பாரம்பரியத்தை உடைய புன்னாலைக்கட்டுவன் கிராமத்து மக்களில் பெரும்பாலானோர் விவசாயிகள்; சைவநெறி நின்று ஒழுகுபவர்கள்; சீலம் நிறைந்தவர்கள்.

எம் ஊரில் எல்லாச் செல்வங்களும் உண்டு என இவ்வூர் மக்கள் இறும்பூதெய்தும் வகையில் சிறப்புடன் விளங்கும் புன்னாலைக்கட்டுவன், சிவந்த நிற மண்ணும் தீஞ்சுவை நீரும்

பொருந்திய வளங்கொண்ட பிரதேசமாகும். இங்கு விளையும் தினை, குரக்கன், இராசவள்ளி, பயறு, வாழை ஆதியாம் பயிர்களும் ஏனைய சிறு விவசாயப் பயிர்களான வெண்காயம், மிளகாய், புகையிலை ஆகியனவும் மரக்கறி வகைப் பயிர்களும் ஊரின் குறைவில்லாச் செல்வத்திற்கு அடித்தளமாக அமைந்துள்ளன.

அயற்கிராமங்களில் கோயில் தோன்றுவதற்கு முன்னரே புன்னாலைக்கட்டுவன் கிராமத்தில் கோயில் தோன்றியது.

இவ்வூரில் பூதராயர், நாச்சிமார், துர்க்கை, ஐயனார், வயிரவர், அண்ணமார், ஞானவயிரவர் ஆதியாம் தெய்வங்களின் திருக்கோயில்கள் நாற்புறத்திலும் அமைந்திருக்க நடுநாயகமாக வீற்றிருப்பவர் ஆயாக்கடவைச் சித்திவிநாயகர்.

அயற்கிராமங்களில் பாடசாலைகள் தோன்றும் முன்னரே எமது கிராமத்தில் தமிழ் *(1875)*, ஆங்கில *(1908)* பாடசாலைகள் தோன்றின.

எங்களூர்ப் பாடசாலையில் கல்வி கற்பதற்கென அயற் கிராமங் களான புத்தூர், சிறுப்பிட்டி, அச்செழு, ஊரெழு, ஏழாலை, மயிலிட்டி, தையிட்டி, வயாவிளான், பலாலி முதலிய ஊர்களிலிருந்து பலர் எமது கிராமத்துக்கு வந்து கல்வி கற்று அறிஞர்களாயினர். எமது கிராமத்தின் கல்விப் பாரம்பரியம் மிகவும் சிறந்ததாக விளங்கியது. இத்தகைய காரணங்களாலும் எமது கிராமம் **“புன்னை நகர்”** என்று பேரறிஞர்களாலும் பெரும் புலவர்களாலும் சிறப்பித்துக் கூறப்பட்டு வருகிறது.

அயற்கிராமங்களில் தபாற்கந்தோர், வைத்தியசாலை போன்றவை ஆரம்பிப்பதற்கு முன்னர் எங்களூரிலேதான் இவை ஆரம்பிக்கப்பட்டன.

அக்காலத்தில் இவ்வூரின் கேந்திரத்தில் தெருவோரமாக கோயில் அருகே ஓர் ஆயம் இருந்தது. பருத்தித்துறை, நெல்லியடி உள்ளிட்ட தூர இடங்களிலிருந்து வியாபார நோக்கமாக எங்களூர் வழியாகத்தான் மக்கள் யாழ்ப்பாணம், சுன்னாகம் ஆகிய இடங்களுக்குச் செல்வது வழக்கம். இளவாலை

முதலான மேற்குக் கிராமங்களிலிருந்து வன்னிப்பகுதிக்குச் செல்பவர்களும் இவ்வழியாகத்தான் செல்வார்கள். இவர்கள் யாபேரும் எங்களூரிலுள்ள சித்திவிநாயகர் ஆலயச்சாரலில் மர நிழல்களில் தங்கிச் செல்வார்கள். இருட்டிவிட்டால் இவர்கள் தங்குவதற்கும் இங்கு வசதிகள் இருந்தன. அருகே இருக்கும் ஆயத்தில் தமது வண்டில் மாடுகளைக் கட்டிவைப்பார்கள். குதிரை வண்டில்களில் வருபவர்களும் குதிரைகளைக் கட்டி வைப்பதற்கு வசதியான இடங்கள் இருந்தன. கால்நடைகளை ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்கு நடத்திச் செல்வோரும் இந்த ஆயத்தில் அவற்றைத் தங்கவைத்து இளைப்பாறச் செய்து தமது பயணத்தைத் தொடர்வர். இவ்வாறு இளைப்பாறிச் செல்வோரும் கால்நடைகளைத் தங்கவைத்துச் செல்லும் வியாபாரிகளும் ஆயநிதி செலுத்திச் சென்றதாகக் கர்ண பரம்பரைக் கதையுண்டு. இதன் காரணமாக இந்த இடத்திற்கு **'ஆயர்கடவை'** என்ற பெயர் வழங்கலாயிற்று. பின்னர் இது 'ஆயாக்கடவை' எனத் திரிவு பெறலாயிற்று. இந்த ஆயத்தின் அருகே ஒரு குளமும் இருந்தது. இது ஆயாக்குளம் எனப் பெயர்பெற்றிருந்தது.

புன்னாலைக்கட்டுவன் இருபெரும் புலமையாளர்களை தமிழ்கூறு நல்லுலகிற்குத் தந்துள்ளது. ஒருவர் வித்துவசிரோமணி சி. கணேசையர். மற்றவர் காசிவாசி செந்திநாத ஐயர்.

கணேசையர் புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

தமிழ்ப்பேரறிஞர் காசிவாசி செந்திநாத ஐயரின் தாயார் கௌரியம்மா அவர்கள் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் கணேசையரின் தந்தையாரது சகோதரியாவார்.

மேலும், பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாக விளங்கும் கீரிமலை நகுலேஸ்வரத்தைப்பற்றி 1895ஆம் ஆண்டளவில் 'நகுலகிரிப் புராணம்' பாடியவர் புன்னாலைக்கட்டுவன் கவிஞர் சிகாமணி கா. அப்பாச்சாமி ஐயர் அவர்கள். இவரது தாயார் பொன்னம்மா,

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் கணேசையரின் தந்தையாரது சகோதரி ஆவார். இவரது மைத்துனரே வித்துவசிரோமணி கணேசைய்யர் ஆவர். இவர் இயற்றிய “நகுலகிரிப் புராணமே” புன்னைநகர் அறிஞர்களின் நூலாக்க வரிசையில் முதலாவது நூலாக அறிய முடிகிறது.

இத்தகைய பெரும் அறிஞர்கள் தமது இளமைக்காலக் கல்வியைப் புன்னாலைக்கட்டுவனில் முதன்முதலில் பாடசாலையை அமைத்த ச.கதிர்காமஐயரிடம் பெற்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

❑


**‘புன்னாலைக்கட்டுவன்’ – பெயர் தொடர்பான விளக்கம்.**

புன்னாலைக்கட்டுவன் (வலி-வ) - புன்னாலை என்பதன் பொருள் ‘ஆலை’ என்னுந் தலைப்பெயரின்கீழ்ச் சொல்லப்பட்டுளது. ஆங்குக் குறித்த ‘புன்னாலை’ என்பதைப் ‘பொன்னாலயம்’ என்பதின் சிதைவெனப் புகலும் பேரறிவாளர், இப் புன்னாலைக்கும் அவ்வண்ணம் சுவர்ணார்த்தனு செய்தல் ஆவசியகமாகும்.

யாழ்ப்பாண வைபவ கௌமுதி 1918, க. வேலுப்பிள்ளை, ப. 68

எங்கள் ஆலயம் ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் என்னும் பெயருடன் அமைந்துள்ளது. இவ்வாலயம் அமைந்துள்ள இடம் முன்னர் ஆயர்கள் கடவையாக இருந்தது. கால் நடைகளை மேய்த்துக்கட்டும் இடமாக இது அமைந்ததற்குச் சான்றாக ஆலயத்துள் அமைந்த தீர்த்தக்கிணறு அதன் அயலில் அமைந்துள்ள முன்னர் திருமஞ்சனக் கிணறாக உபயோகித்த கிணறு தற்போது ஆலயம் செல்பவர்கள் கால், கை அலம்பிச் செல்வதற்கு உபயோகிக்கப்படும் கிணறுகள் யாவும் தண்ணீர் மட்டத்திற்கு அப்பாலும் மண்கண்டமாகவேயுள்ளது. இது ஓர் குளம் இருந்த இடமாக இருந்ததற்கான சான்றாகும். இம்மாதிரி இயல்புகளைக்கொண்டு ஒரு நூற்றாண்டு காலமாக ஆத்மீக ஒளியை அள்ளிச் சொரியும் தலமாக மிளிர்கின்றது.

- அ. முதலித்தம்பி, ஆசிரியர்.
ஆயாக்கடவை சித்திவிநாயகர்
இராஜகோபுர புனருத்தாரண கும்பாபிஷேக மலர், (1999) - பக். 35




**புன்னைநகர் வரைபடம்**

# 02

# ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயம்

**ஆ**யாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலயத் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தவர்கள் சோழவள நாட்டிலிருந்து வந்து புன்னைநகரில் குடியேறிய அந்தணர்கள் ஆவர். ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சோழநாட்டிலிருந்து வந்த காசிபகோத்திர அந்தண சிரேட்டர்களும் முதலிவழி மாப்பாணர்வழி வேளாண்குல திலகர்களும் புன்னாலைக்கட்டுவனில் பலபகுதிகளில் குடியேறினர். அந்தணர்கள் விசேடமாகப் புன்னாலைக்கட்டுவன் வடக்கின் மாப்பாணர்வளவிலும் தெற்கில் கிரியப்புலம் அயலிலும் இதன் தென்பகுதியிலுள்ள பிராமணவளவிலும் தற்போது பாடசாலை அமைந்துள்ள பகுதியின் அயலிலும் குடியமர்ந்தனர்.

யாழ்ப்பாண மன்னர் காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த போர்த்துக்கேயர் ஆட்சியின் ஆரம்ப காலத்திலும் தமிழகத்திலிருந்து மக்கள் வந்து யாழ்ப்பாணத்தில் குடியேறினார்கள் என்பதை ஈழத்தில் எழுந்த வரலாற்று இலக்கியங்கள் சான்றுபகர்கின்றன. குறிப்பாக, யாழ்ப்பாண மன்னர் காலத்தில் முத்துராசக்கவிராயர் எழுதிய கைலாயமாலை என்னும் நூலில் இக்குடியேற்ற விபரங்கள் பட்டியலிட்டு இருப்பதைக் காணலாம்.

அந்தணர்களின் குடியிருப்புக்களுக்கு அண்மித்தாக ஆயாக்குளம் அமைந்திருந்தது. ஆயாக்குளத்தைச் சுற்றி நான்மருங்கிலும்

வளர்ந்திருந்த தருப்பைப் புற்களை கொய்வதற்குச் சென்ற அந்தணர்கள், குளத்தின் மேற்குக் கரையில் கருங்கல்லாலான ஒரு விநாயகர் விக்கிரகம் இருப்பதைக் கண்டனர். குமாரசாமிஐயர் சோமையர் என்பார் அந்த விக்கிரகத்தை அருகே இருந்த ஆலமரத்தடியில் ஸ்தாபித்து தினசரி பூசையும் செய்து வந்தார். விசேட நாட்களில் ஊர் மக்கள் இந்த ஆலயத்திற்கு வந்து பொங்கிப் படைத்து வழிபாடாற்றினர். இவ்வாறான வரலாற்றுக் குறிப்புகள் டாக்டர் நன்னித்தம்பி (1917 - 2008) எழுதிய ஆயாக்கடவைச் சரணாகதி மலர் என்னும் நூலிலே காணப்படுகின்றன. இதுவே, இவ்வாலய வரலாற்றைக் கூறும் முதலாவது நூலாக அமைந்துள்ளது.


ஆலமரத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட விநாயகருக்கு காலக் கிரமத்தில் கோயில் ஒன்று சிறியவடிவிலாவது அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

யாழ்ப்பாண கச்சேரியிலுள்ள பதிவேட்டின் 276ஆம் பக்கப் பிரகாரம் 1710ஆம் ஆண்டளவில் இந்த ஆலயம் ஆரம்பிக்கப் பட்டதாக பதியப்பட்டிருக்கிறது. இந்தப் பதிவில் சோமையர் சங்கரஐயர், சங்கரஐயர் கதிர்காமஐயர் ஆகியோரது பெயர்கள் காணப்படுகின்றன. மண்சுவரால் எழுப்பப்பட்ட கோயில் என்ற பதிவும் உள்ளது.

குமாரசாமி ஐயர், சோமையருக்குப் பின் அவரது மகனான கதிர்காமையர் அந்த ஆலயத்தில் பூசை செய்துவந்தார். அவரைத் தொடர்ந்து அவரது மகனான சோமையர் அங்கு பூசை செய்தார். சோமையர் வாழ்ந்த காலம் அண்ணளவாக 1775 - 1830 எனக் கணக்கிட முடிகிறது. இவரது காலப்பகுதியிலே கோயிலின் வடக்கே அரைமைல் தூரத்தில் ஆயாக்கடவை பிள்ளையார் கோயிலுக்கு தர்மசாதனமாக 1808ஆம் ஆண்டில் ஒரு பக்தர் கதிர்காமையர் சோமையரின் பெயருக்கு காணிவழங்கிய உறுதி இதனை உறுதிப்படுத்துவதாக அமைகிறது. எனவே இவரது காலப்பகுதியிலே கோயில் பிரபல்யத்துடன் விளங்கியிருக்கிறது என்பதும், கோயிலின் உருத்துரிமை சோமையரிடம் இருந்துள்ளது என்பதும் புலனாகிறது. தற்போதும் மேற்குறிப்பிட்டகாணி

கோவிலுக்கு உரித்துடையதாக இருக்கிறது.

காலப்போக்கில் இந்த ஆயாக் குளம் தூர்ந்து போய்விட்டது. குளம் தூர்ந்த இடத்தில் சதுப்பு நிலத்தில் கோயிலை விஸ்தரிக்க முடியாத நிலையில், கோயிலின் அமைவிடத்தை சற்று கிழக்கு நோக்கி அமைக்க வேண்டியிருந்தது.




கோயில் பற்றிய முதலாவது வரலாற்று நூல், 1990
எழுதியவர்:
டாக்டர் இ. நன்னித்தம்பி

மேற்குறிப்பிட்ட அந்தணர்கள் வழிவந்த சோமையர் சங்கரஐயர் என்பார் ஆயாக்கடவையில் குளத்தின் கிழக்கு எல்லையைத் தாண்டிய பகுதியில் தாங்கள் வாழ்ந்த தனது தந்தையின் பெயரிலிருந்த காணியின் தோம்புப் பதிவை தனது பெயரில் (1837) உறுதியாக (Title Deed) மாற்றி, அக்காணியில் மண்ணாலான கோயில் கட்டிடத்தைப் புதிதாக அமைத்தார். இதனை அவரது பெயரிலுள்ள உறுதி, மற்றும் 1910ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 15ந் திகதி சேவையர் பிறைசூடி முடித்த ஆயாக்கடவை கோயில் காணியின் அளவுப்படம் ஆகியவற்றிலிருந்தும் ஏனைய வரலாற்று ஆதாரங்களிலிருந்தும் அறிய முடிகிறது.

1899 - 1900 விகாரி வருடத்தில் சங்கர ஐயர் சோமையரின் மகன் பொன்னுச்சாமி ஐயர் அவர்களால் புன்னாலைக்கட்டுவன் உயர்குடித் தோன்றல்களான வேளாண் மக்களின் ஒத்துழைப்புடன் மண் கோயில் இருந்த அதே இடத்தில் கருங்கல்லாலும் வெள்ளைக் கல்லாலும் அமைந்த ஆலயத்திற்கு அத்திபாரம் இடப்பட்டு தற்போதுள்ள கோயில் (1900 - 1920) கட்டியெழுப்பப்பட்டது. 1920ஆம் ஆண்டு ரௌத்திர வருடம் சித்திரை மாதமும் அத்த நட்சத்திரமும் கூடிய சுப புண்ணியவேளையில் முதன் முதலில்

## காலமுங் தோற்றமும் :

ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சோழநாட்டில் இருந்து வந்த காசிபகோத்திர அந்தண சிரேட்டர்களும், முதலிவழி மாப்பாணர்வழி வேளாண்குல திலகர்களும் புன்னாலைக்கட்டுவனில் பல பகுதிகளிலும் குடியேறினர். அந்தணர்கள், விசேடமாகப் புன்னாலைக்கட்டுவன் வடக்கில் மாப்பாணர் வளவிலும், தெற்கில் கிரியப்புலம் அயலிலும், இதன் தென்பகுதியில் உள்ள பிராமண வளவிலும், தற்போது பாடசாலை அமைந்துள்ள பகுதியின் அயலிலும் குடியமர்ந்தனர்.

குடியிருப்பாளர்களான அந்தணர்களின் இருப்பிடங்களுக்குச் சமீபத்திலேதான் ஆயாக்குளம் இருந்தது. குளத்தின் நான்மருங்கிலும் தருப்பைப்புல் நிறைய இருந்தது. அந்தணர்கள் அங்கு சென்று தருப்பை கொய்வது வழக்கம்.

குளத்தின் மேற்குத்திசையில் கருங்கல்லாலான விநாயகர் விக்கிரகம் ஒன்று இருப்பதைக் கண்டார்கள் அந்தணர்கள். அந்தப் பிள்ளையார் விக்கிரகத்தை அங்கேயிருந்த ஆலமரத்தடியில் குமாரசாமி ஐயர் சோமையர் ஸ்தாபித்துத் தினசரி பூசையையும் ஆரம்பித்தனர். விசேட நாட்களில் ஊர்மக்கள் இந்த ஆலயத்துக்குச் சென்று பொங்கிப் படைத்துப் பூசையும் செய்தனர் என்று பலரும் கூறுவர்.

நாளடைவில் ஆயாக்குளம் தூர்ந்து போயிற்று. அப்பொழுது சோழநாட்டில் இருந்து வந்த குமாரசாமிஐயர் வழிவந்த க. சோமையர் சங்கரையர் மண்ணாலாகிய கோயிலை அமைத்தார்.

இக் கோயில் கிழக்கு நோக்கிய வண்ணம் அமைக்கப்பட்டு ஓலையால் வேயப்பெற்றுப் பூசைகளும் ஒழுங்காக நடக்கத் தொடங்கின. கச்சேரியில் உள்ள பதிவேட்டின் 276ஆம் பக்கப் பிரகாரம் 1710ஆம் ஆண்டில் இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டதாகப் பதியப்பட்டுள்ளது. பின்னர் ஆலயம் மேலும் கிழக்கு நோக்கி விஸ்தரிக்கப்பட்டது. புராணபடனமும் அக்காலத்திலே ஆரம்பமாயிற்று.

## 1900 — 1920 :

இக்கால எல்லையில் சங்கரஐயர் பரம்பரையில் வந்தவரான பொன்னுச்சாமிஐயர் (இளையதம்பிஐயர்) அவர்களால் புன்னாலைக் கட்டுவன் உயர்குடித் தோன்றல்களான வேளாண்குடி மக்களின் சீரிய ஒத்துழைப்புடன் புதிய ஆலயம் அமைப்பதற்கான அஸ்திபாரம் விகாரி வருடத்தில் இடப்பட்டது. பழைய பிள்ளையார் இருந்த இடம் சற்றும் நூல் பிசகாமல் புதிய கர்ப்பக்கிருகம் கருங்கல்லுப் பதிக்கப் பட்டதுடன் ஏனைய பகுதிகள் வெள்ளைக்கல் வேலையாக நடைபெற்றன. ஐயரவர்களது இப்பெரு முயற்சிக்கு ஊன்றுகோலாய் உதவியவர்கள் புன்னாலைக்கட்டுவனில் வசித்த சைவவேளாண்குடிமக்களும், வயாவிளான், மயிலிட்டி, பன்னாலை, இளவாலை, மல்லாகம், சுன்னாகம் முதலான இடங்களில் வசித்து வந்த புன்னாலைக்கட்டுவன் தொடர்பு உள்ளவர்களும் என்பதைக் கூறுதல் அவசியமாகும். ஐயரவர்களது பணிகளுக்குத் தோள்கொடுத்து உதவியவர் திரு. நா. அகிலேசர் என்பது நினைவுகூரத்தக்கது.

**ஆயாக்கடவை சித்திவிநாயகர் சரணாகதி மலர், 1990**
**எழுதியவர்: டாக்டர் இ. நன்னித்தம்பி**

கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து அலங்காரத் திருவிழா உற்சவங்களும் ஆரம்பித்தன.

பொன்னுச்சாமி ஐயர் அவர்களது இப்பெரும் முயற்சிக்கு பேருதவி புரிந்தவர்கள் புன்னாலைக்கட்டுவனில் வசித்து வந்த சைவவேளாண் குடிமக்களும் வயாவிளான், மயிலிட்டி, பன்னாலை, இளவாலை, மல்லாகம், சுன்னாகம் முதலிய இடங்களில் வசித்து வந்த புன்னாலைக்கட்டுவன் தொடர்புகொண்டோரும் ஆவர். குறிப்பாக, ஐயரது முயற்சிகளுக்கு தோள்கொடுத்தவர்கள் திரு.ந.அகிலேசர் என அறிய முடிகிறது. அதே போன்று திருமலை சின்னப்பா சிவகாமி என்பாரும் பேருதவி புரிந்துள்ளார்.



ஆயாக்கடவை சித்திவிநாயகர்

## ஆயாக்கடவை ஆலய உருவாக்கத்தில் ஊர்மக்கள் பங்குகொண்ட நிர்மாணப் பணிகள்

பொன்னுச்சாமி ஐயரின் காலத்தின் பின்னர் அந்தணர்களின் அனுசரணையுடன் கோயில் கட்டிட நிர்மாணத்தில் பெரும் பங்காற்றியவர்களாக ஊர்மக்களே காணப்படுகின்றனர்.

கோயில் மேலும் கிழக்கு நோக்கி விஸ்தரிக்கப்பட்டது.

விநாயக அடியார்கள் காலத்திற்குக் காலம் தமது பிரார்த்தனைகளை நிறைவேற்றும் பொருட்டு ஆலய கட்டிடத் திருப்பணிகளிலும், பரிவாரத் தெய்வங்களுக்குக் கோயில் அமைப்பதிலும் ஈடுபட்டனர். இக்காலப் பகுதியில் உள்வீதியில் சுற்றுக்கொட்டகைகள், மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபனமண்டபம் என்பன நிறைவாக அமைக்கப்பட்டன. கோவிலின் ஈசான மூலையிலுள்ள காணி, 1910ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருமதி.சின்னப்பிள்ளை இளையதம்பிக்கும் பங்காளருக்கும் சொந்தமாக இருந்தது.

அக்காணியில் இருந்த பனைகள் சுவாமி வலம் வருவதற்குத் தடையாக இருந்த காரணத்தினால் அவர்களது வழிவந்தோர் தமது காணியின் ஒரு பகுதியை கோயில் காணியுடன் இணைத்து விரிவாக்கம் செய்ய உதவினர். இச்செயற்பாடானது வீதி விஸ்தீரணத்திற்கும் வசந்தமண்டபம், யாகசாலை, வைரவர் ஆலயம் ஆகியவற்றின் பின்புறங்கள் விஸ்தீரணமாக அமைவதற்கும் வழி வகுத்தன. இவ்வாறாக ஊர்மக்கள் பலரும் கோயில் வளர்ச்சியில் பெரும்பங்காற்றினார். இத்தகைய திருப்பணி வேலைகள் பல இடம்பெற திரு.கே.சி.பி ஐயர் அவர்களும், காரணராக இருந்தார். இராசகோபுரம், தேர்த்திருப்பணி போன்ற முக்கிய திருப்பணிகள் சிறப்புற அமைய உந்துசக்தியாக இருந்தவர் கே.சி.பி ஐயர் அவர்களே.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு வைத்திய கலாநிதி நாகநாதர் முருகேசு (மலேசியா) அவர்களின் துணைவியார் விசாலாட்சி அம்மையார் அவர்கள் ஆயாக்கடவை சித்திவிநாயகருக்கு முதலாவது வாகனமாக ஒற்றைக் குதிரை வாகனம் உபயமாக அளித்தார்.

காலப்போக்கில் பக்தர்கள் பலர் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்யும் பொருட்டு விக்கிரகங்கள், வாகனங்கள் முதலியவற்றைச் செய்து கொடுத்தனர்; நன்கொடை ஈந்து பெரிதும் உதவினர். 1961 ஆம் ஆண்டு ஆனி மாதம் மிருகசீரிட நட்சத்திரத்தில் மீண்டும் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

காலப்போக்கில் ஆகம விதிப்படி சகல மண்டபங்களும் நிறைவாக நிர்மாணிக்கப்பட்டன. பரிவாரத் தெய்வங்களுக்கு கோயில்கள் எழுந்தன. உள்வீதியில் சுற்றுக்கொட்டகைகளும் அமைக்கப்பெற்றன. 24.06.91இல் மூன்றாவது தடவையாக மகா கும்பாபிஷேகம் நடந்தேறியது.

ஆயாக்கடவை ஐங்கரன் கோயிலின் உருவாக்கத்திலிருந்து இற்றைவரையான 300 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் கோயிலின் உருவாக்கத்திற்குக் காரணமாக விளங்கிய அந்தணர் களின் வழித்தோன்றல்களே கோயிலின் நித்திய நைமித்திய பூசைகளைச் செய்து வருகின்றனர்.

**ஆயாக்கடவை ஆலய உருவாக்கத்தில் பங்குகொண்ட அந்தணர்கள்**
**(ஆரம்பகாலம்)**

குமாரசாமி ஐயர்
↓
சோமையர்
⋮
கதிர்காமையர்
↓
சோமையர்
↓
சங்கர ஐயர்

| சோமையர் | கதிர்காமையர் | சின்னையர் |
|---|---|---|
| ↓ | ↓ | ↓ |
| குமாரசாமி ஐயர் | செல்லையர் | கணேசையர் |
| ↓ | ↓ | |
| பொன்னுச்சாமி ஐயர் | கே.சி.பி. ஐயர் | |
| ↓ | | |
| சிவானந்த ஐயர் | | |

## தேர்த்திருப்பணி

*இலங்கையிலுள்ள சிறந்த சித்திரத் தேர்களில் ஒன்றாக ஆயாக்கடவை சித்திரத்தேர் அமைந்துள்ளது. ஊர் மக்கள் உவந்தளித்த பெருநிதியோடு தமது செல்வத்தையும் செலவழித்து இச்சித்திரத் தேரை நிர்மாணிப்பதற்கு பெரும் பங்காற்றியவர் சிவதர்மச் செல்வர் ஸ்ரீமான் இராசரத்தினம் அவர்கள். இத்தேரின் வேலைகள் 18.06.1970இல் நிறைவு பெற்றன. சண்டேஸ்வரப் பெருமானின் சிறிய சித்திரத்தேரும் இவரது உபயமாகும். தேர்த்திருப்பணியில் முன்னின்று உழைத்த இராசரத்தினம் அவர்களே*


உ
சிவமயம்
புன்னலைக்கட்டுவன் – ஆயாக்கடவைச்
சித்திவிநாயகர் ஆலயத்
தேர்த் திருமலர்

சித்தி யுறுவார் தெளியுங் கலையுறுவார்
பத்தி யுறுவார் பயனுறுவார் — அத்திமுக
முன்னவனை யைங்கரனை முத்திதரும் புன்னைநகர்
மன்னவனை முன்போற்று வார்.
18-6-70

**தேர்த் திருமலர், 18.06.1970**
**தொகுப்பு: சி. சுவாமிநாத ஐயர்**
**(சி. சோமசுந்தர சர்மா)**

மணிக்கூண்டுக் கோபுரத்தையும் அமைத்துக் கொடுத்தார். அதற்குரிய நவகண்டாமணியை தனது புதல்வன் திரு.இ.வரதராசன் மூலம் இங்கிலாந்திலிருந்து தருவித்துக் கொடுத்ததும் இவரே. இந்த நவகண்டாமணி 24.04.1980 அன்று மணிக்கூண்டுக் கோபுரத்தில் ஏற்றப்பட்டது. கோவிலின் உள்வீதியில் அமைந்துள்ள அலங்காரத் தூண்கள் மற்றும் நிலத்திற்கு மாபிள் பதிக்கும் திருப்பணியையும் இவரே மேற்கொண்டார். ஆலயத்திருப்பணிகள் யாவற்றிற்கும் ஒத்துழைப்பு வழங்கிய திரு.இராசரத்தினம் அவர்கள் தேர்த்திருவிழா, வருடப்பிறப்பு உற்சவம் ஆகியவற்றின் உபயகாரர் ஆவார். நம்நாட்டு கலைஞர்களையும், தமிழகக் கலைஞர்களையும் ஆலயத்திற்கு வரவழைத்து இசை நிகழ்ச்சிகளை நடாத்தி கலைஞர்களையும் கௌரவிப்பதையும் பெரும்பணியாகச் சிறப்பித்தவர் அவர். சீர்காழி கோவிந்தராஜன், மதுரை சோமு, கிருபானந்தவாரியார் போன்றவர்கள் இந்த ஆலயத்தின் நிகழ்வுகளில் இசைமழை பொழிந்துள்ளனர்.

**இராஜகோபுரம்**

ஆலய அமைப்பில் இராஜகோபுரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கோபுரத்தின் அமைப்பும் எரியும் சுடர்போன்று இருக்கும். இறைவனின் வடிவமும் அத்தகையதே. “சோதியே சுடரே சூழொளி விளக்கே, தூண்டு சுடர் அணைய சோதி” என்றும் கற்பனைகடந்த சோதி என்றும், பிரம்மமாய் நின்ற சோதிப்பிளம்பும் என்றும் திருமுறைகள், புராணங்கள் இறைவனைப் போற்றியுள்ளன.




இராஜகோபுர
மகா கும்பாபிஷேக மலர், 1999.
வெளியீடு: இ. விக்கினராசா

இத்தகைய தெய்வீகச் சிறப்பு வாய்ந்த இராஜகோபுரத்தை விநாயகப்

பெருமானின் திருவருள் பாலிக்க தனது பெருஞ்செல்வத்தைச் செலவு செய்து அமைத்துக் கொடுத்தவர் ஸ்ரீமான் இ.விக்கினராசா ஆவார். இந்திய சிற்பிகளின் நேர்ப்பார்வையில் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பஞ்சதள இராஜகோபுரத்தின் குடமுழுக்கு விழா 30.04.1980இல் நடைபெற்றது. கோயிலின் வடபுறத்தில் மகேஸ்வர பூசைக்குரிய மிகப்பெரிய விக்னேஸ்வர மணிமண்டபத்தை அமைத்துக்கொடுத்தவரும் அவரே. இந்த மண்டபத்தின் திறப்பு விழா 24.06.1972 அன்று இடம்பெற்றது. திறப்பு விழா மலர் ஒன்றும் இ.விக்னராசா அவர்களால் வெளியிடப்பட்டது.

## தீர்த்தக்கேணி

'மானஸரோவர்' என்ற திருநாமம் பூண்ட தீர்த்தக் கேணியின் 'கங்கைப்பிரதிஷ்டை' எனப்படும் தீர்த்தப் பெருவிழா 15-03-2013 அன்று பங்குனிச் சதுர்த்தித் தினத்தில் நடைபெற்றது.

இதற்கு முன்னர் ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் தீர்த்தமாடிய வரலாற்றினை எடுத்து நோக்கினால், முதலில் கோயில் சூழலில் ஆயாக்குளம் என்ற பெயரில் ஒரு குளம் இருந்ததாகவும் பின்னர் அக்குளம் தூர்ந்துபோக அந்த இடத்தில் திருமஞ்சனக்கிணறு தோண்டப்பட்டது என்பதும் வரலாறு. 1800ஆம் ஆண்டளவில்



ஆயாக்கடவை ஐங்கரன் திருக்கேணி 'மானஸரோவர்'

(தற்போது கணேசையர் சிலை இருக்கும் இடத்தில்). கேணியொன்று அமைக்கப்பெற்று அக்கேணியும் தூர்ந்து போயிற்று.

புதிய தீர்த்தக்கேணி நல்லதம்பி பரமேஸ்வரன் அவர்களதும் அவரது சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் ஆகியோரதும் உபயமாக அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் போற்றுதற்குரிய பெரும் திருப்பணியினைச் செய்துள்ளார்கள்.




ஆயாக்கடவையான் பதிகங்கள்,
தொகுப்பாசிரியர் : ம. துஷ்யந்தன்
(2007)

### ஆயாக்கடவையான் பதிகங்கள்

சித்திவிநாயகர்பால் பக்திபூண்ட அடியார்கள் காலத்துக்குக் காலம் பதிகங்கள் பாடித் துதித்தேத்தி வந்துள்ளனர். புன்னாலைக் கட்டுவனிலே பிறந்து வளர்ந்து ஊருக்குப் பெருமை சேர்த்த தவமுனிவரான வித்துவசிரோமணி பிரம்மஶ்ரீ சி.கணேசையர் அவர்கள் ஆயாக்கடவை ஐங்கரனுக்குத் திருவூஞ்சல் புனைந்துள்ளார்.

முதுபெரும் தமிழறிஞர் வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன், 'இயலிசை வாரிதி', 'மஹா வித்துவான்' ந.வீரமணி ஐயர், திருச்செந்தூர் சந்நிதி வித்துவான் கே.வி. ஈஸ்வரபாகவதர், திருப்புகழ் சு.திருவாரியார், குரும்பசிட்டியூர் கவிஞர் கந்தவனம், குரும்பசிட்டியூர் திரு.ஆ.சி.நடராஜா, மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த பண்டிதர் இ.நமசிவாயம் ஆகியோரும் ஆயாக்கடவை ஐங்கரனைத் துதித்துப் பதிகங்கள் பாடியுள்ளனர்.

இப்பதிகங்கள் யாவற்றையும் தொகுத்து 'ஆயாக்கடவையான் பதிகங்கள்' என்ற பெயரில் திரு. மா. துஷ்யந்தன் நூலாக்கியுள்ளார். இந்நூலுக்கான நிதி உதவியை வழங்கியவர் இ. ஶ்ரீ பாஸ்கரன் ஆவார்.

**1. விநாயகர் காரியசித்தி மாலை**

**2. வரந்தரும் சித்தி விநாயகர்**

மேற்குறிப்பிட்ட இருநூல்களும் நாகநாதர் கிருஷ்ணதாசன் அவர்களால் வெளியிடப்பட்டது.

❏

உ

*சிவமயம்.*

## *புன்னாலைக்கட்டுவன், ஆயாக்கடவை*

# ஐங்கரனூஞ்சல்

**வித்துவசிரோமணி**

**பிரம்மஸ்ரீ சி. கணேசையரவர்கள் பாடியது**

### காப்பு
### வெண்பா

*சித்தி யுறுவார் தெளியுங் கலையுறுவார்*
*பத்தி யுறுவார் பயனுறுவார் - அத்திமுக*
*முன்னவனை யைங்கரனை முத்திதரும் புன்னைநகர்*
*மன்னவனை முன்போற்று வார்*

### நூல்

*சீர்பூத்த பூசுரர்வம் மிசமு மேலாஞ்*
*செல்வமிகும் வேளாளர் குலமு மோங்கும்*
*பேர்பூத்த புன்னைமா நகரந்தன்னிற்*
*பெருமைகொளா யாக்கடவைப் பதியின் மேவும்*
*நீர்பூத்த செஞ்சடையு மூன்று கண்ணும்*
*நிலவுமொரு கோடுமிருசெவியுங் கொண்ட*
*கார்பூத்த கரிமுகவன் பாதம் போற்றிக்*
*கருணையுட னவற்கூஞ்ச லோது வாமே*

*மாமேவு பவளத்தாற் கால்க ளாக்கி*
*மதிவயிர ரத்தினத்தால் விட்டம் போக்கித்*
*தூமேவு தங்கமணிப் பலகை தேக்கிக்*
*சுடர்மலியுந் தரளத்தாற் கயிறு வீக்கிப்*
*பூமேவு சித்திரங்கள் பொலியச் செய்த*
*புட்பகநேர் தருமூஞ்ச லினிது மேவிக்*
*காமேவு புன்னைமா நகரி லாயாக்*
*கடவையுறு மைங்கரரே யாடீ ரூஞ்சல்*

*சந்திரனுஞ் சூரியனுங் குடைக டாங்கச்*
*சதாகதிவெண் கவரிமிளிர் கரத்தில் வாங்க*
*முந்துசல பதிகொண்ட வட்டந் தூங்க*
*முன்னுதிறன் மறலிகொளும் வாளு மோங்க*

அந்தரர்கள் சொரிதருபூ மாரி தேங்க
அணிமுரச மாதியவாச் சியங்க ளேங்க
கந்திகள்சூள் புன்னைமா நகரி லாயாக்
கடவையுறு மைங்கரரே யாடீ ரூஞ்சல்

மண்ணுலகு முதலான வுலகம் யாவு
மற்றுனையே முதற்பூசை செய்து போற்ற
எண்ணுமவர் கருமமெலா மினிதி னாங்கே
இடரின்றி முற்றுறுமா றியற்றுந் தேவே
உண்ணிலவு மொருபொருளே யுலக மூர்த்தீ
ஓங்கார வடிவாகி யுற்ற சோதீ
கண்ணியஞ்சேர் புன்னைமா நகரி லாயாக்
கடவைறு மைங்கரரே யாடீ ரூஞ்சல்.

குலையோங்கு தெங்குனுயர் காலாற் சூழ்ந்து
கொடியேறு செங்காந்தண் மலர்க்கை கூப்பி
இலையோங்கு பூங்கொம்பாற் றலைவ ணங்கி
இசைமருவுஞ் சுரும்பினின நாவாற் பாடி
நிலையோங்கு கருவிளையி னலர்க்க ணோக்கி
நிதஞ்சோலை வழிபடுவ போல மேவுங்
கலையோங்கு புன்னைமா நகரி லாயாக்
கடவையுறு மைங்கரரே யாடீ ரூஞ்சல்

பெருமைதிகழ் நாதமுத லான வாடப்
பேசலுறுங் காலமுத லாக மாயை
வருவனவாந் தத்துவத்தின் வகையு மாட
வளமருவும் பிரகிருதி தானு மாட
உருவுபெறும் பிரணவமாம் பீட மேறி
யுகந்தினிதங் காடுகின்ற வொருமைத் தேவே
கருதலுறும் புன்னைமா நகரி லாயாக்
கடவையுறு மைங்கரரே யாடீ ரூஞ்சல்

நிதிமருவு குழையினொடு செவியு மாட
நிலவுதரும் பிறையினொடு சடையு மாட
மதிபுயமும் வலையமொடு மருவி யாட
மணிபொலியும் மதாணியுடன் மார்பு மாட
நதிபெருகும் மதமுடைய கரமு மாட
நறைமருவுங் கமலநிக ரடியு மாட
கதலிமிகும் புன்னைமா நகரி லாயாக்

கடவையுறு மைங்கரரே யாடீ ரூஞ்சல்
கொற்றவயி லத்தனுக்கு முன்வந் தோனே
குஞ்சிதபா தத்தனுக்கு முன் வந்தோனே
உற்றவறக் கண்ணாருக் கருள்செய் வோனே
ஓதியுனைக் கண்ணாருக் கருள்செய் வோனே
பற்றலனாங் கயமுகனைச் செற்ற மைந்தா
பண்ணமையும் மொழியுமையாள் பெற்ற மைந்தா
கற்றவர்சேர் புன்னைமா நகரி லாயாக்
கடவையுறு மைங்கரரே யாடீ ரூஞ்சல்.

அருளூறுமைங் கரத்தாரே யாடீ ரூஞ்சல
அறையுமொரக் கரத்தாரே யாடீ ரூஞ்சல்
தெருளினர்நம் பிறையவரே யாடீ ரூஞ்சல்
திகழ்சடையிற் பிறையவரே யாடீ ரூஞ்சல்
மருளினருக் கண்ணாரே யாடீ ரூஞ்சல்
மருவியமுக் கண்ணாரே யாடீ ரூஞ்சல்
கருளிலர்சேர் புன்னைமா நகரி லாயாக்
கடவையுறு மைங்கரரே யாடீ ரூஞ்சல்

## வாழி

நவிலுமிசை மறையவர்வம் மிசமும் வாழி
நண்ணுமுடி மன்னர்கள்பின் னோர்கள் வாழி
தவமுமுயர் வேள்வியுநல் லறமும் வாழி
தகைமைபெறு மானினமும் முகிலும் வாழி
சிவசமய நெறியுனொடு நீறும் வாழி
செழுமறையா றங்கமொடு பிறவும் வாழி
கவிஞருறை புன்னைமா நகரி லாயாக்
கடவையுறு மைங்கரரும் வாழி வாழி.

## எச்சரீக்கை

சிவனார்தரு கயமாமுகத் தேவே யெச்சரீக்கை
தேனார்மொழி யுமையாடருஞ் செல்வா வெச்சரீக்கை

தவமேவிய முனிவோர்பெறுந் தவமே யெச்சரீக்கை
சாராரிடர் தீராததொர் தகையா யெச்சரீக்கை

சுயமாமுக வவுணற்கொரு காலா வெச்சரீக்கை
கடிமாமலர் நிகர்மேவிய காலா வெச்சரீக்கை

அயமேறிய வறுமாமுகற் கண்ணா வெச்சரீக்கை
அவிருஞ்சுடர் வடிவாயமுக் கண்ணா வெச்சரீக்கை

நலமேவிய வலவைக்கொரு நாதா வெச்சரீக்கை
நாராயணன் பூசித்திடு நம்பா வெச்சரீக்கை

அலையார்நதி புனையுஞ்சடை யமலா வெச்சரீக்கை
அணிமேவிய புன்னைப்பதி யரசே யெச்சரீக்கை

## புராக்கு

தும்பிமுகங் கொண்டருளுஞ் சோதீ பராக்கு
சுடர்சடையி னதிகொண்ட தூயா பராக்கு
அம்பிகைமு னீன்றருளு மன்பா பராக்கு
அரவினொடு மதிபுனைந்த வாதீ பராக்கு.

நாதநிலை கடந்துநின்ற நாதா பராக்கு
ஞானமகல் மூடரக நண்ணாய் பராக்கு
போதநிலை யோர்களுளம் புகுவாய் பராக்கு
புலவோர்கள் பாடலுறும் பொருளே பராக்கு

வேதமுடி வாகிநின்ற விமலா பராக்கு
விண்ணோர்கள் தொழநின்ற மேலோய் பராக்கு
ஆதிநடு முடிவாய வமலா பராக்கு
அணிகொள்புன் னைப்பதியி லரசே பராக்கு

## மங்களம்

அத்திமுக முன்னவற்கு மங்களம் -மிக்க
அருள்வடிவ மாயவற்கு மங்களம்
முத்திதரு மேலவற்கு மங்களம் -தேவ
முதல்வர்பணி தேவனுககு மங்களம்

கந்த பரிபூரணற்கு மங்களம் - தூய
சோதி வடிவானவற்கு மங்களம்
சித்திதரு செல்வனுக்கு மங்களம் - செம்பொன்
சிமயமயி லீன்றவற்கு மங்களம்

ஆதிபர மானவற்கு மங்களம் -செங்கை
அங்குசபா சத்தனுக்கு மங்களம்

பூதகண நாதனுக்கு மங்களம் - எங்கள்
புன்னை நசரீசனுக்கு மங்களம்

உ

## தவவியப்பு

தகைகொ ளைங்கரன் றரிசன மளித்த
சாலுறு முன்னைத் தவத்தினை வியத்தல்

### கலிநிலத்துறைகள்

பன்னு மாமறை முனவர்க ளமரர்கள்
சென்னி யாற்றொழு தேத்திடுங் கயமுகத் தேவைப்
பின்னு வார்சடைப் பெருமனைத் தொழுதிடப் பெரிது
முன்னை யாஞ்செயுந் தவமெனோ மூதுல கத்தே

ஊர ராமுடிப் பிஞ்ஞுக னுருவமே யுலகென்
றாரு மோர்வுற வவன்றனை வலஞ்செய்தங் கையினிற்
சேரு மாங்கனி வாங்கினோன் றனைத்தெரி சிக்க
நேரி லாதியாஞ் செய்திடுந் தவமெனோ நிலத்தில்

பன்னி ரணடுகை யுடையதோர் பகவன்மேற் பரிவான்
மின்னை நேரிடை வள்ளிமுன் வேழமாய் மேவுந்
தன்னை நேரிலா முதல்வனை யிறைஞ்சிடத் தமியேம்
என்னை மாதவஞ் செய்தமோ விப்புவி யிடத்தே.

அஞ்சு மாமுக னளித்திடு மைங்கரத் தமலன்
செஞ்ச டாடவிக் கற்றையுந் திருமுகச் சிறப்பும்
கஞ்ச மாமலர் நிகரெழிற் சுழல்களுங் காண
விஞ்சு மாதவ மென்கொலோ செய்தன மேனாள்.

மூரி மால்விடைப் பாகனார் மும்மதின் முருக்கச்
சாரும் போதினி லூர்ந்திடும் தேரினச் சறுத்த
யாரு நேரிலா முதல்வனை யிறைஞ்சிட வினிதே
பாரின் மீதியாஞ் செய்திடுந் தவமெனோ பலநாள்

வான வேசனை யமரரை யுயிருக வருத்தும்
தான வேசனைத் தன்னொரு கோட்டினாற் சயங்கொள்
மான வேதனை யொருவரில் லான்றனை வழுத்த
ஆன வேதவம் முன்னைநா ளுலகினி லமைத்த

காக மாகியே குறுமுனி கமண்டலம் கவிழா
மேக வாகனன் மகிழ்வுறக் காவிரி விடுத்த
ஏக மாகிய கடவுளை வணங்கிட வெமக்கு
மாக லாயின வேதவம் முன்னைநா ளமைத்த

இலங்கை யீசனைப் பந்தென வாடிய விறையை
நலங்கொள் பாரதந் தீட்டியே மேருவா நகமேற்
றுலங்கு மாசெயும் பெருமனைக் கண்டியாந் தொழவே
நிலஞ்செய் மாதவ மென்னையோ முன்னைநா ணீட

வந்தி யாதவர் செயற்கிடை யூறுறு மாசெய்
தந்தி மாமுகக் கடவுளை யுலகெலாந் தனைமுன்
சிந்தை மேற்கொள நின்றவன் றனைந்தொழச் செகத்தில்
முந்தி யாஞ்செயுந் தவத்தினை மொழிந்திட முடியுமோ

கன்னல் சான்மொழி மலைவரு பிடிதருங் கன்றை
மன்னு தானவ மாவினை வெல்வய மாவைப்
புன்னை மாநகர் செய்தபுண் ணியந்தனைப் போற்ற
முன்னை யாஞ்செயுந் தவமெனோ விப்புவி முகத்தே.

✧✧✧

# 03

# புன்னைநகர் கல்விசார் முயற்சிகள்

### புன்னைநகர் கல்விசார் முயற்சிகள்

**பு**கழ்பூத்த எமது புன்னை நகரின் கேந்திர ஸ்தானமாக விளங்குவது ஆயாக்கடவைச் சித்தி விநாயகர் ஆலயமும் அதன் சுற்றுப்புறச் சூழலுமாகும். இங்குதான் புன்னை நகரின் கல்விப் பாரம்பரியத்தின் ஊற்றுக்கண் உற்பத்தியாகத் தொடங்கியது. அயற்கிராமங்களில் பாடசாலைகள் தோன்று முன்னரே எமது கிராமத்தில் தமிழ் (1875), ஆங்கிலப் (1908) பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

### கதிர்காமையர் ஆரம்பித்த பாடசாலை

ஆயாக்கடவையைச் சேர்ந்த சங்கர ஐயர் கதிர்காம ஐயர் (1832-1905) முதன் முதலில் புன்னாலைக்கட்டுவனில் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார். 1845இல் ஆயாக்கடவையில் பிறந்த பிரம்மஸ்ரீ கா.அப்பாச்சாமி ஐயர் அவர்கள் தனது இளமைக்காலத்தில் கதிர்காமஐயரிடம் கல்வி கற்றார் என்ற தகவல், அப்பாச்சாமி ஐயர் இயற்றிய நகுலகிரிப் புராண முன்னுரையில் காணப்படுகிறது. 1848இல் பிறந்த காசிவாசி செந்திநாதையர் அவர்களும் தனது இளமைக்காலத்தில் கதிர்காமஐயரிடம் கல்வி கற்றார் என்பதை செந்திநாதையரின் வாழ்க்கை வரலாற்றில்

இருந்து அறிய முடிகிறது. இவற்றிலிருந்து கதிர்காம ஐயரின் திண்ணைப்பள்ளிக்கூடம் ஏறத்தாழ 1850ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

1939ஆம் ஆண்டில் கணேசையர் எழுதிய ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் என்ற நூலில் 'கதிர்காம ஐயர் அவர்கள் புன்னாலைக்கட்டுவனில் ஒரு வித்தியாசாலையை ஸ்தாபித்து அரச நன்கொடையும் பெறச் செய்தவர். **அப்பாடசாலை இப்போது அரசினரால் நடத்தப்படுகிறது**.' என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் அக்கட்டுரையில் கதிர்காம ஐயர், ஆறுமுகநாவலருடன் பரிச்சயம் உள்ளவர் என்ற குறிப்பும் காணப்படுகிறது. எட்டாம் ஆண்டு அரசினர் தமிழ் மலர் (1967 பதிப்பு) பாடப்புத்தகத்தில் கணேசையர் அவர்கள் எழுதிய 'நான் வித்துவசிரோமணியின் மாணவன் ஆனமை' என்ற கட்டுரையில், 1893ஆம் ஆண்டில் கதிர்காம ஐயரின் பாடசாலையில் தான் எட்டாம் வகுப்பு பயின்று கொண்டிருந்த வேளையில் வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை பரிட்சகராக வந்து மாணவர்களைப் பரிட்சித்தார் என்ற செய்தி காணப்படுகிறது.

அக்காலகட்டத்தில் பாடசாலைகளில் பரிட்சைகள் நடாத்தப்பட்டு மாணவர்களின் பெறுபேறுகளுக்கமைய பாடசாலைகளுக்கு அரசமானியங்கள் வழங்கப்பட்டன. அவ்வாறு முதன் முதலில் அரச மானியத்தை, 1870இல் ஆறுமுகநாவலரால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலை பெற்றுக்கொண்டது என்பது வரலாறு.

இந்தப் பின்புலத்திலேதான் ஆறுமுகநாவலருடன் பரிச்சயம் உடைய கதிர்காம ஐயர் தனது திண்ணைப்பள்ளிக்கூடத்தை சைவப் பாடசாலையாக ஸ்தாபித்தார் என்பதை நாம் உய்த்துணரமுடியும். இப்பாடசாலைக்கு பரிசோதகராக வித்துவசிரோமணி பொன்னம் பலப்பிள்ளை வருகை தந்தபோது, கணேசையர் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார் எனக் குறிப்பிட்டுள்ளார். இப்பாடசாலையானது எட்டாம் வகுப்பு வரை விருத்தி நிலை அடைய பாடசாலை தொடங்கி பத்து வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தேவைப்படும். இந்தப் பின்புலத்தில் நோக்கும்போது 1875ஆம் ஆண்டில் கதிர்காம ஐயரின் சைவப்பாடசாலை

ஆரம்பிக்கப்பட்டது என்ற முடிவுக்கு வரலாம். இப்பாடசாலையின் தூண்கள் இரண்டு 1962ஆம் ஆண்டுவரை கோவிலின் முன்னால் உள்ள கோயிலர் மடத்தின் அருகே காணப்பட்டது என்பதை புன்னைநகரின் இன்றைய மூத்த பிரஜைகள் பலர் கண்டிருப்பர்.

1960இல் பண்டிதவித்துவான் திரு. க.கி.நடராஜன் அவர்கள் கணேசையர் பற்றி எழுதிய கட்டுரையொன்றில் இப்பாடசாலை பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார் "கணேசையர் அவர்கள் குடும்பம் கற்றவர்களையும் ஆசிரியர்களையும் கொண்டு விளங்கிற்று. அவர்களுடைய பெரிய தகப்பனாராகிய மறைத்திரு கதிர்காம ஐயர் அவர்கள் புன்னாலைக்கட்டுவனில் ஒரு பள்ளிக்கூடம் நடத்திவந்தார்கள். அஃது அக்காலத்தில் ஒரு சைவப் பள்ளிக்கூடமாக விளங்கிற்று. **இப்போது அஃது அரசினர் பள்ளிக்கூடமாக மாறிவிட்டது**. அப்பள்ளியிலேயே கணேசையர் அவர்கள் அரிச்சுவடி தொடக்கம் மிகத் திறமையாகக் கல்வி கற்று வந்தார்கள். அரிச்சுவடி தொடக்கம் எட்டாம் வகுப்புவரை அப்பள்ளியிலேயே கற்று வந்த கணேசையர் அவர்கள் இலக்கணம், இலக்கியம், சரித்திரம், சமயம், கணிதம் முதலிய பாடங்களில் முதன்மை பெற்றார்கள்" எனக்குறிப்பிட்டுள்ளார்.

1967இல் தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் 'ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள்' என்ற ஒரு நூலை எழுதியுள்ளார். அவர் தனது நூலில் கதிர்காமையர் பற்றி எழுதுகையில் "புன்னாலைக்கட்டுவனில் இவர் ஒரு தமிழ்ப்பாடசாலையை நிறுவி நன்கு நடத்தி அரசினர் நன்கொடையும் பெறச் செய்தவர். **இப்போது அப்பாடசாலையினை அரசினரே நடத்தி வருகின்றனர்**." எனக் குறிப்பிட்டுள்ளார்.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த வைத்திய கலாநிதி இ. நன்னித்தம்பி அவர்கள் எழுதி 1990ஆம் ஆண்டு வெளியிட்ட, புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் சரணாகதி மலர் என்ற நூலிலே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "சோமையர் வழிவந்த சங்கரஐயர் கதிர்காம ஐயர் செந்தமிழும் வடமொழியும் நன்கு பயின்றவர். சைவப்பாடசாலை ஒன்றை நிறுவியதுடன் சிறப்பாக நடத்தியும் வந்தார். **அந்தச் சைவப்பாடசாலையே இப்பொழுது**

**அரசினர் பாடசாலையாக மாறியுள்ளது**. கதிர்காமையர் அமைத்த சைவப் பாடசாலையிலேயே கணேசையர் அவர்கள் ஆரம்பக் கல்வியைப் பெற்றார்கள்" எனக்குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட பேரறிஞர்கள் நால்வரதும் வெவ்வேறான ஐந்து நூல்களில் காணப்படும் கூற்றுக்களின்படி தற்போதுள்ள புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை முதலில் கதிர்காமையரால் நிறுவப்பட்டதெனவும் இப்பாடசாலையிலேதான் கணேசையர் எட்டாம் வகுப்புவரை கல்விகற்றார் எனவும் தெட்டத்தெளிவாகத் தெரியவருகிறது.

கணேசையர் அவர்கள் இப்பாடசாலையில் 1882 முதல் 1889 வரை கல்வி கற்றார் எனக் கணக்கிட முடிகிறது. அத்துடன் எமக்குக் கிடைத்த பலதரப்பட்ட நூற்பதிவுகளின்படி இப்பாடசாலை அண்ணளவாக 1875இல் ஸ்தாபிக்கப்பட்டது எனவும் கணக்கிட முடிகிறது.

1878 முதல் 1958 வரை கணேசையர் வாழ்ந்த காலப்பகுதியாகும். இக்காலத்திலேயே அவர் படித்த கதிர்காமையாரின் பாடசாலை அரசினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. 1927இல் சேர்.பொன் இராமநாதனால் அப்பாடசாலையின் புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டிய நிகழ்வும் நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வுகளையெல்லாம் நேரடியாகப் பார்த்து அறிந்த பின்னரே **"கதிர்காமையரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையை இப்போது அரசினரே ஏற்று நடத்தி வருகின்றனர்"** என்ற குறிப்பினை கணேசையர் 1939இல் எழுதியுள்ளார் என்பது இங்கு கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய விடயமாகும்.

மேலும், இற்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் கோவிலின் முன்னே வலதுபக்கத்தில் தற்போதுள்ள ஒழுங்கையின் வடக்கே தெருவின் மேற்குப் பக்கமாக ஒரு கேணி தூர்ந்து போன நிலையில் காணப்பட்டது. இக்கேணி முற்காலத்தில் ஆயாக்கடவையான் தீர்த்தமாடிய கேணியாகும். கேணிக்கு வடக்கே 'கோயிலார் மடம்' அமைந்திருந்தது. மடத்தின் அருகாமையில் மேற்குப்புறமாக கதிர்காமையர் பாடசாலை அமைந்திருந்ததற்கான ஆதாரமாக ஏறத்தாழ நான்கு அடிச் சுற்றளவும் ஐந்து அடி

உத்தியோகம் வகித்த காலத்திலும் கிராமசேவையிற்
பேரார்வங் கொண்டவராக விளங்கினார். கடமை புரிந்து
கொண்டு கொழும்பிலிருக்கும் வேளையிலும், விடுமுறை
பெற்று வந்தபோதிலும் கூட, பல்வேறு துறைப்பட்ட
பொதுநலப் பணிகளையுந் திட்டமிட்டுச் செயற்படுத்தி
வந்தார். இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடும் பேராற்றல் படைத்திருந்தமை
யினாலேயே, தாம் மேற்கொண்ட பொதுநலப் பணிகளைத்
திருப்திகரமாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்ற
முடிந்ததெனலாம். சேர். பொன். இராமநாதன் அவர்க
ளின் உதவியையும் பொதுமக்களினாதரவையும் பெற்று,
அரசாங்க பாடசாலை, வைத்தியசாலை, உபதபால் நிலை
யம் போன்றவற்றை நம் கிராமத்தில் நிறுவித் தந்தார்.


– தா. ஆறுமுகம், ஆசிரியர்.
பிரம்மஸ்ரீ க.செ. பாலசுப்பிரமணிய ஐயர் நினைவு மலர், 1970, ப. 5
வெளியீடு: புன்னாலைக் கட்டுவன் சனசமூக நிலையம்

தமிழ்வளர நெய்வார்த்த வித்துவான் கணேசைய
ரின் மரபில் வந்த பெருந்தகவாற்போலும் பாலசுப்பிர
மணியம் தன் சேவையைக் கல்வியிலேயே ஆரம்பிக்கத்
தொடங்கினார். அறவோராய அந்தணர்க்கமைந்த திண்
ணைப் பள்ளியை அகல அடியெடுத்து வைக்கச்செய்து அர
சினர் பள்ளியாக்கி இன்றுவரை நிலைக்கச் செய்த அரும்
பணி பாலசுப்பிரமணியத்தின் கன்னிப்பணியாகும். அவ

– அ. முதலித்தம்பி, ஆசிரியர்.
பிரம்மஸ்ரீ க.செ. பாலசுப்பிரமணிய ஐயர் நினைவு மலர், 1970, ப. 10
வெளியீடு: புன்னாலைக் கட்டுவன் சனசமூக நிலையம்

உயரமும் கொண்ட இரு தூண்கள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டன. நூற்றாண்டுப் பழமை வாய்ந்த அந்தத் தூண்கள் உருளை வடிவத்தில் பழங்காலக் கட்டிட மரபில் தோற்றமளித்தன. இவற்றையெலாம் புன்னை நகரின் அறுபது வயதைத் தாண்டிய இன்றைய மூத்த புன்னைநகர் வாசிகள் அவதானித்திருப்பர். இவற்றை நாமும் பார்த்திருக்கிறோம். சிறுவயதில் இங்கே விளையாடியும் உள்ளோம். இவையாவும் கோவில் சுற்றாடல் நிர்மாணத்தின்போது அகற்றப்பட்டுவிட்டன.

எனவே மேற்குறிப்பிட்ட தரவுகளின்படி இன்றைய தமிழ்ப் பாடசாலையின் ஸ்தாபகராகவும் முதலாவது அதிபராகவும்




**சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் அடிக்கல் நாட்டியமை (1927)**

## கதிர்காமையர்

இவர் இற்றைக்கு அறு வருடங்களுக்குமுன்னே புன்னாலைக்கட்டுவன் என்னுமூரிலே அந்தணர் மரபிலே சங்கர ஐயருக்குப் புதல்வராகப் பிறந்தவர். உரியகாலத்திலே தந்தையாரால் வித்தியாரம்பஞ்செய்யப்பெற்று அவரிடத்திலே சிலவாண்டு சம்ஸ்கிருதமுந் தமிழும் பயின்ற பின், ஊரெழு என்னுமூரிலிருந்த மயில்வாகனப்புலவர் என்பவரிடத்திற் சென்று தமிழிலக்கியங்கள் சில கற்றவர். கந்தபுராணம், பெரியபுராணம், பாரதம் என்னும் இலக்கியங்களில் அதிக பயிற்சி உடையர். மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, புலியூரந்தாதி என்பவற்றிலும் மிகப் பயிற்சி உடையர். சூடாமணி நிகண்டை முதலில் இருந்து முடிவுபோக வாய்ப்பாடமாகச் சொல்ல வல்லவர். நீர்வேலிச் சங்கரபண்டிதரிடத்திலே சென்று தமக்கு நேர்ந்த ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தவர். ஆறுமுகநாவலரோடும் பரிசயமுடையவர். சுன்னாகத்து முருகேசபண்டிதர் இவருக்கு நண்பராவர். இணுவில் நடராசையரிடஞ் சித்தாந்த நூல்களைக் கேட்டறிந்தவர். சிவஞானசித்தியாருரைகளுள் ஒன்றாகிய ஞானப்பிரகாசருரையில் நன்கு பயின்றவர். ஊரெழு சரவணமுத்துப்புலவருங் காசிவாசி செந்திநாதையருந் தமதிளமைப்பருவத்திலே இவரிடம் பாடங்கேட்டவர்களாவர். இவரிடம் யாமும் இளமைப்பாராயத்திலே பாடங் கேட்டுள்ளேம். இவர் எமக்குப் பெரியதந்தையாராவர். இவர் புன்னாலைக்கட்டுவனிலே ஒரு தமிழ் வித்தியாசாலையைத் தாபித்து அரசினர் நன்கொடையும் பெறச்செய்தவர். இவர்க்கு நான்குபுத்திரருளர். பின்னாளிலே புத்திரர்களும் ஆசிரியர்களாக இருந்து அவ்வித்தியாசாலையிற் கற்பித்துவந்தனர். அவ்வித்தியாசாலை இப்பொழுது அரசினரால் நடாத்தப்படுகின்றது. இவர் புதல்வர்களுள் முதற் புதல்வராகிய சுந்தரமூர்த்தி ஐயரென்பவர் தாம்

**ஆதாரம்: ஈழநாட்டுத்தமிழ்ப் புலவர் சரிதம், 1939**

**எழுதியவர்: வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர்**

**கதிர்காமையர்**

யாழ்ப்பாணத்தைச் சார்ந்த புன்னாலைக் கட்டுவன் என்னும் ஊரிலே, சங்கர ஐயர் என்பாருக்குப் புதல்வராகத் தோன்றியவர் இவர். மகாவித்துவான் கணேசையரின் பெரிய தந்தையாராவார். இளமையிலே இவருடைய தந்தையாரே இவருக்கு ஏடுதொடக்கி, தமிழும் சமக்கிருதமும் கற்பித்து வந்தார். அதன்பின், ஊரெழு மயில்வாகனப் புலவரிடத்திலே தமிழிலக்கணவிலக்கியங்களை முறையே கற்றார். இணுவில் நடராசையரிடத்திற் சைவசிந்தாந்த நூல்களைப் பயின்றார். ஊரெழு சரவணமுத்துப் புலவர், காசிவாசி செந்திநாதையர், மகாவித்துவான் கணேசையர் ஆகியோர் இவருடைய மாணவராவர்.

புன்னாலைக் கட்டுவனிலே இவர் ஒரு தமிழ்ப் பாடசாலையை நிறுவி, நன்கு நடாத்தி, அரசினர் நன்கொடையும் பெறச் செய்தவர். இப்போது அப்பாடசாலையினை அரசினரே ஏற்று நடாத்தி வருகின்றனர்.

**ஆதாரம்: ஈழநாட்டின் தமிழ்ச் சுடர் மணிகள், 1967.**
**எழுதியவர்: தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை**

கல்வி கற்றல்

கணேசையரவர்கள் குடும்பம் கற்றவர்களையும் ஆசிரியர்களையுங் கொண்டு விளங்கிற்று. அவர்களுடைய பெரிய தகப்பனாராகிய மறைத்திரு. கதிர்காம ஐயரவர்கள் புன்னாலைக்கட்டுவனில் ஒரு பள்ளிக்கூடம் நடத்திவந்தார்கள். அஃது அக் காலத்தில் ஒரு சைவப் பள்ளிக்கூடமாக விளங்கிற்று. (இப்போது அஃது அரசினர் பள்ளிக்கூடமாக மாறிவிட்டது.) அப் பள்ளியிலேயே கணேசையரவர்கள் மிக்க திறமையாகக் கல்வி கற்றுவந்தார்கள். அரிச்சுவடி

**ஆதாரம்: கணேசையர் நினைவு மலர், 1960.**
**கட்டுரையாசிரியர்: பண்டித வித்துவான் திரு. க.கி. நடராஜன்**
**பக். 3–4.**

## (இ) நான் வித்துவசிரோண்மணியின்

### மாணவனுனமை

1893 ஆம் ஆண்டில், ஒருநாள், பலாலி அம்மன் கோவிலில், கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப் படலப் படிப்பு நடைபெற விருந்தது. வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள்தான் உரை சொல்லப்போகிருர் என்று கேள்விப் பட்டேன். அக்காலத்திற் பலாலியில் வசித்த வேளாள குலத்தவராகிய வன்னிய சிங்கம் என்பவரே, வித்துவசிரோமணி யவர்களை அழைத்தவர். "வித்துவசிரோமணி உரை சொல்லப் போகிருர்" என்ருல், ஊரெல் லாந் திரண்டுவிடும். பொன்னம்பல பிள்ளையை, பொன்னையா உபாத்தி யாயர் என்றுங் கூறுவார்கள்.

புன்னுலைக்கட்டுவன் கதிர்காமையர் (என் பெரிய தகப்பனுர்) வித் துவசிரோமணி பொன்னம்பலம்பிள்ளையை நன்கு தெரிந்தவர். அவர் புன்னுலைக்கட்டுவனிலே ஒரு சைவ வித்தியாசாலையை ஆரம்பித்து நடத்தி வந்தார். அப்பாடசாலை இப்பொழுதும் அரசினர் பாடசாலையாக நடை பெறுகிறது. அந்தப் பாடசாலையில், எட்டாம் வகுப்பு வரை வகுப்புக்க ளிருந்தன. அப்பாடசாலையிற் கதிர்காமையரின் மகன் செல்லையர் படிப்பித்து வந்தார். அப்பொழுது நான் அந்தப் பாடசாலையில் எட்டாம் வகுப்பிற் படித்துக் கொண்டிருந்தேன். இலக்கணம், இலக்கி யம், சமயம், கணிதம் முதலிய பாடங்கள் படிப்பிக்கப்பட்டன. பலாலி அம்மன் கோவிலிற், கந்தபுராணப் படிப்பு அன்று பின்னேரந்தான் ஆரம்பிக்கவிருந்தது. வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை யவர் கள் அன்று காலையே புன்னுலைக்கட்டுவனுக்கு வந்துவிட்டார். அவர் கள் கதிர்காமையருடன் தங்கி அங்கேயே ஸ்நானஞ் செய்து போசனம் முடித்துக்கொண்டார்.

**ஆதாரம்: தமிழ் மலர். (8ஆம் ஆண்டு) 1967 பதிப்பு, ப.205–206**
**எழுதியவர்: வித்துவசிரோமணி சி. கணேசையர்**

சோமையர் வழிவந்த சங்கரஐயர் கதிர்காமையர் செந்தமிழும், வடமொழியும் நன்கு பயின்றவர். சைவப் பாடசாலை ஒன்றை நிறு வியதுடன் சிறப்பாக நடத்தியும் வந்தார். அந்தச் சைவப்பாடசாலையே இப்பொழுது அரசினர் பாடசாலையாக மாறியுள்ளது. கதிர்காமையர் அமைத்த சைவப்பாடசாலையிலேயே கணேசையர் அவர்கள் ஆரம்பக் கல்வியைப் பெற்ருர்கள்.

**ஆயாக்கடவை சித்திவிநாயகர் சரணாகதி மலர், 1990, ப. 14**
**எழுதியவர்: டாக்டர் இ. நன்னித்தம்பி**

கதிர்காமையர் விளங்கினார் எனவும் அவரைத் தொடர்ந்து இப்பாடசாலையில் அவரது நான்கு புத்திரர்கள் ஆசிரியர்களாக இருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கதிர்காம ஐயர் ஆரம்பித்த பாடசாலையை விரிவாக்கம் செய்து தற்போதுள்ள இடத்தில் கட்டிடம் அமைய முன்னின்று உழைத்தவர் கதிர்காம ஐயரின் பேரரான க.செ. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள். சேர். பொன். இராமநாதனுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. அவரது உதவியைப் பெற்றே ஐயரவர்கள் இதனைச் செயற்படுத்தினார். இந்தத் தகவல்களை புன்னைநகர் வாசியும் இப்பாடசாலையில் கல்வி கற்றவரும் பின்னர் இப்பாடசாலையிலேயே *1970-1971* காலப்பகுதியில் அதிபராக இருந்தவருமான புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த அ. முதலித்தம்பி, அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று எமது ஊரைச்சேர்ந்த ஆசிரியர் தா.ஆறுமுகம் அவர்கள் ஐயரைப் பற்றி எழுதிய கட்டுரைகளில் இதனை மேலும் உறுதி



**புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை**

செய்துள்ளனர். இவர்கள் எழுதிய கட்டுரைகள் பொதுமக்கள் சார்பில் புன்னாலைக்கட்டுவன் சனசமூக நிலையத்தினரால் 15-01-1970 அன்று வெளியிட்ட "பிரம்மஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களின் நினைவு மலரில்" காணப்படுகின்றன.

**கணேச முன்பள்ளி**

எமது கிராமத்தில் இயங்கிவரும் கணேச முன்பள்ளியின் செயற்பாடுகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆரம்பத்தில் தனியார் பொறுப்பில் இயங்கிவந்த இந்த முன்பள்ளி பின்னர் பிரதேச சபையின் மானியம் பெற்று, 'கணேச முன்பள்ளி' என்ற பெயரில் இப்போது கணேச சனசமூகத்தின் மேற்பார்வையில் சிறப்பாக இயங்கிவருகிறது. இந்த முன்பள்ளிக்கான காணியை இக்கட்டுரை ஆசிரியர் விலைக்கு வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளார். இதனைத் தமது பேரர் பிரம்மஸ்ரீ ஐயாத்துரைஐயர் துரைச்சாமி ஐயர் 1908இல் ஆங்கிலப் பாடசாலை ஒன்றை எமது கிராமத்தில் நிறுவி கல்விப்பணியாற்றியமையின் ஞாபகார்த்தமாக அவர் வழங்கியுள்ளார். அத்தோடு, கணேச சனசமூக நிலையத் தலைவராக இருந்த திரு.சு.செல்லப்பா அவர்களினதும் நிர்வாக சபை உறுப்பினர்களதும் வேண்டுகோளுக்கமைய முன்பள்ளிக் கட்டிடம் அமைப்பதற்கான பணத்தைச் சேகரிப்பதிலும் முன்னின்று உழைத்தார். அவர் தலைமை வகிக்கும் கொழும்பு 'புன்னைநகர் நலன்புரிச் சங்கத்'தினூடாக கொழும்பில் வசிக்கும் எமது கிராமத்தவரிடமும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் ஊரவர்களிடமும் சட்டத்தரணி பூ. இளையதம்பியின் பிள்ளைகளின் பெரும் பங்களிப்போடும் கட்டிடம் அமைப்பதற்கான பணம் பெறப்பட்டது. இப்போது புதிய கட்டிடத்தில் முன்பள்ளிச் சிறார்கள் கல்வி கற்கிறார்கள். **இந்த முன்பள்ளிக்கான ஆரம்பத் தளபாடங்களையும் கட்டுரையாசிரியர் அன்பளிப்புச் செய்தார்.**

இந்த முன் பள்ளிக்கான கட்டடத்தின் அத்திபாரத்திற்கான அடிக்கல், கட்டுரையாசிரியரால் நாட்டப்பட்டது.


இந்த முன்பள்ளியில் உரிய காலங்களில் பரிட்சைகள் நடாத்தப்பட்டுத் தேர்ச்சி அறிக்கைகள் வழங்கப்படுவதோடு




**முன்பள்ளிக்கான காணியை உறுதிமூலம்**
**தி. ஞானசேகர ஐயர் அன்பளிப்புச் செய்தபோது எடுத்த படம்.**



**முன்பள்ளிக்கான கட்டிடத்திற்கு தி. ஞானசேகர ஐயர்**
**அத்திபாரம் இட்டபோது எடுத்த படம்.**




**கணேச முன்பள்ளிக்கான காணி அன்பளிப்பு**




**கணேச முன்பள்ளி**

வாணிவிழா, கலைவிழா வருடாந்த விளையாட்டுப் போட்டி போன்றவைகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன.

சனசமூக நிலையம் மற்றும் முன்பள்ளி என்பவற்றின் நிர்வாகச் செயற்பாடுகளில் திரு. மகேஸ்வரன், திரு. கேதீஸ்வரன், திரு. கணேசானந்தன், திரு. முருகநேசன் என்போர் வினைத்திறனுடன் செயற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## துரைச்சாமி ஐயர் ஸ்தாபித்த ஆங்கிலப் பாடசாலை

தற்போது புன்னாலைக்கட்டுவன் வடக்கில் இயங்கிவரும் பாடசாலையை ஸ்தாபித்தவர் கணேசையரின் மைத்துனரான பிரம்மஸ்ரீ ஐயாத்துரை ஐயர் துரைச்சாமி ஐயர் ஆவார். இவர் 1908ஆம் ஆண்டளவில் தற்போதுள்ள தமிழ்க்கலவன் பாடசாலைக்கு வடக்கே நூறுயார் தூரத்தில் (கட்டுரையாளரின் இல்லம் அமைந்திருக்கும் இடத்தில்) இப்பாடசாலையை ஓர் ஆங்கிலப் பாடசாலையாக ஆரம்பித்தார். இதற்கான ஆதாரங்கள் கட்டுரை ஆசிரியரிடம் உறுதி வடிவில் உள்ளன. துரைச்சாமி ஐயர் இப்பாடசாலையின் ஸ்தாபகராகவும் முகாமையாளராகவும் இருந்து ஆசிரியர்கள் பலரை நியிமித்துக் கல்விப் பணி புரிந்தார். இப்பாடசாலையில் செல்லையா ஐயரின் மகன் நடராஜ ஐயரும் சிலகாலம் ஆசிரியப் பணி புரிந்தார். அக்காலத்தில் ஆங்கில ஆசிரியர்களைப் பெறுவது கஷ்டமாக இருந்தது. எனவே பருத்தித்துறையிலிருந்து சில ஆங்கில ஆசிரியர்களை வரவழைத்து அவர்களுக்கு இப்பாடசாலையில் நியமனம் வழங்கினார். ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்கவும் பாடசாலையை நிர்வகிக்கவும் பணம் தேவைப்பட்டபோது தமக்குச் சொந்தமாக இருந்த காணிகளை ஈடுவைத்துப் பணத்தைப் பெற்றார். ஆனால் பாடசாலையை ஆரம்பித்து நான்கு அல்லது ஐந்து வருடங்களில் அவர் தனது நாற்பத்தோராவது வயதில் நோய்வாய்ப்பட்டு அகாலமரணமடைந்தார். அதனால் இப்பாடசாலை செயல் இழந்தது. செயலிழந்த நிலையில் அவரது மைத்துனர் கதிர்காமையர் செல்லையர் என்பவரால் வெஸ்லியன் மிஷனரிமாருக்கு விற்கப்பட்டுவிட்டது.




(மேலேயுள்ள படத்தில் மத்தியில் காணப்படுவது யாழ்ப்பாணம் - பலாலி வீதி. இடப்புறத்தில் காணப்படுவது ஆஸ்பத்திரி ஒழுங்கையும் கோயிலின் தெற்குவீதியுமாகும். படத்தின் வலப்புற அந்தத்தில் கீழ் நோக்கி வரையப்பட்டிருப்பது ஈவினைக்குச் செல்லும் பாதையாகும். படத்தின் வலப்புறம் வடதிசையையும், கீழ்ப்புறம் கிழக்குத் திசையையும் குறிக்கிறது.

படத்தில் ஆகமேலேயுள்ளது ஆயாக்கடவைப் பிள்ளையார் கோயில். அதன் வலப்புறத்தில் அமைந்திருப்பது கணேச முன்பள்ளி. இடப்புறத்தில் அமைந்திருப்பது கணேச சனசமூக நிலையம். ஒழுங்கையை ஒட்டினாற்போல் தெருவின் மேற்கே இருப்பது தூர்ந்துபோன கேணி. கேணியின் வலப்புறத்தில் மேலே கதிர்காமையர் பாடசாலை. அதன் கீழ் கோயிலார் மடம். அதனையடுத்துத் தெருவோராமாக கணேசையர் சிலை ஆகியவற்றின் அமைவிடங்கள் காட்டப்பட்டுள்ளன. தெருவின் கீழ்ப்பகுதியில் தெருவையும் ஆஸ்பத்திரி ஒழுங்கையையும் ஒட்டினாற் போல் அமைந்திருப்பது அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை. அதன் வலப்புறத்தே காணப்படுவது துரைச்சாமிஐயர் ஆங்கிலப் பாடசாலை, ஈவினைக்குச் செல்லும்

பாதையின் இடப்புறத்தில் ஐயனார் கோயில், வலப்புறத்தில் புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் அமைவிடங்கள் காட்டப்பட்டுள்ளன.)

இந்தப்பாடசாலை மிஷனறிமாரால் தொடர்ந்து நடத்தப்பட்டது. 1917ஆம் ஆண்டு புன்னாலைக்கட்டுவன் வடக்கில ஐயனார் கோயில் அருகாமையில் அப்பாடசாலைக்கு அன்பளிப்பாக 15 பரப்புக் காணி கிடைத்தது. பாடசாலையை விரிவாக்கம் செய்யும் நோக்கத்துடன் மிஷனறிமார் அப்பாடசாலையை அங்கு இடம்மாற்றினர். 1956ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அப்பாடசாலை கல்வி அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டு புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயம் எனப்பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

❏



**துரைச்சாமி ஐயர் ஸ்தாபித்த ஆங்கிலப் பாடசாலை**
**தற்போது புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயம்**

04

# கணேச சனசமூக நிலையம்

**ஆ**யாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலயத்தின் முன்புறத்தில் அமைந்த ஒரு மடத்திலேதான் முதன் முதலிலே கணேச சனசமூக நிலையம் அமைந்திருந்தது. கணேச சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டபோது நான் ஐந்து வயதுச் சிறுவனாக இருந்தேன். ஆலயத்தின் முன்னால் அமைந்துள்ள தமிழ்ப் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். அப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக திரு.வேலுப்பிள்ளை அவர்கள் இருந்தார்கள். அவரது மனைவி திருமதி இராசம்மா வேலுப்பிள்ளை எனக்கு ஆசிரியையாக அமைந்து அரிச்சுவடிகளைக் கற்றுத் தந்தார். நான் எழுத்தெண்ணி வாசிக்கத் தொடங்கிய அந்தக் காலகட்டத்திலேதான் கணேச சனசமூக நிலையம் கோயிலார் மடத்திலே ஆரம்பிக்கப்பட்டது.

கோயிலார் மடத்தின் கூரையைத் தாங்கி நிற்கும் ‘கைவளை’ களில் வெள்ளை எழுத்துக்களில் பளிச்செனத் தெரியும்படி அறிவுசார் வசனங்கள் பல ஆங்காங்கே எழுதப்பட்டிருந்தன. ‘கல்வியே கருந்தனம்’ ‘வாசிப்பு ஒரு மனிதனை முழு மனிதனாக்கும்’ ‘ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்’ போன்ற வசனங்களை அப்போது எழுத்துக்கூட்டி ஆர்வமுடன் வாசித்த நாட்கள் இப்போதும் என்நெஞ்சில் பசுமையாக இருக்கின்றன.

பாடசாலை நூல்கள் தவிர்ந்த ஏனையவற்றை வாசிக்கும் பழக்கம் அந்த வசனங்களை வாசித்ததிலிருந்துதான் எனக்கு ஆரம்பமாகியது. பின்னர் வாசிகசாலைக்கு வருகின்ற பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் காணப்படுகின்ற 'கொட்டை' எழுத்துக்களை விளங்கியதோ இல்லையோ நான் வாசித்தேன்.

இப்படியாக ஆரம்பித்த வாசிப்புப் பழக்கம்தான் என்னை எழுத்தாளனாக்கியது; மனிதனாக்கியது.

வாசிகசாலையின் அருகே மேற்குப் புறமாக ஏறத்தாழ நான்கு அடிச்சுற்றளவும் ஐந்து அடி உயரமுமுள்ள இருதூண்கள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டன. அவை வித்துவ சிரோமணி சி.கணேசையர் கல்விகற்ற பாடசாலையின் தூண்கள் என்பதை வித்துவசிரோமணி அவர்களே ஒரு தடவை என்னிடம் கூறினார். அப்பாடசாலை கணேசையரின் பெரிய தந்தையாரான பிரம்மஸ்ரீ ச.கதிர்காமையர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது.

இப்போதுள்ள கணேச சனசமூக நிலையம் 1946இல் ஆரம்பிக்கப் பட்டது. ஆனாலும் அதற்கு முன்னரே புன்னாலைக்கட்டுவனில் பேணப்பட்டு வந்த கல்விப்பாரம்பரியம் காரணமாக அவ்வப்போது பல சமூகநலச் செயற்பாடுகள் நடைபெற்று வந்துள்ளன.

கோயிலார் மடத்தின் கிழக்குப் புறமாக திரு.தாமோதரம்பிள்ளை என்பவரால் கட்டப்பட்ட ஒரு மடம் அமைந்திருந்தது. கணேச சனசமூக நிலையம் பின்னர் அந்தக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு அமைப்பு ரீதியான சட்டவலுவுள்ள சனசமூகநிலையம் அமைக்கப்பட்டது. இது 1946ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தன்று (10-10-1946) வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. எமது கிராமத்தில் தோன்றிய அறிஞர் வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்களது நாமம் நிலைக்கக் கூடிய வகையில் இந்நிலையத்திற்குப் பெயர் சூட்டப்பட்டது. (இத்தகவலை, கணேச சனசமூகத்தின் முதல் நிர்வாகசபையில் நூலகராகக் கடமையாற்றிய சோ.நடராஜ ஐயர் எழுதிய 'திரைமறைவுக் கலைஞர்கள்' என்ற நூலிலே காணமுடிகிறது) மேலும் சனசமூக நிலைய சிறப்பு மலரில், சனசமூக வரலாற்றை எழுதிய சி.ஜெயவரதன், "எமது கிராமத்திற் தோன்றிய அறிஞர்

பெருமகன் வித்துவசிரோமணி சி.கணேசையர் அவர்களது நாமம் நினைவில் நிற்கக் கூடிய வகையிலும் ஆயாக்கடவை ஐங்கரன் நாமத்தைத் தழுவிய வகையிலும், 'கணேச சனசமூக நிலையம்' எனும் பெயர் எமது நிலையத்திற்குச் சூட்டப்பட்டது" எனக் குறிப்பிட்டுள்ளார். எம்மூர் பிரசித்த நொத்தாரிசாக விளங்கிய திரு. பூ. இளையதம்பி அவர்களால் நிலையம் திறந்து வைக்கப்பட்டது. முதல் நிர்வாக சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தா. ஆறுமுகம் மாஸ்டர் (தலைவர்) அ. சிவசம்பு (செயலாளர்) க. சோமசுந்தரம் (உப செயலாளர்) இ. விக்கின ராசா (பொருளாளர்) பிரம்மஸ்ரீ. சோ.நடராசா ஐயர் (நூலகர்). நா. திருநாவுக்கரசு, த.காசிநாதன், அ. முதலித்தம்பி (செயற்குழு உறுப்பினர்கள்)

அடுத்த வருடத்தில் (1947) வாசிகசாலை 'A' தரத்துக்குத் தரமுயர்த்தப்பட்டு அரசாங்கத்தினரால் ஒரு வானொலிப்பெட்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இவ்வானொலிப் பெட்டியை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வில் அப்போதைய தபால் துறை மற்றும் தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் கௌரவ சி. சிற்றம்பலம் அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்தார்.

அக்காலத்தில் வானொலிப்பெட்டியைக் காண்பது அரிது. இதனால் எங்கள் சனசமூகத்தின் புகழ் அயற்கிராமங்களுக்கும் பரவியது. இவ்வானொலிக்கு மிகவும் உயரமான அன்ரெனா கோபுரம் அமைக்கப்பட்டிருந்தது. பெரிய 'பற்றரி'களும் பாவிக்கப்பட்டன. மார்கழி மாதத்தில் தமிழகத்தில் இசைவிழா நடைபெறம். அது வானொலி மூலம் ஒலிபரப்பப் படுவதால் அதனைக் கேட்டு இரசிக்க சங்கீதம் பயில்பவர்கள், இசையை இரசிப்பவர்கள் என ஏராளம்பேர் எமது சனசமூக முன்றலில் கூடுவர். இந்நிகழ்ச்சிகள் இரவிரவாக நடப்பதினால் அதை இரசிப்பவர்களின் வசதிக்கென முன்றலில் வெண்மணல் பரப்பப்படும். இங்கு வருவோர் கூட்டம் கூட்டமாக அமர்ந்து இசையை இரசிப்பர். அதேபோன்று அக்காலகட்டத்தில் சி. எஸ். எஸ். மணிபாகவதர் (பின்னாளில் நல்லை ஆதீனம்


ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்) அவர்களது பிரசங்கங்களும் ஒவ்வொரு மாதமும் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படும். அது மட்டுமன்றி தேர்தல் காலங்களில் தேர்தல் முடிவுகளை அறிவதற்காக ஏராளமானோர் அங்குகூடி இரவிரவாக விழித்திருப்பர். சாதாரண நாட்களில் புதினங்களை அறிவதற்கும் அங்கு ஏராளமானோர் கூடுவர்.

நாங்கள் சிறுவர்கள், அங்கு ஓங்கி உயர்ந்து நிற்கும் இரண்டு இரும்புக் குழாய்களிடையே கட்டப்பட்டுள்ள கம்பியில் எவ்வாறு இந்தியாவிலிருந்தும் கொழும்பிலிருந்தும் வரும் ஓசை கிரகிக்கப்படுகிறது என்று அன்ரெனாவை அண்ணாந்து பார்த்து வியாக்கியானம் செய்வோம்.

அன்றைய இளைஞர்களின் திறமையான செயற்பாடுகளும், பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வல்லமையும் சன சமூக நிலையத்தைப் பொறுப்பேற்று நடத்தும் இளைஞர்களுக்கு ஆதர்சமாகவும், வழிகாட்டலாகவும் அமைந்தன; ஆளுமையை வளர்த்தெடுக்க உதவின.

தொடர்ந்து வந்த காலப் பகுதியில் திரு.முருகையா, திரு.அ.கனகசபை, திரு. சீவரத்தினம் ஆகியோர் வாசிகசாலைச் செயற்பாடுகளில் இணைந்து கொண்டனர். மேற் குறிப்பிடப்பட்டோர் யாவரதும் காலகட்டத்தில் கணேச சனசமூக நிலையம் உன்னத நிலையில் இருந்தது. நூல் நிலையத்தில் பல நூல்கள் சேர்க்கப் பட்டன. ஆங்கிலப் பத்திரிகைகள், தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வரவழைக்கப்பட்டன. கரப்பந்தாட்டம், கரம் முதலிய விளையாட்டுகள் ஆரம்பிக்கப்பட்டன. வருடப் பிறப்பன்று விளை யாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. நவராத்திரி முடிவு அன்று சரஸ்வதி பூஜையும், சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டமும் நடைபெற்றன.

எனது வாலிபப் பருவத்தில் படிப்படியாகச் சனசமூக நிலையச் செயற்பாடுகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். நிர்வாக உறுப்பினர், நூலகர், செயலாளர் ஆகிய பதவிகளில் வெவ்வேறு காலப்பகுதிகளில் நான் பணிபுரிந்தேன். திரு.ஐ.இராமசாமியுடன்




நான் இணைந்து செயற்பட்ட காலகட்டம் மிகமுக்கியமானது. முன்னையவர்கள் தொழில் நிமித்தம் வெளியிடங்களுக்குச் சென்ற காலகட்டத்தில் வாசிகசாலையின் செயற்பாடுகளில் சிறிது தொய்வு ஏற்பட்டது. அதனைச் சீர்செய்ய வேண்டிய நிலைமையில் நாம் இருந்தோம்.

வெளியிடங்களில் தொழில் புரியும் ஊரவர்களுடன் நாம் கடிதம் மூலம் தொடர்புகொண்டு பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு ஆவன செய்தோம். அதிக நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், சனசமூக நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டது எமது காலகட்டத்திலேதான் எனப் பெருமையுடன் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜகந்நாதன் அவர்கள் இங்கு வருகைதந்து இலக்கியப் பேருரை நிகழ்த்தியதும் எமது காலகட்டத்திலேதான். ஈழத்துப் பிரபல விமர்சகரும், எழுத்தாளருமான கனகசெந்திநாதன் அவர்களும் அன்று இலக்கியப் பேருரை நிகழ்த்தினார்.

பிரபல பத்திராதிபர் ஹரன் அவர்களும் எமது காலத்தில் இடம்பெற்ற வருடாந்த விழாவிலே சொற்பொழிவாற்றியுள்ளார்.

1962இல் உயர் கல்விக்காக நான் கொழும்பு செல்ல நேர்ந்தது. இக்காலக்கட்டத்தில் எனது சகோதரர் பிரம்மஸ்ரீ தி.கெங்காதர ஐயர் எனது பொறுப்புக்களைப் பொறுப்பேற்று நடத்தினார். சிலகாலம் கணேச சனசமூக நிலையம் சிறப்பாக இயங்கியது.

எங்களது வாசிகசாலையின் உயர்வுக்காகத் தொடர்ந்தும் பலர் உழைத்திருக்கின்றனர். அவர்கள் அனைவரையும் இக்கட்டுரையில் குறிப்பிடுவது சாத்தியமில்லை. இக்கட்டுரை வாசிகசாலையின் ஆரம்பம் முதல் நான் பணியாற்றிய காலம் வரை உள்ள நிகழ்வுகளையே பதிவு செய்கிறது.

ஒரு விடுமுறைக் காலத்தில் நான் ஊர்வந்து, சனசமூக நிலையத்திற்குச் சென்றபோது என் மனதிலே ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. நூல் நிலையத்தின் உள்ளே இருந்த கண்ணாடி அலுமாரியில் பிரேம்பண்ணி வைக்கப்பட்டிருந்த வித்துவசிரோமணி கணேசையரின் உருவப்படத்தை அங்கு காணவில்லை. நூல் நிலையப் பொறுப்பாளருக்கும் அது மாயமாய் மறைந்தவிதம் தெரியவில்லை. இதனால் நான் பெரிதும் கவலையுற்றேன். எமது ஊருக்குப் பெருமை சேர்த்த அந்தப் பெரியாரின் உருவப்படத்தை, அவரது பெருமையுணர்ந்த யாரோ ஒருவர்தான் தம்முடன் வைத்துக்கொள்ளும் நோக்குடன் எடுத்துச் சென்றிருக்க வேண்டும். இது பற்றி நான் எனது மாமனாராகிய ஆசிரியர் பிரம்மஸ்ரீ சி.சோமசுந்தரசர்மா அவர்களிடம் கூறிக் கவலையடைந்தேன். அப்போது அவர் கூறினார், **“மருமகனே, எவருமே எடுத்துச் செல்ல முடியாதவாறு கணேசயரின் சிலை ஒன்றை அமைத்து விடுவோம்” என்றார். நான் உற்சாகமடைந்தேன். அவரது ஒத்துழைப்போடு அடுத்த வருடமே கணேசையரின் சிலையை, கணேச சனசமூகத்தின் அருகிலே அமைத்தோம். இச்சிலையின் திறப்புவிழா 1983.04.05இல் நடைபெற்றது.**

போர்க்காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள பல சிலைகள் சேதமாக்கப்பட்டன. ஆனாலும் கணேசையரின் சிலை சிதிலடையாமல் கம்பீரமாக இன்றும் தோற்றமளிப்பது எமது ஊர்மக்களுக்குப் பெருமையளிக்கிறது.

வாசிகசாலையுடன் எனக்கிருந்த உறவு ஆத்மார்த்தமானது. நான் எழுத்தாளனாக உருவாக அதனுடன் எனக்கிருந்த தொடர்பு மிக முக்கியமானது. நான் எழுதிய முதல் நாவல் ‘புதிய சுவடுகள்’. எமது ஊராகிய புன்னாலைக்கட்டுவனைப் பின்புலமாகக் கொண்டது. இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்ற அந்த நாவலில் ஏழு அத்தியாயங்களின் சம்பவங்கள் வாசிகசாலையில் நடைபெறுவதாக எழுதியுள்ளேன்.

இதேபோன்று எனது சிறுகதைகள் சிலவற்றிலும் வாசிகசாலையும் அதன் சுற்றுப்புறச் சூழலும் குறிப்பிடப்படுகின்றன. ‘அல்சேஷனும் ஒரு பூனைக் குட்டியும்’ என்ற எனது சிறுகதைத் தொகுதி, சப்ரகமுவ

பல்கலைக்கழகத்தில் கடந்த 21 வருடங்களாக இளங்கலைமாணி (பி.ஏ) பட்டப்படிப்பிற்குப் பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது. அத்தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ள 'கோணல்கள்', 'குமிழி' ஆகிய சிறுகதைகளில் வாசிகசாலையின் சுற்றுப்புறச் சூழல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தோடு கணேச சனசமூக நிலையம் வெளியிட்ட எனது 'காலதரிசனம்' என்ற சிறுகதைத் தொகுதியில் உள்ள 'சங்கு சுட்டாலும்' என்ற சிறுகதையிலும் வாசிகசாலையும் அதன் சுற்றுப்புறச் சூழலும் வர்ணிக்கப்பட்டுள்ளன.

எனது 'கால தரிசனம்' என்ற முதற் சிறுகதைத் தொகுதி, 1973இல் கணேச சனசமூக நிலைய வெளியீடாக வெளிவந்தது. வெளியீட்டு விழாவையும் சனசமூக நிலையத்தினரே முன்னின்று நடத்தி எனக்குப் பெருமை சேர்த்தனர்.

1970இல் இலங்கை சாகித்திய மண்டலம் நடாத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் நான் பரிசு பெற்ற போதும் கணேச சனசமூக நிலையத்தினர் என்னைப் பாராட்டி ஆயாக்கடவை ஐங்கரன் மண்டபத்தில் விழாவெடுத்து, வாழ்த்துப்பா பாடி எனது இல்லம்வரை ஊர்வலமாக அழைத்துச் சென்று சிறப்பித்தனர்.




**புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சனசமூக நிலையம் – 2002**

போர்க்காலத்துக்கு முந்திய கணேச சனசமூக நிலையமும், வாசிகசாலையும் அதன் சுற்றுப்புறச் சூழலும் இன்று சுவடுகள் தெரியாமல் அழிக்கப்பட்டாலும் 'புதிய சுவடுகள்' என்ற எனது நாவலிலும், எனது சில சிறுகதைகளிலும் அவை நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன என எண்ணும்போது எனக்குப் பெருமையாக இருக்கின்றது.

இப்போது புதிய கட்டிடத்தில் புதுமெருகுடன் கணேச சனசமூக நிலையம் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவனில் இயங்கும் மேலும் சில சமூக அமைப்புகள்:

1. பறக்கும் கழுகுகள் விளையாட்டுக் கழகம்
2. ஐக்கிய நாணய சங்கம்
3. மாதர் சங்கம்
4. விவசாயிகள் சம்மேளனம்
5. இந்து இளைஞர் சங்கம்

**உசாத்துணை:**


1. புன்னாலைக்கட்டுவன் கணேச சனசமூக நிலைய கட்டிடத்திறப்பு விழாச் சிறப்பு மலர்(கணேச சனசமூக வரலாறு - சி. ஜெயவரதன்).
2. சோ.நடராஜ ஐயர் எழுதிய "திரைமறைவுக் கலைஞர்கள்" நூல்.


❑

# 05

# புன்னாலைக்கட்டுவன் வித்துவசிரோமணி கணேசையர் வாழ்வும் பணிகளும்

**முக்கிய குறிப்புகள்**

1. வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்கள் ஈசுவர வருடம் பங்குனி மாதம் பதினைந்தாம் திகதி (26-03-1878) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணி இருபது நிமிஷமளவில் மிதுன லக்கினத்தில் பூராட நட்சத்திரத்தில் பிறந்தார்.
2. புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை அந்தண குலத்தில் உதித்த இவர் பிரம்மஸ்ரீ சின்னையர் - சின்னம்மா தம்பதிக்கு நான்கு பெண்பிள்ளைகளுக்குப் பின் ஒரே ஆண்மகவாகப் பிறந்தார். விநாயகர் அருளால் பிறந்த அம்மகவுக்கு தாய்தந்தையர் கணேசையர் எனப் பெயரிட்டனர்.
3. புன்னாலைக்கட்டுவனில் இவரது பெரியதந்தையார் கதிர்காமஐயர் நிறுவிய சைவப்பாடசாலையில் வித்தியா ரம்பம் பெற்று எட்டாம் வகுப்புவரை பெரிய தந்தையாரிடமே கல்வி கற்றார்.
4. பெரிய தந்தையார் கதிர்காமஐயர் ஆறுமுகநாவலருடன் பரிச்சயம் உடையவர். அதன் தொடர்பில் கதிர்காம ஐயரது பாடசாலைக்கு பரிட்சகராக விளங்கியவர் ஆறுமுகநாவலரின் தமக்கையாரது மகனும் மாணவருமாக விளங்கிய வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளையவர்கள். அவர் ஒருமுறை



கணேசையரைப் பரிட்சித்தபோது கொடுத்த விளக்கத்தில் பொன்னம்பல பிள்ளையின் புலமைத்திறமை வெளிப்பட்டது. அதனால் ஈர்க்கப் பட்ட கணேசையர் பொன்னம்பல பிள்ளையிடமே தாம் தமிழ் படிக்க முடிவு செய்தார்.

5. வண்ணார்பண்ணை சிவன் கோயில் வடக்கு வீதியில் 104 ஆம் இலக்கத்தில் உள்ள தனது மைத்துனர் சுந்தரமையர் வீட்டில் தங்கியிருந்து அவ்வூரில் உள்ள பிச்சு ஐயரின் இல்லத்தில் பொன்னம்பலபிள்ளை நடத்திவந்த தமிழ் வகுப்புகளில் சேர்ந்து தனது பதினெட்டாவது வயது வரை கல்விகற்றார். பொன்னம்பலபிள்ளை அமரரானதும் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் நீண்ட காலம் கற்று புலமையாளரானார்.

6. இடைப்பட்டகாலத்தில் அரசினர் பாடசாலைகளிலே கற்பித் தலுக்குத் தேவையான ஆசிரிய தராதரப்பத்திரத்தையும் ஐயர் பெற்றிருந்தார். 21ஆவது வயதில் முதலில் வண்ணார் பண்ணை வேலுப்பிள்ளை வித்தியாலயத்திலும் பின்னர் அங்குள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் ஆசிரிய ராகக் கடமையாற்றிய ஐயரவர்கள் தொடர்ந்து வந்த காலப் பகுதியில் காவிய பாடசாலை, புன்னாலைக்கட்டுவன், குரும்பசிட்டி, மல்லாகம், வயாவிளான், கீரிமலை, தையிட்டி, நயினாதீவு, வறுத்தலைவிளான் ஆகிய கிராமங்களில் உள்ள பாடசாலைகளிலும் கற்பித்தார். 1921இல் சுன்னாகம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் நிறுவிய பிராசீன பாடசாலையில் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று 15 வருடகாலம் அங்கு சேவை புரிந்தார். பிராசீன

பாடசாலை, பிரவேச பண்டிதர், பண்டிதர், பாலபண்டிதர், ஆகிய பரிட்சைகளுக்கு கல்வி புகட்டும் பாடசாலையாக விளங்கியது.

7. ஐயரவர்கள் முப்பத்திரண்டாவது வயதில் தமது மாமனாராகிய வறுத்தலைவிளான் யோகவன சாஸ்திரிகளின் ஏகபுதல்வியான அன்னலக்குமி அம்மையாரைத் திருமணம் செய்தார். இவர்களுக்குக் குழந்தைச் செல்வம் இருக்கவில்லை.

8. இலக்கணவித்தகர் இ.நமசிவாயதேசிகர், பண்டிதர் வித்துவான் க.சி. நடராஜன், பண்டிதர் ச. பொன்னுத்துரை, பண்டிதர் இளமுருகனார், பண்டிதர் ஆர்.கே. முருகேசன் பண்டிதர் செவ்வந்திநாத தேசிகர், ஆகியோர் ஐயரிடம் நீண்டகாலம் கல்விகற்றவர்கள்.

இவர்களைவிட நேரடியாக அமையாது அவ்வப்போது கணேசையருடன் தொடர்புகொண்டு தம்மை வளர்த்துக் கொண்டவர்களாக வித்துவான் பொன். முத்துக்குமாரன், பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை, திரு.ச.அம்பிகைபாகன், பேராசிரியர் வி. செல்வநாயகம், பேராசிரியர் சு.வித்தியானந்தன், கலைப்புலவர் நவரத்தினம், குலசபாநாதன், க.சி. குலரத்தினம் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் தன்னுடன் அத்தியந்த உறவு பூண்டிருந்ததாக ஐயரவர்கள் தமது தொல்காப்பியப்பதிப்பு முன்னுரையிலே குறிப்பிட்டுள்ளார்.

10. ஐயரவர்களின் தமிழ்ப்பணிகள் பலதரப்பட்டவை. அவர் இலக்கண வித்தகராகவும் சிறந்த போதனாசிரியராகவும், நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், உரைநடையாள ராகவும், ஆய்வாளராகவும், கண்டனப் பேரறிஞராகவும், கவிஞராகவும் விளங்கினார். சோதிட சாஸ்திரத்திலும் பயிற்சியுடையவராக இருந்தார்.

11. ஐயரவர்களின் தமிழ்ப்பணிகளிலே தலையாயது அவர் எழுதிய தொல்காப்பிய உரை விளக்கங்களாகும். இப்பணி கணேசையரை புகழின் உச்சநிலையில் வைத்தது. இவரது மாணவர்களில் ஒருவரும் பதிப்பாளருமான ஈழகேசரி

பொன்னையா அவர்கள், கணேசையரது அரிய ஆராய்ச்சி விளக்கத்துடன் தொல்காப்பியத்தைப் பதிப்பித்தகாலந்தொடக்கம் கணேசையரின் புகழ் குன்றின்மேல் இட்ட தீபம்போல் விளங்கத் தொடங்கியது. தொல்காப்பிய நூல்களைக் கற்பித்தலில் கஷ்டமுற்ற பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும் ஏனைய அறிஞர்களுக்கும், மாணவர்களுக்கும் இந்நூல் பெரும் பயன்மிக்கதாக அமைந்தது. ஐயரவர்கள் **தொல்காப்பியக்கடல்** எனவும் ஈழத்தின் **இலக்கண ஞாயிறு** எனவும் போற்றப்பட்டார்.

11. தமிழக அறிஞரான வித்துவான் அரசன் சண்முகனாருக்கும் ஐயரவர்களுக்கும் இடையில் ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் என்ற விடயத்தில் கருத்து வேறுபாடு தோன்றிற்று. அரசன் சண்முகனார் ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் வேறு வேறென்றார். ஐயரவர்கள் அவையிரண்டும் ஒன்று என வாதிட்டார். அவர்களது விவாதங்கள் தொடர்ந்து 'செந்தமிழ்' பத்திரிகையில் பிரசுரமாகின. அவை பேரறிஞர்களின் கருத்தைக்கவர்ந்தன. ஈற்றில் ஐயரவர்களின் கருத்தே சரியானது என்பது அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த விவாதமுடிவு ஐயரவர்களுக்கு மிகுந்த புகழைக்கொடுத்தது. இந்த விவாதம் நடைபெற்றபோது ஐயருக்கு வயது 25 மட்டுமே.

12. தமிழகத்து அறிஞர்கள் ஐயரவர்களின் புலமைத்திறன் அறிந்து பெரிதும் போற்றினர். பதிப்புத் துறையில் பிரபலம் பெற்ற உ. வே. சாமிநாதஐயர் அவர்கள் ஐயரவர்களுடன் கடிதத் தொடர்பைப் பேணிவந்தார். அவர் ஐயரவர்களுக்கு எழுதிய கடிதங்களில் ஒரு கடிதத்திலே பின்வருமாறு எழுதியுள்ளார்: 'தங்கள் பதிப்புகள் மிக்க திருப்தியை உண்டுபண்ணுகின்றன. நூலிலே அன்புவைத்து அதன்பாலுள்ள விஷயங்களை வெளிப்படுத்தலையே தனி இன்பமாகக் கொண்டு பலகாலம் ஆராய்ந்து பதிப்பிற்கும் முயற்சியுடையார் சிலரே. தாங்கள் அங்ஙனமே செய்துவருதலை மிகவும் பாராட்டுகிறேன். தாங்கள் அவ்வப்போது எழுதிவந்த இலக்கணக் கட்டுரைகளையும்

தங்கள் பதிப்புகளில் சேர்த்திருத்தல் தமிழாராய்ச்சியாளர்க்கு பெரிதும் பயன்படுவதாகும்.

மேலும், உ. வே . சாமிநாத ஐயர் அவர்கள், 'இரகுவமிசம்' என்ற நூலுக்கு கணேசையர் எழுதிய உரைக்குச் சிறப்புப் பாயிரம் அளித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அது பின்வருமாறு:

**உலம்பூத்த புயவரச கேசரியா ராய்ந்துமுன முரைத்த தாய**
**நலம்பூத்த சுவையிரகு வங்கிசத்திற் கினியவுரை நன்கி யற்றிப்**
**பலம்பூத்த தமிழ்வலவர் மதிப்பவெளிப் படுத்தினன்யாழ்ப் பாணமேயோன்**
**குலம்பூத்த நலமுடையோன் கணேசையப் பெயராளன் குணமிக் கோனே.**

ஈழத்துக்கு வரும் தமிழக அறிஞர்கள் ஐயர் இருக்குமிடம் தேடிச்சென்று அவருடன் உரையாடுவது வழக்கமாகும். அவ்வகையில் ரா.பி. சேதுப்பிள்ளை, தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், குன்றக்குடி அடிகளார், கி. வா. ஜகந்நாதன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கணேசையரது கட்டுரைகளைத் தமிழகம் எவ்வளவு ஆர்வத்துடன் எதிர்பார்த்தது என்பதற்கு செந்தமிழ் பத்திராதிபரும் பேரறிஞருமான மு. இராகவையங்கார் எழுதிய கடிதமொன்று சான்று பகரும் அதனைக் கீழே காண்க:

"தாங்கள் 'தொனி' என்னும் அரிய விடயம் அனுப்பிய பின்பு வேறு விஷயம் அனுப்பாமைக்குப் பலர் (அவாவுடன்) வருந்துகிறார்கள். தயை செய்து 'இராமவதாரச் செய்யுட் பாடாந்தரத்தின் தொடர்ச்சியை அனுப்பியவரின் உபகாரமாம்'.

13. தமிழ்ச்சங்க வித்துவான்களில் ஒருவராகவும் ஐயர் மதிக்கப்பட்டார்.

14. ஐயர் பின்வரும் நூல்களை இயற்றியுள்ளார்:
(1)குமாரசுவாமிப்புலவர் சரித்திரம் (1925), (2)குசேலர் சரித்திரம் (1931), (3) ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம், (1939), (4)இரகுவமிசம் -உரை முதல் ஒன்பது படலங்கள்(1915), (5) இரகுவமிசம் - உரை அடுத்த ஏழு படலங்கள்(1915), (6) மகாபாரதம் சூதுபோர்ச் சருக்கம் - உரை, (7)

வறுத்தலைவிளான் மருதடி விநாயகர் பிரபந்தம் (1956), (8) தொல்காப்பியம்:எழுத்ததிகாரம்- நச்சினார்க்கினியர் உரை விளக்கம். (1935), (9)தொல்காப்பியம் :சொல்லதிகாரம் -சேனாவரயர் உரைவிளக்கம் (1938), (10) தொல்காப்பியம்: பொருளதிகாரம் (முன் ஐந்து இயல்கள்) 'நச்சினார்க்கினியார் உரை விளக்கம் (1948), (11) தொல்காப்பியம்: பொருளதிகாரம் (பின் நான்கு இயல்கள்) பேராசிரியர் உரை விளக்கம்.(1943)(12) மேகதூதகாரிகை உரை, (13)வறுத்தலைவிளான் பிடாரத்தனை கண்ணகை அம்மன் ஊஞ்சல்(1975), (14)புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் ஊஞ்சல், (15)நாணிக் கண்புதைத்தல் என்ற ஒருதுறைக்கோவை (16)திருச் செல்வச்சந்நிதி நான்மணிமாலை, (17)புன்னை மும்மணிமாலை (18) மேலைக்கரம்பொன் சண்முகநாதன் திருவிரட்டை மணிமாலை. (19) அகநானூறு களிற்றுயானை நிரை (2002), (20) கவிச்சக்கரவர்த்தி கம்பனே - கம்பராமாயணக் கட்டுரைகள் (2011), (21) இலக்கண வரம்பு - இலக்கணக் கட்டுரைகள் (2012)

(இலங்கை இலக்கிய வரலாற்றுக்கு கணேசையரின் 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்' ஒரு முன்னோடி முயற்சியாகும் என பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்)

1903-1952 காலப்பகுதியில் கணேசையர் அவர்கள் தமிழகத்தில் இருந்து வெளிவந்த 'செந்தமிழ்' என்ற சஞ்சிகையில் 48 கட்டுரைகள் எழுதியுள்ளார். 1932-1957 காலப்பகுதியில் சுன்னாகம் ஈழகேசரி பத்திரிகையில் 17 கட்டுரைகள் எழுதியுள்ளார். (கட்டுரைகளின் பட்டியல் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா எழுதிய வித்துவ சிரோமணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும் (1989)என்ற நூலில் உள்ளது.

15. ஐயர் அவர்களின் ஷஷ்டியப்த பூர்த்திவிழா 08-10-1938 வெகுதானிய வருடம் புரட்டாதி மாதம் இருபத்தி இரண்டாம் நாள் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அறிஞர்பலரும் பெருந்திரளாகக் கூடி வண்ணை சிவன் கோயிலிலிருந்து ஐயர் அவர்களை

ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். இவ்விழாவில் உயர்திரு விபுலானந்த அடிகள், வண சுவாமி ஞானப்பிரகாசர், மறைத்திரு வை. இராமசாமி சர்மா, பண்டிதர் ம. வே. மகாலிங்கசிவம், சு. நடேசபிள்ளை, முகாந்திரம் எஸ். கந்தையா ஆகியோர் ஐயர் அவர்களின் தமிழ்ப்பணியையும் பெருமைகளையும் பாராட்டிப்பேசினர். அன்று ஐயர் அவர்களுக்கு பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

சென்னை தமிழ் வளர்ச்சிக்கழகத்தார் தமது நான்காவது ஆண்டுவிழாவை யாழ்ப்பாணத்தில் *29-03-1951* முதல் மூன்றுநாட்கள் பரமேஸ்வராக்கல்லூரி முன்றலில் பெருவிழாவாக நடத்தினர். தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் கலந்துகொண்ட அவ்விழாவில் உலகப் புகழ்படைத்த விஞ்ஞான நிபுணர் டாக்டர்.கே. எஸ். கிருஷ்ணன் அவர்களைக்கொண்டு ஐயருக்குப் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தனர். பன்மொழிப்புலவர் தெ. பொ.மீனாட்சி சுந்தரனார், ஆர். பி. சேதுப்பிள்ளை, சுதேசமித்திரன் ஆசிரியர் ஸ்ரீநிவாசன், சு. நடேசபிள்ளை ஆகியோர் ஐயரின் பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

நந்தன ஆண்டு கார்த்திகைத் திங்கள் பதினாறாம் நாளில் *(01-12-52)* ஆரிய திராவிடப்பாஷா விருத்திச் சங்கம் தனது 29ஆம் ஆண்டு விழாவில் ஐயருக்கு **வித்துவ சிரோமணி** பட்டம் அளித்துக் கௌரவித்தது.

*16.* ஐயரவர்கள் தமது குலதெய்வமான ஆயாக்கடவை ஐங்கரன் மீது ஊஞ்சல் பாடியுள்ளார்.

தமது தந்தையாரின் விருப்பப்படி ஆயாக்கடவை ஐங்கரன் ஆலயத்தில் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய உற்சவமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வித்தார்.

தமது அறுபதாம் ஆண்டு நிறைவு ஷஷ்டியப்த விழாவில் தமக்கு அளிக்கப்பட்ட பொற்கிழிகொண்டு விநாயகப் பெருமானுக்குப் பொற்கிரீடமும் உபவீதமும் செய்வித்து சாத்தி மகிழ்ந்தார்.

17. ஐயரவர்கள் தனது பிறந்த ஊராகிய புன்னாலைக்கட்டுவனில் பெரும் அபிமானம் கொண்டவர். தான் எழுதிய அத்தனை நூல் களிலும் **ஆக்கியோன்: புன்னாலைக்கட்டுவன் சி. கணேசையர்** எனப்பெயர் பொறித்து ஊருக்குப் பெருமை தேடித்தந்தவர். ஐயரவர்கள் தமது புனைபெயரை 'புன்னைமா நகரவாசி' எனக் கொண்டு பல கண்டனக்கட்டுரைகளையும் விவாதக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

18. ஐயரவர்களின் தமிழ்ப்பணிகளிலே தலையாயது அவர் எழுதிய தொல்காப்பிய உரை விளக்கங்களாகும். இப்பணி கணேசையரை புகழின் உச்சநியையில் வைத்தது. தொல்காப்பிய நூல்களைக் கற்பித்தலில் கஷ்டமுற்ற பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கும் ஏனைய அறிஞர்களுக்கும், மாணவர்களுக்கும் இந்நூல் பெரும் பயன்மிக்கதாக அமைந்தது. ஐயரவர்கள் 'தொல்காப்பியக்கடல்' எனவும் 'ஈழத்தின் இலக்கண ஞாயிறு' எனவும் போற்றப்பட்டார். தொல்காப்பியத்தை ஆராய்ச்சி செய்யும்போது இன்னும் பல திருத்தங்களைச் செய்ய வேண்டிய நிலையில், இலங்கை முழுவதிலும் இதற்கான திருத்தமான பிரதிகள் கிடைக்கவில்லை. எனவே, கணேசையர் தமிழ்நாட்டுக்கு சென்று, மதுரைத் தமிழ்ச் சங்கப் பிரதிகளைப் பார்த்துத் தம்முடைய குறிப்புகளைத் திருத்தம் செய்துகொண்டார். "கடும் உழைப்புடன் தன் நுண்மையான அறிவைப் பயன்படுத்தி தொல்காப்பிய மூலத்திலும் உரையிலும் கணேசையர் பல திருத்தங்களைச் செய்தார். எடுத்துக்காட்டாக, பேராசிரியர் உரை எழுதிய தொல்காப்பிய பொருளதிகார நூற்பாக்கள் 300,302,307,313,369,419,448,490,491 போன்றவற்றில் அறிவியல் பூர்வமான பல திருத்தங்களை கணேசையர் செய்துள்ளார்" எனக் குறிப்பிட்டுள்ளார் தமிழறிஞர் பொ. வேலுசாமி.

19. ஈழத்து அறிஞர்கள் பலர் தமிழ்நாடு சென்று அங்கு தொடர்புகளைப் பேணிப் புகழ்பெற்றனர். ஆனால் ஐயரவர்கள் தனது கிராமமாகிய புன்னாலைக்கட்டுவனில் இருந்து

கொண்டே தமிழறிஞர்களை தமது புலமைத் திறனால் ஈர்த்து புகழ்பெற்றதோடு அதன் தொடர்பில் புன்னாலைக்கட்டுவன் கிராமத்தின் பெயரை தமிழ்கூறு நல்லுலகில் நிலைநாட்டியவர்.

20. ஐயரவர்கள் 1932ஆம் ஆண்டிலிருந்து தமது மனைவியின் ஊராகிய வறுத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் ஓர் ஆச்சிரமம் அமைத்து துறவு வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அங்கும் சனி ஞாயிறு வாரங்களில் மாணவர்களுக்குப் பாடஞ்சொல்லி வந்தார்.

21. தமது 81ஆவது வயதில் 08-11-1958 காலை 6.30 மணியளவில் அபரத் துவாதசி திதியில் உத்தர நட்சத்திரத்தில் அன்னார் சிவபதமடைந்தார்.

22. ஐயரவர்களின் ஞாபகச் சின்ன மண்டபம் ஒன்று வறுத்தலை விளானில் அமைக்கப்பட்டுள்ளது.

    ஐயரவர்களின் உருவச் சிலை புன்னாலைக்கட்டுவனில் அன்னாரது குலதெய்வமாகிய ஆயாக்கடவை ஐங்கரன் முன்றலில் அமைக்கப்பட்டுள்ளது.

    ஐயரது பெயரைத்தாங்கிய கணேச சனசமூக நிலையம், கணேச முன்பள்ளி ஆகியனவும் புன்னாலைக்கட்டுவனில் இயங்கிவருகின்றன.

❏



**புன்னாலைக் கட்டுவன்
ஆயாக்கடவை
சித்திவிநாயகர் ஆலய முன்றலில்
அமைந்துள்ள
வித்துவசிரோமணி
சி. கணேசையர் அவர்களது
உருவச்சிலை**

# பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்துவரும் கலாபூசணம் தி. ஞானசேகரன் ஐயர் அவர்கள்

*திரு. ம. துஸ்யந்தன்*

................................
................................


1962 இல் உயர்கல்வி பெறுவதற்காக ஞானசேகரன் அவர்கள் கொழும்பு சென்றனர். மருத்துவத் தொழில் புரிந்த அவர் மிக நீண்டகாலம் மலையத்திலே வசித்துவந்தார். கடந்த இரு தசாப்தங்களாக நடைபெற்ற உள்நாட்டுப் போரும் எம் ஊரோடான அவரது தொடர்வுகளுக்குத் தடைக்கல்லாகியது. ஆயினும் தான் தவழ்ந்த மண்ணை அன்னார் என்றும் மறந்திருக்கவில்லை. அவர் எழுதிய முதல் நாவலான புதிய சுவடுகள் எமது கிராமத்தையே பகைப்புலமாகக் கொண்டது. அவரது பல சிறுகதைகளும் எமது மண்வாசனையை வீசுவனவாக உள்ளன.

எமது கிராமத்தில் ஞானசேகரன் செய்த மகத்தான பணிகளில் ஒன்று 1983 இல் வித்துவசிரோண்மணி கணேசையருக்கு சித்தி விநாயகர் ஆலய வளாகத்தில் சிலை நிறுவுவதில் தனது மாமனாரோடு முக்கிய பங்காளியாக நின்று செயற்பட்டமையாகும்.


எமது சிறார்களுக்கென சிறந்த ஒரு முன்பள்ளியை அமைக்க வேண்டுமெனக் கணேச சனசமூ நிலையத்தினர் முடிவு செய்த போது, அதற்கான காணி ஒன்றினை ரூபா ஒரு லட்சத்துக்குக் கொள்வனவு செய்து உதவிய பெருந்தகையாளர் இவர். இவரது கலை இலக்கிய சேவைகயைப் பாராட்டி இலங்கை அரசு ‘கலாபூசணம்’ விருது வழங்கிக் கௌரவித்துத்துள்ளது.

**யாழ். புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை,
75ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு மலர், 2005, பக். 21**





**வறுத்தலைவிளானில் அமைந்துள்ள**
**வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்களது நினைவு மண்டபம்**



வித்துவசிரோமணி

**சி. கணேசையர் அவர்கள் ஜாதகம்**

[ 26--3-1878 — 8-11-1958 ]

ஜனனம்: ஈசுவர ௵ பங்குனி ௴ 15௳ (26-3-1878) செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 1 மணி 20 நிமிஷம். நட்சத்திரம் : பூராடம் 3ஆம் கால்.

இராசி நிலை

| | | | |
|---|---|---|---|
| சூரி. புத சனி | | குஜ | லக் |
| சுக் | இராசி நிலை | | கேது |
| குரு ராகு | | | |
| சந் | | | |

நவாம்ச நிலை

| | | | |
|---|---|---|---|
| குரு கேது | குஜ | | லக் |
| | நவாம்ச நிலை | | சனி |
| | | | |
| புத | சுக் | சூரி சந் | ராகு |

அயனும்சம் 22 பா. 7 க. 56 வி.

க - 43

**வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்களின் ஜாதகம்**

# 06

# ஊருக்கு உழைத்த உத்தமர்கள்

**பு**ன்னைநகரில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து ஊருக்கு உழைத்த உத்தமர்கள் எம் முன்னோர்கள். கல்விப்பணி, சமூகப்பணி, சமயப்பணி ஆற்றிவந்தவர்கள் இவர்கள். தாம் ஆற்றிய பாரம்பரியம் மிக்க நற்பணிகளை சங்கிலித் தொடர்போல அடுத்துவந்த தலைமுறையினருக்கும் எடுத்து வந்தவர்கள். சிறப்புமிக்க வாழ்க்கை நெறிகளை தமது சந்ததிக்குள் செறிய வைத்தவர்கள்.

**சிவானந்தக் குருக்கள்**

இவர் எனது மாமா. எனது தந்தையின் மூத்த சகோதரி பொன்னம்மா என்பவரை மணந்தவர். இவரிடத்திலேதான் நான் குருகுலமுறையில் வேத மந்திரங்களைக் கற்றேன்.

இவர் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றைக் கற்றுணர்ந்தவர். இலங்கை அரசின் தபாற் கந்தோர் தலைமைப் பீடத்தில் தொழில் கிடைத்தபோதும், களங்கமில்லாத சேவை கணேசன் சேவையே என அரசசேவையை வெறுத்து ஆயாக்கடவை ஐங்கரன் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். (01) இந்தியாவில் குருகுலத்தில் சேர்ந்து இளவயதிலேயே வேத ஆகமங்களைக் கற்றுணர்ந்தவர். அந்தக் காலத்தில் எங்களூரி

லிருந்து மயிலிட்டி என்ற கிராமத்திற்குச் சென்றால் வள்ளம் மூலம் இரண்டு மணித்தியாலத்தில் இந்தியாவுக்குச் சென்றுவிடலாம். மாமா அடிக்கடி இந்த வள்ளப் பயணத்தின் மூலம் தனது குருகுல நண்பர்களைச் சந்திக்கவும் வேதாகமங்களில் ஏற்படும் ஐயங்களைத் தீர்ப்பதற்கும் இந்தியா சென்றுவிடுவாராம். அங்கிருந்தே, தான் இந்தியா வந்திருப்பதைத் தாய்தந்தையருக்குத் தெரிவிப்பாராம். அவர்கள் இங்கிருந்து அவருக்குப் பணம் அனுப்பி வைப்பார்களாம். அந்தக்காலத்தில் புதிய சினிமாப் படங்கள் வெளிவரும்போதும் எங்களூரிலிருந்து படம்பார்க்கப் பலர் வள்ளங்களில் சென்று வந்ததாகவும் அறியமுடிகிறது.

அவர் உஷாக்காலத்திற்கு முன்னரே நித்திரை விட்டெழுந்து காலைக்கடன்களை நிறைவேற்றியபின் குளித்து சிவபூசை செய்வார். அதன்பின் கோயில் சூழலில் உள்ள பூமரங்களிலிருந்து பூக்கொய்வார். திருமஞ்சனக் கிணற்றில் நீர் இறைத்து மூலவருக்கு அபிஷேகம் செய்து, அலங்காரம் செய்து பூசை செய்வார். அவருடைய செயற்பாடுகள் யாவும் குறித்த நேரத்தில் மணிக்கணக்குப் பிசகாமல் நிகழும்.

பூசை முடிந்து உணவருந்திய பின் கோயில் முன்றலுக்குச் செல்வார். அங்குள்ள வாசிகசாலையில் அமர்ந்து அன்றைய ஆங்கில, தமிழ் தினசரிகளை வாசிப்பார். முன்னர் ஆயம் இருந்த இடத்தில் தெருவோரமாக ஒரு கிணறு இருந்தது. கிணற்றிலிருந்து சிறிது தூரத்தில், ஆறடி நீளமும் நான்கடி அகலமும் கொண்ட கல்லில் பொழியப்பட்ட நீர்த்தொட்டி ஒன்று இருந்தது. இந்த நீர்த்தொட்டியைத் தினமும் கழுவிச் சுத்தம் செய்து கிணற்றிலிருந்து நீரெடுத்து அதனுள் நிரப்புவார். எனது இளமைப் பராயத்தில் இப்போதுள்ளதுபோல் பஸ்களோ, கார்களோ அதிகம் இருக்கவில்லை. மாட்டுவண்டில் பாவனையே அதிகமாக இருந்தது. மாட்டு வண்டிலில் வருபவர்கள் கோயிலின் முன்னாலுள்ள மடத்தில் இருந்து இளைப்பாறி, மாடுகளை இந்தத் தொட்டியில் நீர் அருந்தச்செய்து தமது பயணத்தைத் தொடர்வர். இங்கு ஒரு சுமைதாங்கியும் இருந்தது. தலைச்சுமையாக வருபவர்கள்

தங்களது தலைச்சுமைகளை அதில் இறக்கிவைத்து சிரமபரிகாரம் செய்தபின் தமது பயணத்தைத் தொடர்வதையும் காணலாம். இந்த நீர்த்தொட்டியின் அருகே ஒரு தெருவிளக்குக் கம்பம் கோவில் வாசலின் நேராக அமைந்திருந்தது. அந்தத் தெருவிளக்குக் கம்பத்தின் உச்சியில் உள்ள கண்ணாடிக்கூட்டின் புகை மண்டிய நான்குபுறக் கண்ணாடிகளைத் தினமும் சுத்தம் செய்து, விளக்குக்கு மண்ணெண்ணெய் நிரப்பி மாலை வேளைகளில் ஒளிரச் செய்வார். இரவு நேரங்களில் அந்த நீண்ட தெருவில் இந்தத் தெருவிளக்கு மட்டுமே பளீரென ஒளி உமிழ்ந்த வண்ணமிருக்கும். அந்தத் தெருவிளக்கின் ஓரமாக ஒரு பெரிய அரசமரம் இருந்தது. அந்த அரசமரத்திலிருந்து பழுத்தல் இலைகள் சொரிந்து நிலம் எங்கும் பரந்திருக்கும். அவற்றை ஒரு 'குத்தூசி'யால் குத்திக்குத்திப் பொறுக்குவார். அந்தப் பகுதி எந்த நேரமும் கஞ்சல் குப்பைகளின்றி இருக்க வேண்டுமென்பது அவரது நினைப்பு. தெருவோரமாக இரு மருங்கிலும் நிழலுக்காக சில மரங்களை நாட்டுவார். அவற்றைக் கால்நடைகள் தின்றுவிடாமல் இருக்க சுற்றிவரத் தடிகளை ஊன்றி முக்கோண வடிவில் மறைப்புக் கட்டுவார். அவற்றிற்குத் தினமும் தண்ணீர் ஊற்றுவார். பிற்பட்டகாலத்தில் அவை பெரும் விருட்சங்களாகி நிழல் தந்து கொண்டிருந்தன. கோயிலின் முன்புறத்தில் ஒரு பூஞ்சோலை இருந்தது. அங்கிருக்கும் பூஞ்செடிகளுக்கும் கிணற்றிலிருந்து வாளியால் நீரிறைத்து வாய்க்கால்மூலம் நீர் பாய்ச்சுவார். சிறுவர்களாகிய நாங்கள் 'பாத்தி' கட்டுவோம்.

அறுபது வயது நிரம்பிய ஓர் அந்தண சிரேஷ்டர் -காண்பவர்கள் கையெடுத்துக் கும்பிடும் ஒரு சிவப்பிராமணர் இவற்றையெல்லாம் ஏன் செய்கிறார்? வேறு யாரையாவது கொண்டு இவற்றைச் செய்விக்க முடியாதா? என்றால் ........

இவற்றையெல்லாம் அவர் சிறுவயதிலிருந்தே செய்து வருகிறார். சமூகக் கடமையாக நினைத்துச் செய்கிறார். இவற்றை அவரது மூதாதையர் அவருக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

அவற்றையே தனது அடுத்த சந்ததிக்கு அவர் கற்றுக்கொடுக்கும் பணியில் ஈடுபட்டார்.

### பிரம்மஸ்ரீ சி. சுவாமிநாத ஐயர்

சிவானந்தக்குருக்களின் மகள் பாலாம்பிகையம்மாவின் (இராசாத்தியம்மா) கணவனது பெயர் பிரம்மஸ்ரீ சி. சுவாமிநாதஜயர் (இவரை சர்மா ஐயர் என ஊரவர்கள் அன்புடன் அழைப்பர்). இவர் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். ஆசிரிய சேவையில் இருந்து ஒய்வு பெற்றபின் ஆயாக்கடவை ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு திருப்பணி வளர்ச்சிக்கு உதவியவர். சுவாமியை அலங்கரிப்பதில் திறமை வாய்ந்தவர். இவர் வித்துவசிரோமணி சி. கணேசையரின் பேரர் ஆவார். ஆயாக்கடவை ஐங்கரனின் விசேஷ நாட்களில் வித்துவ சிரோமணியின் ஊஞ்சற்பாக்களை இசையோடு பாடுவதை வழக்கமாக்கிக்கொண்டிருந்தார். இவர் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா மலரின் தொகுப்பாசிரியருமாவார்.

மேலும், **இவர் இக்கட்டுரை ஆசிரியர் தி. ஞானசேகரஜயருடன் இணைந்து வித்துவசிரோமணி சி. கணேசையருக்கு சிலை ஒன்றை ஆலய முன்றலில் நிறுவியுள்ளார்.** (இத்தகவல் புன்னாலைக்கட்டுவன் அரசினர்பாடசாலை 2005ஆம் ஆண்டு வெளியிட்ட பவளவிழா மலரில் 21ஆம் பக்கத்தில் திரு. ம. துஷ்யந்தன் எழுதிய கட்டுரையிலும் பதிவாகியுள்ளது)

### சோ.குமாரசாமி ஐயர் (1867 – 1957)

சிவானந்த ஐயருக்கு ஒரு பெரியப்பா இருந்தார். அவரது பெயர் குமாரசாமி ஐயர். 18-08-1867இல் பிறந்தவர். அவர் கைதடி சுப்பையர் - நாகமுத்தம்மா ஆகியோரின் மகள் பறுவதவர்த்தனி அம்மாவைத் திருமணம் செய்தவர். திருமணமாகி சிறிது காலத்தில் மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டதால் தனிக்கட்டையாக நீண்ட காலம் வாழ்ந்தவர். இரவீந்திரநாத் தாஹூர் போன்ற தோற்றமுடையவர். கையிலே எப்பொழுதும் ஒரு ‘பொல்லு’ இருக்கும். அதன் கைப்பிடி வளைவாக இருக்கும். கோயில் வாசலில் மாலை வேளைகளில்

அமர்ந்திருப்பார். 'பார்வை பார்க்க', 'நூல் கட்ட' என அவரிடம் பலர் வருவார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு பழந்தமிழ் பாடல்களை எடுத்துக் கூறுவதில் வல்லவர். இவ்வளவு பெருந்தொகையான பாடல்களை அவர் எவ்வாறு மனனம் செய்தார் என்பதை நினைக்கும்போது பிரமிப்பாக இருக்கும். கோயிலில் புராணபடனம் நடக்கும்போது அவர் பயன் சொல்வார். வாசிப்பவர் பாடலைப் பிழையாக வாசித்தாலோ அல்லது பிழையாகச் சந்தி பிரித்தாலோ அவருக்குக் கோபம் வந்துவிடும். கையிலிருக்கும் பொல்லினால் வாசிப்பவரை ஓங்கி அடித்து விடுவார். பின்னர் தானே மனப்பாடமாக இருக்கும் அந்தப் பாடலைச் சொல்லி பயனையும் சொல்லுவார். எங்களூரில் புராணபடனம் வாசித்தவர் யாவருமே அவரிடம் அடி வாங்கியவர்கள்தான். அவரது முகத்தில் எந்த நேரமும் அறிவொளி வீசிக்கொண்டிருக்கும். மிகப்பெரிய தமிழறிஞரான அவர் வித்துவசிரோமணி கணேசையரின் ஒன்றுவிட்ட சகோதரராவார்.

**இரவுப்பாடசாலைகளை நடத்திய அந்தணர்கள்**

இப்போதெல்லாம் மாணவர்களுக்கு 'ரியூஷன்' வகுப்புகள் இருப்பதுபோல் அக்காலத்தில் இருக்கவில்லை. ஆசிரியர்கள் பாடசாலை தவிர்ந்த நேரங்களில் இலவசமாகவே மாணவர்களுக்குக் கற்பித்தார்கள். அனேகமாக மாலை ஆறு மணிமுதல் இரவு ஒன்பது மணிவரை இத்தகைய கற்பித்தற் செயற்பாடுகள் இடம்பெறும்.

அரிக்கன் லாம்பு ஒன்றை நடுவில் வைத்து சுற்றிவர மாணவர்கள் ஐந்தாறுபேர் வட்டமாக அமர்ந்திருப்பார்கள். சிறியவர்கள் பெரியவர்கள் ஆண்பெண் என்ற பேதமெல்லாம் இங்கு இருக்காது. இடம்கிடைக்கும் இடத்தில் இருந்து படிக்கவேண்டியதுதான். இவ்வாறு மூன்று நான்கு பகுதிகளாக அரிக்கன் லாம்புகளைச்சுற்றி மாணவர்கள் அமர்ந்திருப்பர். இந்த அரிக்கன் லாம்புகளை பெரிய வகுப்பு மாணவர்கள்தான் படிக்க வரும்போது கொண்டு வரவேண்டும். இராப்பள்ளிக்கூடம் முடிந்து வீடு திரும்பும்போது பெரிய மாணவர்களே சிறியவர்களை அவர்களது வீட்டிலே கொண்டுசென்று ஒப்படைக்கவேண்டும். விரும்பிய எவரும்

இந்த இரவுப்பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்கலாம். ஆசிரியர் ஒரு திண்ணையில் அமர்ந்திருப்பார். மாணவர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு விடையளிப்பார். முக்கியமாக தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் இங்கு கற்பிக்கப்படும்.

இத்தகைய இரவுப் பாடசாலைகளை வெவ்வேறு காலப்பகுதியில் எனது மாமா முறயான தங்கசாமி ஐயர் என்பாரும் எனது பெரிய தந்தையார் குமாரசாமி ஐயரும் நடத்திவந்தார்கள். இந்த இரவுப்பாடசாலை முதலில் கோயிலார் மடத்திலும் பின்னர் ஆயாக்கடவை ஐங்கரன் மண்டபத்திலும் பிற்பட்டகாலத்தில் ஆசிரியர்களின் இல்லங்களிலும் நடைபெற்றன.

இந்த இரவுப்பாடசாலையில் உள்ள சிறப்பு என்னவென்றால் ஒரு மாணவனுக்கு ஆசிரியர் கூறுவதை அங்கிருக்கும் பல்வேறு வகுப்புமட்டத்திலுள்ள மாணவர்களும் செவிமடுப்பார்கள். உயர்வகுப்பு மாணவர்களுக்கு தமிழ்ப்பாடத்தில் ஆசிரியர் கூறும் இலக்கியச்சுவை மிகுந்த பகுதிகளெல்லாம் சிறுவர்களுக்கும் பொசிந்துவிடும். ஒரு மாணவன் நளவெண்பாவில் கேள்விகேட்பான். மற்றவன் கம்பராமாயணத்தில் கேட்பான். இன்னொருவன் மகாபாரதத்தில் கேட்பான். வேறொருவன் சிலப்பதிகாரத்தில் கேட்பான்.

இப்படியாக அந்த இரவுப்பாடசாலைகளில் ஆறேழு வருடங்கள் நான் கற்றபோது பெற்ற பழந்தமிழ் இலக்கிய அறிவு பரந்துபட்டது.

## சி.தங்கசாமி ஐயர் (22.10.1901 – 01.08.1953)

தங்கசாமி ஐயர் தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியில் கல்வி கற்றவர். அங்கு S.S.C வரை கற்று அக்கல்லூரியிலேயே சில காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். பின்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் ஆங்கிலப் பயிற்சி பெற்ற ஆசிரியராக விளங்கியவர். பாலபண்டிதர் சோதனையில் சித்தியடைந்தவர். பாப்பா பாட்டு, பிள்ளைப்பாடம் ஆகிய நூல்களின் இடம்பெற்ற இவரது பாடல்கள் போட்டிகளில் பரிசு பெற்றவை. வசாவிளான்

வேலுப்பிள்ளை வித்தியாசாலை, ஊரெழு கணேச வித்தியாசாலை, ஆகியவற்றில் கடமையாற்றி கடைசியாக குப்பிளான் விக்னேஸ்வரா பாடசாலையில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர். எங்கள் ஊரில் சனசமூக நிலையம் தோன்றுவதற்கு முன்னரே 'இந்து இளைஞர் மன்றம்' என்ற அமைப்பினைத் தோற்றுவித்து சமூகப்பணிகள் ஆற்றியவர். சமூகம் தொடர்பான சிந்தனைகளை இளைஞர்களிடையே ஏற்படுத்தியவர். இத்தகைய இந்து இளைஞர் மன்றத்தை வசாவிளானில் தான் கற்பிக்கும் காலத்தில் ஏற்படுத்தி அங்கும் பணிபுரிந்தவர்.

1934ஆம் ஆண்டில் தமிழ்நாடு லட்சுமி அம்மாவைத் திருமணம் செய்தார். மகாலிங்க ஐயர், சுப்பிரமணிய ஐயர், சரோஜினி ஆகியோர் இவரது பிள்ளைகளாவர்.

இவர் ஒரு கவிஞர். தனது கற்பனையில் ஒரு கவிதை உற்பவித்துவிட்டால் தனது சுட்டு விரலால் முதலிலே அந்தக் கவிதையை காற்றில் எழுதுவார். பார்க்க வேடிக்கையாக இருக்கும். ஊரில் யாராவது அமரத்துவம் எய்திவிட்டால் இரங்கற்பா எழுத இவரிடம்தான் வருவார்கள். அக்காலப் பத்திரிகைகளில் சில கவிதைகளை எழுதியிருக்கிறார். அக்காலத்தில் பிரபல்யமாக இருந்த ஆனந்த விகடன் குறுக்கெழுத்துப் போட்டிகளில் கலந்துகொள்வது அவரது பிரதான பொழுதுபோக்காக இருந்தது.

இவர் மிகவும் கண்டிப்பானவர். நான் இவரிடம் கல்விகற்ற காலத்தில் தினமும் ஒரு நாலடியார் பாடலை மனனம் செய்துவரும்படி எனது வயதையொத்த மாணவர்களிடம் கூறுவார். மனனம் செய்து ஒப்புவிக்கத் தவறினால் மாணவனின் மணிக்கட்டில் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு பிரம்பினால் பின்புறத்தில் சுழரச் சுழர அடிப்பார். அவரது அடிக்குப் பயந்தே நான் நாலடியார் முழுவதையும் மனனம் செய்தேன்.

## துரைச்சாமி ஐயர் குமாரசாமி ஐயர் (1906–1990)

இவர் எனது பெரியதந்தையாராவார். கல்வி கேள்விகளில் நான் சிறந்து விளங்க அத்திபாரமிட்டவர் இவரே. அதற்காக

அயராது உழைத்தவர். இவர் பிரபல சோதிடரும் ஆசிரியருமாவார். இவர் புன்னாலைக்கட்டுவன் தமிழ் வித்தியாசாலை, ஆங்கில வித்தியாசாலை, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றவர். இலண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையில் திறமைச்சித்தி பெற்றவர். ஆசிரிய பயிற்சிக் கல்லூரித் தேர்வுச் சித்தி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியராகி ஏழாலை, சிறுப்பிட்டி, நவாலி, தண்ணீரூற்று முல்லைத்தீவு, புன்னாலைக்கட்டுவன் ஆகிய கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியப்பணி புரிந்தவர். இவர் ஒரு புராணபடன வித்தகருமாவாவார். ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்தில் அறுபது ஆண்டுகளுக்கு மேலாகக் கந்த புராணப்படிப்பில் ஈடுபட்டு உழைத்தவர். அவரது புராணபடன மகிமையைப் பாராட்டி ஆயாக்கடவை ஆலயத்தில் 1996ஆம் ஆண்டு பல அறிஞர்கள் கூடிய அவையில் பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இவர் நீண்ட காலமாக இரவுப் பாடசாலைகளை நடத்தி ஊர்ச்சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்கு உழைத்தவர்.

## கே.சி.பி ஐயர் (31.3.1907 – 23.12.1969)

இவரது முழுப்பெயர் கதிர்காமஐயர் செல்லையாஐயர் பாலசுப்பிரமணியஐயர் இதன் சுருக்கமே கே.சி.பி ஐயர்.

இவர் தமிழும் வடமொழியும் கற்றதோடு ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்று விளங்கினார். உரும்பிராய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி புகழ்பெற்ற ஆசானாக விளங்கினார். பின்னர் எழுதுவினைஞர் பதவியேற்று இரண்டாந்தர வகுப்புக்கு உயர்வுபெற்றார்(02) அக்காலத்தில் கல்வித்திணைக்களத்தில் அவர் உயர் அதிகாரியாகப் பணியாற்றியவர். அரசாங்க மட்டத்தில் அதிக செல்வாக்குடையவராக விளங்கினார். 'தமது ஊருக்காக வாழ்ந்த உத்தம சீலரான இவர் இளவயதிலேயே கொழும்பிலே விவேகானந்த சபையின் காரியதரிசியாக இருந்து அரிய தொண்டாற்றி அந்த ஸ்தாபனத்தைப் பலப்படுத்தினார்' என முன்னாள் ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கே. பி. ஹரன்

குறிப்பிட்டுள்ளார்.(03) அத்தோடு இந்துசாதனப் பத்திரிகையின் ஸ்தாபக செயற்குழுவின் உபதலைவராகவும் இவர் விளங்கினார் எனவும் அறிய முடிகிறது.

'பிறந்த ஊராகிய புன்னாலைக்கட்டுவனில் அரசாங்க வைத்திய சாலை, சனசமூக நிலையம், தோன்றுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்தார்' என வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபராக இருந்த ச. அம்பிகைபாகன் குறிப்பிடுகிறார்.(04)

ஆரம்பத்தில் வைத்தியசாலைக்கெனத் தனியான கட்டிடம் இருக்கவில்லை. கோயிலின் முன்னால் இருந்த தாமோதரம்பிள்ளை கட்டிய மடத்தில் கிழமைக்கு மூன்று நாட்கள் தூர இடத்திலிருந்து வைத்தியர் ஒருவர் வந்து மருந்து கொடுத்துக் கொண்டிருந்தார். பின்னர் அகிலேச உடையார் என்பவரின் கட்டிடத்திற்கு வைத்தியசாலை மாற்றப்பட்டபின் தினசரி அங்கு வைத்திய சேவை இடம்பெறத் தொடங்கியது. வைத்தியசாலை அமைந்த ஒழுங்கை ஆஸ்பத்திரி ஒழுங்கை எனப் பெயர் பெறலாயிற்று.

சேர்.பொன். இராமநாதன் அவர்களின் உதவியையும் பொது மக்களின் ஆதரவையும் பெற்றே கே. சி. பி. ஐயர் இப்பணிகளை ஆற்றினார் என அறிய முடிகிறது.(05) இவர் எமது கிராமத்தில் உபதபால் நிலையம் ஒன்றை நிறுவுவதற்கும் முன்னின்று உழைத்தார். அயற்கிராமங்கள் இத்தகைய வாழ்க்கை வசதிகளைப் பெறத் தொடங்கியதற்குப் பல்லாண்டுகள் முன்னரே எங்கள் ஊரில் இந்த வசதிகள் ஏற்பட்டுவிட்டன. இதன் காரணமாக எங்களூரின் மகத்துவம் மேலும் சிறப்புற்றது. அயற்கிராமங்களான, ஏழாலை, குப்பிழான், குரும்பசிட்டி, ஊரெழு, ஈவினை, அச்செழு போன்ற இடங்களிலிருந்து மக்கள் எமது கிராமத்துக்கு மருத்துவத் தேவைகளுக்காகவும், தபாற்போக்குவரத்துத் தேவைகளுக்காகவும் வரவேண்டியிருந்தது.

இவற்றோடு அக்காலத்தில் ஊரில் ஒரு கூட்டுறவுப் பாற்பண்ணை அமைப்பதற்கும் காரணராக விளங்கினார். கிராம முன்னேற்றச் சங்கம், ஐங்கரன் ஆலய கூட்டுறவுப் பிரார்த்தனைச்சபை, பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஆகிய மன்றங்களின் காரியதரிசியாகவும் திறம்படப் பணிபுரிந்தார்.

கே.சி.பி ஐயரின் தாத்தா கதிர்காம ஐயர் அவர்களே எங்கள் ஊரில் தமிழ்ப்பாடசாலையை ஆரம்பித்தவர். அவர் நிறுவிய பாடசாலை அமைந்த காணி தற்போதுள்ள பாடசாலை அமைந்திருக்கும் இடம்வரை கிழக்குப் புறமாக வியாபித்து இருந்தது எனவும் தெரு நிர்மாணத்தின்போது அக்காணி தெருவினால் ஊடறுக்கப்பட்டதெனவும் அறிய முடிகிறது. கதிர்காமையர் தற்போதுள்ள பாடசாலையின் சிறுவர் விளையாட்டிடம் அமைந்திருக்கும் இடத்தில் அக்காலத்தில் வசித்துவந்தார். தெருவோரமாக அவர் வசித்து வந்தமையால் அவரது மனைவி தெருவிலாச்சி என உறவினர்களாலும் ஊரவர்களாலும் அன்புடன் அழைக்கப்பட்டதாக அறியமுடிகிறது. இவரது மகன் செல்லையரும் இப்பாடசாலையில் ஆசிரியராக இருந்தவர். இப்பாடசாலை அரசினரால் பொறுப்பேற்கப்பட்டு பலவருடங்களின் பின்னர் பாடசாலையை விரிவாக்கம் செய்யும் நோக்குடன் தெருவின் கிழக்குப் புறத்தே பாடசாலைக்குரிய காணியில் 1927ஆம் ஆண்டு புதிய கட்டிடம் அரசாங்கத்தினரால் நிர்மாணிக்கப்பட்டது. கே. சி. பி. ஐயர் அவர்களுக்கும் சேர் பொன் இராமநாதன் அவர்களுக்கும் இடையே இருந்த பரிச்சயமும் நெருக்கமும் காரணமாக, தமது மூதாதையர் உருவாக்கிய பாடசாலையின் புதிய கட்டிட அடிக்கல் நாட்டுவிழாவுக்கு ஐயரவர்கள் சேர்.பொன் இராமநாதனை அழைத்துவந்தார் என்பது வரலாறு.

எங்களூரில் அந்தக் காலத்தில் ஒருவர் எஸ். எஸ். சி. சோதனை பாஸ் பண்ணிவிட்டால், ஒருசில மாதங்களிலேயே அரசாங்க உத்தியோகம் பெற்றுக் கொடுக்கக்கூடிய செல்வாக்கும் இவருக்கு இருந்ததாகப் பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இவர் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றபின் ஆயாக்கடவைப் பிள்ளையார் கோயில் திருப்பணிகள் நடைபெறுவதற்கு முன்னின்று உழைத்தார். ஆயாக்கடவை ஐங்கரனுக்கு ஒரு சித்திரத்தேர் செய்ய வேண்டும் என எண்ணங்கொண்டு அதற்காகப் பெரும் பாடுபட்டு உழைத்தார். தேரின் வடம் பிடித்து இழுக்கும்வரை தான் முகச்சவரம் செய்யப் போவதில்லை எனச் சபதம் பூண்டிருந்தார். ஆனாலும்

தேர் வேலைகள் முடிவுபெற முன்னரே அவர் அமரத்துவம் அடைய நேரிட்டுவிட்டது.

### முதலியார் சி. சோமசுந்தர ஐயர் (24.04.1881 – 16.05.1953)

சங்கரஐயர் சோமையரின் மகளான செல்லம்மா, என்பவரின் புதல்வரே சோமசுந்தர ஐயராவார். இவரது தந்தையார் கைதடி சின்னத்தம்பி ஐயர்.

சோமசுந்தரஐயர் அவர்கள் யாழ். இந்துக்கல்லூரியில் கல்விகற்றவர். ஆரம்பகாலங்களில் ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் பின்னர் அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் இணைந்து படிப்படியாக ஏற்றம் பெற்றார். துரைச்சாமிஐயரின் மகளும் எனது தந்தையாரின் மூத்த சகோதரிகளில் ஒவருமான இராசரத்தினம்மா (28.08.1897 - 03.11.1926) என்பவரை 28.12.1914 அன்று திருமணம் செய்தார்.

சோமசுந்தரஐயர் மனைவி இறந்தபின்னர் இரண்டாம் தாரமாக லக்ஷ்மி அம்மா என்பவரைத் திருமணம் செய்தார்.

சோமசுந்தர ஐயர் ஆங்கிலேய அரசாட்சிக்காலத்தில் அரசாங்க உயர்பதவிகளைப் (C.C.S.) பெற்று கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் பணியாற்றியவர். அரசாங்கத்தினரால் வழங்கப்பட்ட முகாந்திரம் பட்டம் இவருக்கு 1937இல் வழங்கப் பெற்றது. இது ஆங்கிலேயரால் வழங்கப்படும் பட்டமாகும். அக்காலத்தில் ஆறாவது ஜோர்ஜ் மன்னரின் பிறந்த நாள் விழாவின்போது இப்பட்டம் வழங்கப்பட்டது.

பின்னர் 1947இல் இவருக்கு முதலியார் பட்டம் வழங்கப்பட்டது. இத்தகைய உயர் அரசாங்கப் பட்டங்களை எங்கள் ஊரில் பெற்றவர் இவர் ஒருவர் மட்டுமே. அயற்கிராமங்களில்கூட இத்தகைய உயர்பட்டங்களை அக்காலத்தில் எவரும் பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### துரைச்சாமி ஐயர் தியாகராஜா ஐயர்

இவர் ஆயாக்கடவையில் துரைச்சாமி ஐயர் - சின்னம்மா தம்பதியின் கடைசி மகனாக 09-01-1909 அன்று உத்தர நட்சத்திரத்தில்

# சுதேசநாட்டியம் 3

புதிய முகாந்திரம்

## பிரமஸ்ரீ சி. சோமசுந்தரஐயர் அவர்கள்

புன்னாலைக்கட்டுவன் வாசரும், யாழ்ப்பாணக் கச்சேரியில் இரண்டாவது முதலியாராகவிருந்து மாகாண பரிபாலனர், மற்றைய உத்தியோகஸ்தர் முதலிய யாவராலும் மிகவும் சன்மானம்பெற்று விளங்குபவரும், சமயாசாரம், சாதியாசாரம், ஈசுரபக்தி, இரக்கம், இன்சொல், கொடை, பொறை, நீதி, நேர்மை முதலிய சுகுணலட்சணங்கள் நிறைந்தவருமான இவ்ரின் உத்தியோகத் திறமையையும், கடமையையும்கண்டு மகிழ்ச்சிகொண்டு இலங்கைத் தேசாதிபதி அவர்கள் கொழும்புக்கு இவரை யழைத்து மாட்சிமைதங்கிய அரசரின் சென்னதினமாகும் சென்ற 9-ந்திகதி வியாழக்கிழமை "முகாந்திரம்" என்னும் மகிமைப் பட்டத்தை அன்புடன் வழங்கினர். இவர்: அங்கிருந்து சென்ற 12-ந் திகதி சென்மஸ்தானத்துக்கு வரும் மார்க்கமாகும் சுன்னாகம் புகையிரதஸ்தானத்தில் இவரது அன்பர்கள் இவரின் வரவை யெதிர்பார்த்திருந்து ஆரவாரத்துடன் அழைத்துவந்து புன்னாலைக்கட்டுவன் அரசினர் பாடசாலை மண்டபத்தில் ஓர் உபசாரணைக் கூட்டம் நடத்தித் தமது அன்பையும் மகிழ்ச்சியையும் தெரிவித்தனர். அத்தருணம், எங்கள் வலிகாமம் வடக்கு, கிழக்கு மணியகாரன் அவர்கள் அக்கிராசனராயிருந்து கூட்டத்தை நடத்தினர். சிலர் சொற்பொழிவுகளுஞ் செய்தனர்.

குறிப்புரை

மேற்படி, முதலியார் முகாந்திரம் அவர்கள் கல்வியறிவிற் சிறந்த உத்தியோக பதவி பெற்ற அந்தணர்களின் மரபிற்பிறந்தவர் என்பதும், தம்மரபுக்கேற்ற ஆசாரம் அனுட்டானங்கள் பொருந்தியவர் என்பதும், மேற்படி சுகுணலட்சணங்கள் அமைந்த மகாபுருஷன் என்பதும் எம்மாலும், இவரையறிந்த மற்றோராலும் மறுக்கொணாவுண்மையாகும்.

இவற்றால்:- இவர் யாவர்க்கும் அன்பராகவும், யாவரதும் கண்களுள் விளங்கும் ஒளி மணியாகவும், யாவரதும் இதயாலயத்துள் வீற்றிருக்கும் விம்பமாகவும் இருக்கின்றார். இவர்க்கு இப்பதவி தக்கதென்பதை ஒருவரும் மறுக்கார். நமது அன்பரான முகாந்திரமவர்கள் இத்தகைய பட்டங்களை மேலும் அடைந்து வருவாராக. இவரது பெருமை எங்கள் யாவர்க்குமுரிய பெருமையும், மகிழ்ச்சியும் ஆகுக. பகவான் இவர்க்கும் மனைமகார்க்கும் நல்லனுக்கிரகம் புரியும்படி வேண்டிக்கொள்வோமாக.

பத்திராதிபர்.

கல்லடி வேலுப்பிள்ளை பத்திராதிபராக இருந்து நடத்திய சுதேச நாட்டியம் பத்திரிகையில் முகாந்திரம் சோமசுந்தர ஐயர் பற்றி எழுதிய பத்திராதிபர் குறிப்பு.

பிறந்தவர். இராசரத்தின அம்மா, பொன்னம்மா, செல்லம்மா, குமாரசாமி ஐயர் ஆகியோர் இவரது சகோதரர்களாவர். இவரை ராசா ஐயர் என ஊரில் அழைப்பர். புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவையில் தான் பிறந்த இல்லத்தில் 27 வருடங்களும் பின்னர் தனது தந்தை ஆங்கிலப்பாடசாலை நடத்திய காணியில் சொந்தமாக இல்லம் அமைத்து அங்கு 45 வருடங்களுமாக புன்னாலைக்கட்டுவனில் 72 வருடகாலம் வாழ்ந்தவர். அதன்பின்னர் இவர் 1981 முதல் ஈவினைக் கிராமத்தில் வாழ்ந்தார். இவர் நாகரிக வாழ்வுக்குத் தன்னை ஆளாக்காது சிறு பராயம் முதல் உணவு உடை என்பவற்றில் பாரம்பரிய முறையைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர். இவர் தனது நாளாந்த உணவில் பச்சிலை மூலிகைகளைப் பாவிக்கத் தவறுவதில்லை. இவர் தனது ஆரம்பக் கல்வியை புன்னாலைக்கட்டுவன் தமிழ்ப்பாடசாலையில் பெற்றார். பின்னர் சுன்னாகம் பிராசீன பாடசாலையில் சமஸ்கிருதத்தைக் கற்றுத் தேர்ந்தார். அத்தோடு அங்கு தலைமை ஆசிரியராக இருந்த வித்துவ சிரோமணி சி. கணேசையரிடம் தமிழ் கற்றார். அந்தணர்க்குரிய வேதங்களையும் கற்றுத் தேர்ந்தார். இவர் ஈவினை கற்பக தேவஸ்தான குருவாக தனது ஒன்பது வயது முதல், சிவபதம் அடையும் வரை எழுபத்தைந்து வருட காலம் பணிபுரிந்தவர். இவர் விஷவைத்தியம், பச்சிலை மூலிகை மருத்துவம் என்பவற்றில் அனுபவம் மிக்கவராக இருந்ததுடன் காலநேரம் பார்க்காது மக்கள் நோய்களைத் தீர்க்கும் பணியினை மேற்கொண்ட குருவாகவும் விளங்கினார். இவர் வேட்டியும் சால்வையுமே அணிவார். நெடிய உயர்ந்த கம்பீரமான தோற்றம் கொண்டவர். சேட் அணிவதில்லை. காலுக்குச் செருப்பு அணிவதில்லை. 1934ஆம் ஆண்டு ஆனிமாதம் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் வசித்துவந்த செல்லையர் அவர்களின் புதல்வி பாலாம்பிகையைத் திருமணம் செய்தார். ஞானசேகர ஐயர், லலிதாம்பாள், கெங்காதர ஐயர், சாமிநாத ஐயர் ஆகியோர் இவரது புதல்வர்களாவர். தியாகராசா ஐயர் நிகண்டு பெரும்பகுதியை மனனம் செய்திருந்தார். கோயிலில்

# ஆரம்பகால அந்தணர்கள்

சு. அருணாசலக்குருக்கள் :—இவர் பூர்வம் இந்தியாவில் திருவண்ணாமலைப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து புன்னாலைக்கட்டுவனிற் குடியேறினர். இவர் அட்டகர்ம மாந்திரீக பிரயோகத்திலும் கல்வித்திறமையிலும் சித்திபெற்றுப் பெரிய அருணாசலக்குருக்கள் என்று பட்டம்பெற்றவர். இவரது சிஷ்யர்கள் வன்னிப்பகுதிகளில் தற்காலமு மிருக்கின்றனர். கோப்பாயில் விக்கினேஸ்வர வைரவாலயங்களை ஸ்தாபித்தவருமிவரே. இவர் குமாரர் நமசிவாயக்குருக்கள். இவர்குமாரர் சுப்பிரமணியக்குருக்கள், இவர்குமாரர் சின்னையாக்குருக்கள் என்றுவழங்கிய சபாபதிக்குருக்கள். இவரும் வேதாகமபண்டிதராய்க் குருத்துவத்திறமை வாய்ந்தவராய், அதற்கேற்ப அனேகசாஸ்திர நூலுணர்ச்சியில்வல்ல அதி சாமர்த்தியராய், ஆசாரியகுண லட்சணமமைந்த உத்தமகுணசொரூபராயிருந்து விளங்கினர். இவ
சகோதரருள் ஒருவரான ஐயாக்குட்டிகுருக்கள் என்று வழங்கிய கார்த்திகேயக் குருக்கள் என்பவரும் கல்வித்திறமையுடையவர். இவரூர் வேலம்பராய். தமது குருத்துவத்துக்கேற்ப வேதாகம நூலுணர்ச்சியிலும், மாந்திரீகம், மந்திரநிர்ணயங்களிலும், அட்டகன்ம மாந்திரீகப் பிரயோகத்திலும், ரோகநிவாரண சாந்திபரிகாரங்களிலும், தமக்கொருவ ரிணையென்று சென்றவிடமெல்லாஞ்சிறப்புடன் கீர்த்திபெற்று விளங்கினர் என்பர். தங்குல முன்னோருள்ளே தெய்வீக வரகவித்திறம்வாய்ந்த இரகுநாதக் குருக்கள் அவர்கள்போல் தாமும் பக்திமேலீட்டால் இஷ்டதேவர்கண்மேல் பற்பல பாமாலைகளும் பாடியுள்ளார். இவர்களிருவரும் இற்றைக்குச்சிலகாலங்களின்முன் இறந்தனர். இவர்களின் புத்திர தத்புத்திர பௌத்திரர்களும் தங்கள் முன்னோர்போலவே குருத்துவம் முதலியன நடத்திப் பெருந்தன்மை வாய்ந்தவராய்க் கோப்பாயிலும் மேற்படியூரிலும் தற்காலமுமிருக்கின்றனர்.

**யாழ்ப்பாண வைபவ கௌமுதி, 1918, பக். 226, 227.**
**க. வேலுப்பிள்ளை,**

புராணப்படிப்பும் மேற்கொள்வார். இளமைக்காலத்தில் தனது வளவுக்குள் சிறிய அளவில் விவசாயம் செய்தும் வந்தார். வளவுக்குள் எராளமான மூலிகைச் செடிகளையும் வளர்த்துவந்தார். தனது எந்தச் செயற்பாட்டாலும் பிறருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பது அவரது பிரதான வாழ்க்கைத் தத்துவமாக இருந்தது. தியாகராசா ஐயர் தனது 84ஆவது வயதில் 08-11-1993இல் அமரரானார்.

### சோ. பாலகிருஷ்ண சர்மா

இவர் புன்னாலைக்கட்டுவன் முதலாவது உப தபால் அதிபராக விளங்கிய சோமசுந்தர ஐயரின் மகனாவார். தாய்பெயர் மனோன்மணி அம்மா. இவர் மூன்றாவது புதல்வராவார். 09-10-1936 அன்று பிறந்தவர். குடும்பத்தினரால் குஞ்சுக்கிளி எனச் செல்லமாக அழைக்கப்பட்டவர். நடராஜ ஐயர், பாலச்சந்திர ஐயர், குகானந்த சர்மா ஆகியோர் இவரது சகோதரர்கள் ஆவர். தாய்தந்தையர் இளமையில் இறந்த நிலையில் தாய்மாமன் சுவாமிநாத சர்மா - மனைவி பாலாம்பிகை அம்மா (ராசாத்தியம்மா) அவர்களால் வளர்க்கப்பட்டவர். இவர் புன்னாலைக்கட்டுவன் தமிழ்ப்பாடசாலை, ஆங்கில வித்தியாலயம், உரும்பராய் இந்துக்கல்லூரி, ரத்மலானை இந்துக்கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றவர். 1955இல் மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்துச் சபையில் சேர்ந்து கடமையாற்றினார். பின்னர் 1965-1968 காலப்பகுதியில் கோண்டாவிலிலும், 1968-1973 வரை குருநாக்கலிலும் கடமையாற்றினார். அதன்பின் யாழ்ப்பாணத்துக்கு மாற்றம் பெற்று பணியாற்றி 1996இல் ஓய்வு பெற்றார். தனது பணிக்காலத்தில் கணக்காளராகப்பதவி பெற்று பின்னர் பின்னர் பிரதி முகாமையாளராக பதவி உயர்வு பெற்றார். இவர் து. குமாரசாமி ஐயர் அவர்களின் புதல்வி புவனேஸ்வரி அம்மாவை (ராசமணி) திருமணம் செய்தார். தேவநாயகி, சுந்தரசர்மா, கிருத்திகா ஆகியோர் இவரது பிள்ளைகளாவர். இவர் கோண்டாவிலில் கடமையாற்றும் காலத்தில் ஆயாக்கடவை ஐங்கரன் ஆலய

குருத்துவப்பணியையும் ஆலயச் சேவையையையும் ஆற்றிவந்தார் உள்நாட்டில் போர் உக்கிரமடைந்திருந்த காலத்தில் 1983 முதல் 2006 வரை ஏறத்தாழ 23 வருடங்கள் தொடர்ச்சியாக ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் நித்திய நைமித்திய பூசைகள் கிரமமாக நடைபெற பொறுப்பாக இயங்கியவர். இவர் 17-09-2006 அன்று ஏகாதசி தினத்தன்று அமரரானார்.

## திரு. ச.இராசரத்தினம்

திரு. சங்கரப்பிள்ளையின் மகனாக 04-11-1923இல் பிறந்த இராசரத்தினம் அவர்கள் ஆரம்பக்கல்வியை புன்னாலைக்கட்டுவன் தமிழ் அரசினர் பாடசாலையிலும் பின்னர் குப்பிழான் மத்திய மகாவித்தியாலயத்திலும் அதன்பின் புன்னாலைக்கட்டுவன் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் பெற்றவர். முதலில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளராகத் தொழில் புரிந்த இவர், சுயாதீனமாகத் தொழில் புரியும் நோக்குடன் புன்னாலைக்கட்டுவனில் அரிசி ஆலை அமைத்தார். காலக்கிரமத்தில் பரந்தனிலும் பரமேஸ்வரி ஆலையை நிர்மாணித்து பெரும் செல்வம் ஈட்டினார். 300க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கினார். யாழ். நகரில் ஒரு நகைக் கடையையும் நடத்தினார். இவரது பாரியார் திருமதி பரமேஸ்வரி அம்மையார் இவரது நற்பணிக் காரியம் யாவிலும் கைகொடுத்து இவரை ஊக்குவித்தார். தான் கற்ற அரசினர் தமிழ் கலவன் பாடசாலை விருத்திக்கும் இவர் பொருளுதவி செய்தவர்.

ஆயாக்கடவையானுக்கு சித்திரத் தேரினை நிர்மாணிப்பதில் ஊர்மக்கள் உவந்தளித்த நிதியோடு தமது பெருஞ்செல்வத்தையும் செலவழித்து பெரும்பங்காற்றியவர் சிவதர்மச் செல்வர் ஸ்ரீமான் ச. இராசரத்தினம் அவர்கள். இவரே மணிக்கூண்டுக் கோபுரத்தையும் அமைத்துக் கொடுத்தவர். அதற்குரிய நவகண்டாமணியைத் தனது புதல்வன் திரு. இ. வரதராஜன் மூலம் இங்கிலாந்திலிருந்து தருவித்துக் கொடுத்தவரும் இவரே.

**திரு. சின்னத்தம்பி ஆறுமுகம்**

இவர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி பயின்றவர். புகையிரத அதிபராகத் தொழில் புரிந்தவர். இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது இவர், சுன்னாகம் புகையிரத அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் யுத்தம் காரணமாக ஊரில் பஞ்சம் ஏற்பட்டது. அவ்வேளையில் வெளியூர்களில் இருந்து புகையிரதம் மூலம் அரிசி மூடைகளை வரவழைத்து ஊர் மக்களுக்கு விநியோகித்து, பஞ்சம் போக்கியவர். ஆயாக்கடவை ஐங்கரனின் கூட்டுப்பிரார்த்தனை வழிபாடுகள் சிறப்பாக அமைவதற்கும் ஊக்கம் கொடுத்தவர். யோகர் சுவாமியின் பக்தரான இவர் 102 வயதுவரை வாழ்ந்தவர்.

**திரு. இ. விக்கினராசா**

இளையதம்பி சுந்தரம்மா தம்பதியின் மகனாக 22-12-1924இல் பிறந்த இவர் ஆயாக்கடவையான் ஆலயப்பணிகளிலும் சமூகப் பணிகளிலும் பெரும்பங்கு ஆற்றியவர். இவர், சிவசம்பு சின்னம்மா தம்பதியின் புதல்வியான தங்கம்மா என்பவரை 30-11-1966இல் திருமணம் புரிந்தவர். ஆயாக்கடவை ஐங்கரன் இராஜகோபுரப் புனருத்தாரணம் மற்றும் விக்னேஸ்வர மணிமண்டபம் ஆகியவற்றை நிர்மாணித்தவர். 10 ஆண்டுகளுக்கு மேல் பிள்ளைச் செல்வம் இல்லாது இருந்த இவருக்கு இராஜகோபுர நிர்மாணப் பணியின் பின்னர் ஆயாக்கடவையான் திருவருளால் புத்திர பாக்கியம் கிட்டியது. கோயிலில் இலக்குமி விக்கிரகம் பிரதிஷ்டை செய்வதற்கும் மற்றும் மண்டப வேலைகள் செய்வதிலும் பங்களிப்புச் செய்தவர். ஆயாக்கடவை சித்திவிநாயகர் இராஜகோபுர புனருத்தாரண மஹாகும்பாபிஷேக மலரினை 30-04-1999இல் வெளியிட்டவர்.

**திரு. பூதப்பிள்ளை இளையதம்பி (06.12.12–20.03)**

மண்ணாடு கொண்ட முதலியார் வழிவந்த மயிலிட்டி கதிரேசர் பூதப்பிள்ளை தம்பதியின் புதல்வராக 06-12-1912இல் பிறந்தவர் சட்டத்தரணியும் நொத்தாரிசும் ஆகிய இளையதம்பி அவர்கள்.

இவர் கீரிமலை நகுலேஸ்வரம், மயிலிட்டி பூதராயர் கோயில், ஆயாக்கடவை பிள்ளையார் கோயில் ஆகியவற்றில் சிறப்புத் தொண்டுகளும் உபயங்களும் செய்து இறையருள் பெற்றவர் . தீட்சைபெற்று சிவவாழ்வு வாழ்ந்தவர்.

ஏழாலை கிராமசபை உறுப்பினராகவும் மல்லாகம் கிராமசபைத் தலைவராகவும் இருந்து சமூகப்பணி ஆற்றியவர். இவர் புன்னாலைக்கட்டுவன் மகேஸ்வரி என்னும் மங்கை நல்லாளை மணந்து இல்லறம் நடத்தி ஜெகதாம்பிகை, சூரியநாராயணன், வேணுகோபாலன், சிவபாலன், ஸ்ரீராகவன், ஸ்ரீதேவி மகேஸ்வரன் ஆகியோரைப் பிள்ளைகளாகப்பெற்றவர். அரசியல் ரீதியாக தமிழ்த்தேசியவாதியாக விளங்கிய இவர் தமிழ்த் தேசிய மகாநாடுகளுக்கு ஆதரவாளர்களைக் கூட்டிச் செல்வார். இவர் தொழில் ரீதியாக 35000 உறுதிகள் வரை எழுதியுள்ளார் என அறிய முடிகிறது.

**திரு. நாகமுத்து தம்பையா**

இவர் பிரபல சட்டத்தரணியாக விளங்கியவர்.

**திரு. சுப்பிரமணியம் பரமராஜா**

சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு ஆக விளங்கிய இவர் புன்னை நகரின் ஒரேயொரு உயர்நீதிமன்ற நீதிபதியாவார்

**திரு. எஸ். ஏ. சிதம்பரப்பிள்ளை**

1958-1969 காலப்பகுதியில் செல்வச் சந்நிதி திருவிழாக் காலங்களில் புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்திக்கு வடக்குப்பக்கத்தில் தெருவை மூடி பந்தல் போட்டு கந்த புராணப்படிப்பு 15 நாட்கள் நடைபெறும். பல பண்டிதர்கள், புலவர்கள் இதில் பங்குபற்றிப் பயன் சொல்லி மகிழ்வார்கள். ஆசிரியர் அ. முதலித்தம்பி, பிரம்மஸ்ரீ இராமகிருஷ்ண ஐயர், பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் ஆகியோர் இதில் பங்குபற்றிச் சிறப்பித்தனர். இதனை முன்னின்று ஒழுங்கு செய்து நடத்தியவர் அமரர் எஸ். ஏ.

சிதம்பரப்பிள்ளை. இவர் ஆயாக்கடவை ஐங்கரன்மீது அளவில்லா பக்தி கொண்டவர் புன்னாலைக்கட்டுவனில் தபாலதிபராக் கடமையாற்றியவர். தெய்வ காரியங்களை முன்னின்று நடத்துபவர்.

### திரு. பொ. பொன்னம்பலம் ஆசிரியர்

ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் 1962ஆம் ஆண்டளவில் கூட்டுப்பிரார்த்தனை வழிபாட்டை ஆரம்பித்து வைத்தவர் திரு. பொ. பொன்னம்பலம் ஆசிரியர். இவர் பலாலியைச் சேர்ந்த பொன்னையா ஆசிரியரின் மகனாக 22-05-1908இல் பிறந்தவர். புன்னாலைக்கட்டுவன் இராமலிங்கம் வல்லிபுரத்தின் மகள் பரமேஸ்வரியைத் திருமணம் செய்தவர். தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று பால பண்டிதராக, பயிற்றப்பட்ட ஆசிரியராக காங்கேசன்துறை, மயிலணி, புங்குடுதீவு, கரம்பொன், இளவாலை, பண்ணாகம், அராலி, புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளில் கடமை ஆற்றியவர். வித்துவசிரோமணி சி. கணேசையரிடமும் கல்வி கற்றவர். புன்னைநகர் கணேச சனசமூக நிலையம். கிராம முன்னேற்றச் சங்கம் கூட்டுறவுச் சங்கம் ஆகிய பொது நிலையங்களில் பணியாற்றியவர். ஆயாக்கடவை திருப்பணிச்சபையின் ஆக்க வேலைகளுக்கு உறுதுணையாக உழைத்தவர்.

இவர் கூட்டுப்பிரார்த்தனையைத் தொடக்கிவைக்க அவருடன் சேர்ந்து பிள்ளைகளும் பெரியவர்களும் பாடுவர். வெள்ளிக்கிழமை களில் இக்கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுவது வழக்கம். இக்கூட்டுப்பிரார்த்தனைக்கு உதவியாக இருந்தவர்கள் புகையிரத அதிபராக இருந்த திரு. க. ஆறுமுகமும், ஆசிரியர் அ. முதலித் தம்பியும் ஆவர்.

### திரு. அ. முதலித்தம்பி ஆசிரியர்

இவர் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை, புராணப்படிப்பு ஆகியவற்றில் மிகவும் ஈடுபாட்டுடன் இயங்கியவர். கோயில் நிகழ்ச்சிகள் யாவற்றிலும்

கலந்து கொள்பவர். ஆலய வளர்ச்சியில் ஈடுபாட்டுடன் இயங்கியவர். இவர் புன்னாலைக்கட்டுவன் நலன்புரிச்சங்கத்தின் செயலாளராகவும் விளங்கியவர்.

**டாக்டர் ஆறுமுகம் திருநாவுக்கரசு**

*23/12/1939* அன்று பிறந்த இவர், சுன்னாகம் மயிலணி தமிழ் பாடசாலை, உடுவில் பெண்கள் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றவர் கொழும்பு மருத்துவக் கல்லூரியில் வைத்தியராகப் பட்டம் பெற்றவர்.

மகியங்கனை, கண்டி, காலி, மன்னார், திருகோணமலை, வவுனியா, தீவகம், புன்னாலைக்கட்டுவன் ஆகிய இடங்களில் பணியாற்றியவர். புன்னைநகர் கணேச சனசமூக நிலையத்தின் தலைவர், பிரதேசசபை ஆலோசனைக் குழு ஆலோசகர், புன்னாலைக்கட்டுவன் ஸ்ரீ பூதராயர் கோயில் பொறுப்பாளர், சென்.ஜோன்ஸ் பழையமாணவர் சங்க உபதலைவர் ஆகிய பதவிகளை வகித்தவர்.

**திரு. சுப்பிரமணியம் செல்லப்பா**

*01/02/1935* அன்று பிறந்த இவர் புன்னாலைக்கட்டுவன் தமிழ் பாடசாலை, உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றவர். சிறந்த கால்பந்து விளையாட்டு வீரராகத் திகழ்ந்தவர். ஆசிரியராகக் கடமை ஏற்று புசல்லாவ சரஸ்வதி மகாவித்தியாலயம், அச்செழு மெதடிஸ்ற் மிஷன் ஆகியவற்றில் பணிபுரிந்த பின் ஆசிரியர் பயிற்சியை மட்டக்களப்பில் பெற்றவர். பின்னர் இரத்தினபுரி சென். லூக்ஸ் கல்லூரி, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், புன்னாலைக்கட்டுவன் ஆங்கில மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கடமையை ஆற்றியவர்.

புன்னாலைக்கட்டுவன் கணேச சனசமூக நிலையத்தின் தலைவராகவும், உரும்பராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினராகவும், சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்க உபதலைவராகவும் பணியாற்றியவர்.

**திரு. தம்பிராசா (வேலப்பா)**

இவர் ஒரு விவசாயி. ஊரில் இடம்பெறும் அமங்கல வைபவங்களை சம்பிரதாய முறைப்படி நடைபெறுவதற்கு முன்னின்று ஆற்றுப்படுத்தும் தன்னலமற்ற சேவையை வழங்கியவர். தேவார திருவாசகங்களை இனிமையாகப் பாடுவதில் வல்லவர். ஆயாக்கடவையான் தேர், தீர்த்த விழாக்காலங்களில் அன்னதானச் செயற்பாடுகளை திரு. மா. இராசையா (இராசா) அவர்களுடன் இணைந்து சிறப்பாக நடத்துபவர்.

**திரு. நாகமுத்து தம்பிராசா**

இவர் ஒரு விவசாயி. கிராமசபை உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இவர் கிராமசபை உறுப்பினராக இருந்த காலத்தில் ஆஸ்பத்திரி ஒழுங்கை புனரமைக்கப்பட்டதுடன் அவ்வீதிக்கு தம்பிப்பிள்ளை மணியகாரன் வீதி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அவ்வீதியிலுள்ள வீடுகளுக்கு மின்சாரம் பெற்றுக் கொடுப்பதற்கும் இவர் முன்னின்று உழைத்தவர். இவருக்கு முன்னர் கட்டத்தரணி பூ. இளையதம்பி கிராமசபை உறுப்பினராகச் சேவையாற்றியவர்.

**திரு. நா. திருநாவுக்கரசு**

இவர் அரசதிணைக்கள கணக்காளராகப் பணியாற்றியவர். ஓய்வு பெற்றபின் கணேச சனசமூக தலைவர் பதவி வகித்தவர் இவரது காலத்தில் வாசிகசாலை புதிய கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. வாசிகசாலையின் புதிய கட்டிடத்திற்கு திரு. சீ. லம்போதரன் கிராம செவையாளர் அரசநிதியைப் பெற்றுக் கொடுத்தவர் என்பதும் திரு. கேதீஸ்வரன் காலத்தில் அத்திபாரம் இடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. முன்பள்ளிக்கான காணியைப் பெற்றுக் கொள்ள திரு. ஞானசேகர ஐயரை ஊக்குவித்தவர் திருநாவுக்கரசு. ஆலய நிர்வாகம், கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றில் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இணக்க சபைத்தலைவராகச் செயற்பட்டு கிராம மக்களுக்குச் சிறப்பாக சேவை ஆற்றியவர் இவர்.

**வைத்திய கலாநிதி இ. கந்தையா**

புன்னாலைக்கட்டுவனைப் பூர்வீகமாகக்கொண்ட இவர், இவ்வூர் வைத்தியசாலையில் நீண்டகாலம் சேவையாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். காலநேரம் பார்க்காது சேவையாற்றி அயலூர் மற்றும் ஊர்மக்களது பெரும்மதிப்பைப் பெற்றவர், புன்னைநகர் இளைய சமுதாயத்தின் மத்தியில் ஆன்மிக நெறியை வளர்க்கும் அரிய நோக்குடன், ஆசிரியமணி பொன்னம்பலம் தலைமையில் சமயநெறி வகுப்புகளை வார இறுதிநாட்களில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் வெள்ளிக்கிழமை மாலை வேளைகளில் கூட்டுப் பிரார்த்தனை வழிபாடும் பண்ணிசை வகுப்புகளும் நடைபெற உழைத்தவர். சமயநெறி பரிட்சைகள் நடத்தி தகுதி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்குதல் போன்ற செயற்பாடுகளால் மக்களால் பெரிதும் மதிக்கப்பெற்றவர்

**திரு. ஐயாத்துரை இராமசாமி**

ஆறுமுகம் ஐயாத்துரை, தங்கப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரான இவர் 01/09/1937இல் பிறந்தவர், புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் பாடசாலை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்ற இவர் முதலில் உபதபால் அதிபராக கடமையாற்றிவர். பின்னர் பெல்மதுளை போபிற்றிய தமிழ் பாடசாலையில் ஆசிரிய நியமனம் பெற்று அங்கு சிலகாலம் பணிபுரிந்த பின் ஆசிரிய பயிற்சி கல்லூரியில் சேர்ந்து பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகப் பட்டம் பெற்றார். மாதம்பை தமிழ் கலவன் அரசினர் பாடசாலை, கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை ஆகியவற்றில் பணிபுரிந்தபின் ஓய்வு பெற்றார்.

தனது இளமைக்காலத்தில் புன்னாலைக்கட்டுவன் கணேச சனசமுக நிலையத்தின் மேம்பாட்டுக்காக இவர் பெரிதும் உழைத்தார்.

சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர், சுன்னாகம் சத்தியசாயிபாபா மண்டலி தலைவர், சுன்னாகம் தெற்கு பூதராயர் கோயில் நிர்வாகசபைத் தலைவர், சுன்னாகம் தெற்கு நகர்

முதியோர் சங்கத்தலைவர், வலி தெற்கு உடுவில் மத்தியட்ச சபை உறுப்பினர் ஆகிய பதவிகளை வகித்தவர்.

**திரு. முத்துக்குமாரு செல்லப்பா**

இவர் தமது பெற்றோரின் ஞாபகார்த்தமாக பதின்மூன்று பரப்புக் காணியை அரசாங்க வைத்தியசாலை அமைப்பதற்கு நன்கொடையாக வழங்கியவர். இவர் வழங்கிய காணியில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடத்தில் தற்போது ஆஸ்பத்திரி இயங்கி வருகிறது.

**உசாத்துணை:**


(01) 'ஸோமகாவியம்' (1970) - பிரம்மஸ்ரீ.சிவா ஸோமசர்மா அவர்களின் சிவபதப்பேற்றைக் குறித்து மலரும் நினைவுப் பூக்கள் (பக் :5)

(02) பிரம்மஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களின் நினைவு மலர் (1970) - பொதுமக்கள் சார்பில் புன்னாலைக்கட்டுவன் சனசமூக நிலையத்தினரால் வெளியிடப்பட்டது (பக்: 5)

(03) மேற்படி நூல் (பக்:2) பத்திராதிபர்.கே.பி ஹரன் அவர்களது கட்டுரை.

(04) மேற்படி நூல் (பக்:3) வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் ச.அம்பிகைபாகன் அவர்களது கட்டுரை

(05) மேற்படி நூல் (பக்:5) - ஆசிரியர். தா. ஆறுமுகம் அவர்களின் கட்டுரை.


❑

# 07

## சோமையர் சங்கரஜயர்

**பு**ன்னாலைக்கட்டுவன் கதிர்காமஜயர் சோமையர் என்பவரின் புத்திரராக சங்கரஜயர் ஆயாக்கடவையில் பிறந்தார். இவர் வாழ்ந்த காலம் அண்ணளவாக *1805 - 1880* எனக் கணக்கிட முடிகிறது. இவர் தனது முன்னோர்கள் ஆயாக்குளத்தருகே கண்டெடுத்து கோயிலமைத்து வழிபட்டுவந்த விநாயகருக்கு, *1837*ஆம் ஆண்டளவில் தனக்குச் சொந்தமான காணியில் மண்ணினால் ஆலயம் அமைத்தார் என்ற பதிவுகள் உள்ளன. இவரே ஈவினை கற்பக விநாயகர் ஆலயத்தின் ஆரம்பகால பூசகராகவும் விளங்கியவர் என்பதை வரலாற்றுப் பதிவுகள் மூலம் பெறமுடிகிறது. இவரது மனைவி பெயர் சின்னம்மா. சங்கரஜயருக்கு மருந்தினால் நீங்காத "சங்காரக்குத்து" என்னும் நோய் இருந்ததாகவும் விக்னேஸ்வரப் பெருமான் அருளால் அந்நோய் நீங்கியதாகவும் குறிப்புகள் உள்ளன. இவருக்கு பொன்னம்மா, கௌரிஅம்மா, கதிர்காமஜயர், சோமையர், சின்னையர், நாகமுத்தம்மா, மாணிக்கம்மா ஆகியோர் பிள்ளைகளாவர். இவரது வழித்தோன்றல்களே புன்னாலைக்கட்டுவனில் கோயில், பாடசாலை, வைத்தியசாலை, தபாற்கந்தோர் ஆகியவற்றை அமைத்தனர் என்பது வரலாறு.

❑

# 08

# புன்னாலைக்கட்டுவனைப் பூர்வீகமாகக்கொண்ட ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகள்

**வி**த்துவ சிரோமணி சி. கணேசையரின் சகோதரி சரஸ்வதி அம்மா, கடவுள் ஐயர் என்பவரை மணந்து புன்னாலைக்கட்டுவன் வடக்கில் வாழ்ந்து வந்தார். இவர்களின் புதல்வர்களில் ஒருவரான செல்லையா ஐயர் என்பவரது புதல்வியே எனது தாயார் ஆவார். எனது தாத்தா செல்லையா ஐயர் சிறுவயதில் தனது தந்தையாருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாக யாழ்ப்பாணம் சென்று அவரது பெரிய தந்தையார் சுந்தரமையர், பெரிய தாயார் நாகம்மா ஆகியோருடன் வாழ்ந்து வந்தார். பெரியதாயார் நாகம்மா வித்துவ சிரோமணி சி. கணேசையரின் இன்னுமொரு சகோதரி ஆவார்.

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் வடக்கு வீதியில் 104ஆம் இலக்கத்தில் அமைந்திருக்கிறது அவர்களது இல்லம். அங்குதான் 1941ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி பகல் 11.36 மணியளவில் சித்திரைமாத அனுஷ நட்சத்திரத்தில் நான் பிறந்தேன். எனது தாயாரின் தந்தையும் அவரது பெரிய தந்தையாரும் வைத்தீஸ்வரன் கோயிலில் பணியாற்றியவர்கள். இந்த இல்லத்தில் நான்கு தலைமுறைகளாக அவர்களது சந்ததியினர் வாழ்ந்து வந்தனர்.

பிற்பட்ட காலத்தில் தாயாரின் தந்தையார் இங்கு ஓர் உணவகம் நடத்திவந்தார். சைவ உணவுக்காரர்கள் பலர் வந்து உணவருந்துவார்கள். அக்காலத்தில் யோகர் சுவாமிகளும் அடிக்கடி இங்கு உணவருந்த வருவார். தாத்தா பயபக்தியோடு அவருக்கு உணவு பரிமாறுவார். தற்செயலாக ஒருநாள் யோகர்சுவாமி தனிமையில் என்னிடம் உரையாட நேர்ந்தது. எனக்கு அவர் தந்த உபதேசம் 'எனது தந்தையாரின் தொழிலுக்கு நான் ஒத்தாசையாக இருக்கவேண்டும்' என்பதாகும்.

எனது தாயாரின் மூத்த சகோதரர் பெயர் சிவசுப்பிரமணிய ஐயர். இவர் ஒரு சகலகலாவிற்பன்னர். யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் கல்வி பயின்றவர். மாணவராக இருந்த



வடக்கு புன்னாலைக்கட்டுவன்
ராஜராஜேஸ்வரி அம்பாள் கோயில்
அருகே அமைந்துள்ள
ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகள்
உருவச்சிலை

காலத்திலேயே இவர் சிறந்த நடிகராகவும் ஓவியராகவும் விளங்கி யவர். பின்னர் நடனம், சங்கீதம் முதலியவற்றிலும் ஈடுபட்டு அவற்றிலும் தேர்ச்சி பெற்றார். அக்காலகட்டத்தில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களது நாடகக் குழுவில் நடிகராகவும் இருந்து நாடகங்களிலும் நடித்து வந்தார். பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்ந்து நடன ஆசிரியரானார். இலங்கையில் முதலில் நாட்டியப்பள்ளி ஒன்றைத் தொடங்கி அதனைத் திறம்பட நடத்தி வந்தார். (01) இவரை நான் 'மணிமாமா' என அழைப்பேன்.

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் 1790இல் வைத்திலிங்கச் செட்டியார் என்பவரால் கட்டப்பட்டது. இக்கோயிலில் ஆரம்ப காலத்திலிருந்தே ஒரு கதாப்பிரசங்க மரபு வளர்ச்சிபெற்று வந்தது. நல்லைநகர் ஆறுமுகநாவலர் தமது முதற்பிரசங்கத்தை இவ்வாலய வசந்த மண்டபத்திலேயே செய்தார். அவருக்குப்பின் அவரது மருகரான வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை புராணப் பிரசங்கம் செய்தார். பின் சங்கரசுப்பையர் சுவாமிகள் என்பார் இங்கு பிரசங்கம் செய்து வந்தார். இவரது பிரசங்கத்தைத் தனது பாடசாலைக் காலத்திலேயே தினமும் கேட்டு வந்த எனது மாமாவுக்கு அவரைப்போன்று தாமும் பிரசங்கம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. தனது 18ஆவது வயதில் மாமா சி.எஸ்.எஸ். மணிஐயர் என்ற பெயரில், முதன்முதலில் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய மண்டபத்திலும் பின்னர் தொடர்ச்சியாக வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் மண்டபத்திலும் கதாப்பிரசங்கங்கள் செய்து மணிபாகவதர் எனப் புகழ்பெற்ற பிரசங்கியானார்.

மாமா இசைத்துறையிலும் விற்பன்னராக விளங்கினார். கடம், மோர்சிங், மிருதங்கம் போன்ற வாத்தியங்களை வாசிக்கும் திறமை பெற்றிருந்தார். சங்கீத வித்துவான்கள் எந்தளவிற்கு மக்களைக் கவரும் வகையில் ஜனரஞ்சகமாகக் கச்சேரி செய்கிறார்களோ அதே மாதிரி இவரும் தனது குரல்வளத்தைச் சாதகமாக வைத்துக்கொண்டு இராக ஆலாபனைகளையும் இசை

நுணுக்கங்களையும் தமது கதாப்பிரசங்கத்திலே இடையிடையே புகுத்தி அனைவரையும் வியப்பிலாழ்த்தி விடுவார். உதாரணமாகக் கூறுவதானால் சிவபெருமானைப் புகழ்ந்து பாடுவதாக வரும் கட்டத்தில் சசீதரனே, சதாசிவனே, சாம்பசிவனே என்பதைப் பலவித கோணங்களில் விரிவுபடுத்தி சங்கதிகளைப் புகுத்தி சங்கீதக் கச்சேரி ஒன்றே செய்து விடுவார்.

இவர் தனது வாழ்நாளில் பல்லாயிரக்கணக்கான கதாப் பிரசங்கங்களைச் செய்திருப்பார். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கெல்லாம் சென்று பிரசங்கம் செய்து புகழீட்டினார்.

எனக்கு இலக்கிய ஆர்வத்தை ஊட்டியதில் மணிமாமாவுக்கும் பெரும் பங்குண்டு. இவரது புராண இதிகாசப் பிரசங்கங்கள் பலவற்றை நான் கேட்டு இரசித்திருக்கிறேன். பாடசாலை விடுமுறை நாட்களில் அவரது வீட்டிலேயே தங்கியிருந்து அவரது பிரசங்கங்களுக்குச் செல்வேன். எனது இளம் வயதில் என்னைச்சூழ இருந்தவர்கள் எனக்குப் பழந்தமிழ் இலக்கியங்களில் பரிச்சயம் ஏற்படுத்திய போதிலும் அவற்றிலே உள்ள இலக்கியச் சுவைகளை இசையிலே தோய்த்தெடுத்து இரசிக்கத் தந்தவர் எனது மாமா. இலக்கியக் கதாபாத்திரங்களை எனது மனத்திரையிலே ஓடவிட்டவர் அவர். ஒரு விடயத்தை எவ்வாறு சுவையாகச் சொல்லலாம் என்பதனைக் கற்றுத்தந்தவர் அவர்.

1966ஆம் ஆண்டு துறவறம் பூண்ட அவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் என்ற நாமம் பெற்றார். அதே ஆண்டில் நல்லை நகரில் திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைத்து அதனூ டாகச் சமய அறப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.(02) இதுவே இலங்கையின் முதலாவது ஆதீனமாகும்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரான் சுவாமிகள் தமிழ்நாட்டில் காஷாயம்பெற்று இலங்கை திரும்பி பலாலி விமான நிலையத்தை அடைந்து அங்கிருந்து பலாலிவீதி வழியாக யாழ்ப்பாணம் செல்கையில் அவரைச் சகல சீர்வரிசைகளுடனும் ஆயாக்கடவை ஆலயத்தில் முதலில் வரவேற்று விசேடபூசை செய்து உபசரித்த பெருமை புன்னாலைக்கட்டுவன் மக்களையே சாரும்.

மணிமாமா வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இசைநடன ஆசிரியராக இருந்த காலத்தில் அவ்வூரில் பிரபல்யம் பெற்றிருந்த நாவன்னா ஐயர் குடும்பத்துடன் அவருக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. நாவன்னா ஐயர் கோயில் பூசகராகவும் பிரபல சுதேச வைத்தியராகவும் விளங்கினார். அவரது குடும்பம் அக்காலத்தில் இசை விற்பன்னர்களைக்கொண்ட குடும்பமாகவும் விளங்கியது. மணிமாமாவின் பிரசங்கங்களுக்கு பக்க வாத்திய இசைக்கலைஞர்களாக அக்குடும்பத்தில் உள்ளோர் விளங்கினர். இத்தகைய தொடர்புகளால் மணிமாமா நாவன்னா ஐயர் குடும்பத்தில் ஒருவராகி அவரது குடும்பத்திலேயே வசிக்கத் தொடங்கினார்.

பிற்பட்டகாலத்தில் மணிமாமா துறவறம் பூண்டு சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளாக நாமம் பெற்றதும், நாவனனா ஐயரின் பேரர்களுள் ஒருவரான கணேச சர்மா, மணிமாமாவைத் தனது ஆத்மார்த்த குருவாக வரித்துக்கொண்டார். கணேசசர்மா தனது குருவின் நினைவாக தனது பிள்ளைகளில் ஒருவருக்கு சுவாமிநாதன் எனப் பெயர்சூட்டினார். சுவாமிநாதன் தனது தந்தையைப்பின்பற்றி ஒரு பட்டயக்கணக்காளராகவும் சிறந்த மிருதங்க வித்துவானாகவும் திகழ்கிறார். அவரே எனது ஒரே மகளான வசுந்தராவின் கணவராவார். இத்தகைய ஒரு பூர்வபந்தத் தொடர்பு எனது மகளுக்கு ஏற்படுவதற்கும் மணிமாமா காரணராக விளங்கினார்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளின் உருவச்சிலை அவரது சொந்த இடமான புன்னாலைக்கட்டுவன் வடக்கில் நாச்சிமார் கோவில் அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளது.

**உசாத்துணை:**


*(01)* மணிமலர்: வெளியிட்டவர் எஸ். எஸ். சர்மா, *3*கிம் கியாட் அவென்யு, சிங்கப்பூர் *12* - பக் *41*

*(02)* நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம் *-2004* - தொகுப்பு இராசையா -ஸ்ரீதரன் பக்*:12*


❑

09

# கதிர்காமையர் 1832-1905

**(வித்துவசிரோமணி சி. கணேசையர் எழுதிய**
**(ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் (1939) என்ற நூலிலிருந்து பெறப்பட்டது)**

**இ**வர் இற்றைக்கு 85 வருடங்களுக்கு முன்னே புன்னாலைக் கட்டுவன் என்னும் ஊரிலே அந்தணர் மரபிலே சங்கர ஐயருக்குப் புதல்வராகப் பிறந்தவர். உரிய காலத்திலே தந்தையாரால் வித்தியாரம்பஞ் செய்யப் பெற்று அவரிடத்திலே சிலவாண்டு சம்ஸ்கிருதமுந் தமிழும் பயின்றபின், ஊரெழு என்னுமூரிலிருந்த மயில்வாகனப்புலவர் என்பவரிடத்திற் சென்று தமிழிலக்கியங்கள் சில கற்றவர். கந்த புராணம், பெரிய புராணம் பாரதம் என்னும் இலக்கியங்களில் அதிக பயிற்சி உடையவர். மறைசையந்தாதி, கல்வளை யந்தாதி, புலியூரந்தாதி என்பவற்றிலும் மிகப்பயிற்சியுடையவர். சூடாமணி நிகண்டை முதலில் இருந்து முடிவுபோக வாய்ப்பாடமாகச் சொல்லவல்லவர். நீர்வேலிச் சங்கரப் பண்டிதரிடத்திலே சென்று தமக்கு நேர்ந்த ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தவர். ஆறுமுகநாவலரோடும் பரிச்சயமுடையவர். சுன்னாகத்து முருகேச பண்டிதர் இவருக்கு நண்பராவார். இணுவில் நடராசையரிடஞ் சித்தாந்த நூல்களைக் கேட்டறிந்தவர். சிவஞான சித்தியாருரைகளுள் ஒன்றாகிய ஞானப்பிரகாசருரையில் நன்கு பயின்றவர். ஊரெழு சரவணமுத்துப் புலவருங் காசிவாசி செந்திநாத ஐயருந் தமதிளமைப்பருவத்திலே இவரிடம் பாடங்கேட்டவர்களாவர்.

இவரிடம் யாமும் இளம்பராயத்திலே பாடங்கேட்டுள்ளோம். இவர் எமக்குப் பெரிய தந்தையாராவர். இவர் புன்னாலைக்கட்டுவனிலே ஒரு தமிழ் வித்தியாலயத்தைத் தாபித்து அரசினர் நன்கொடையும் பெறச்செய்தவர். இவர்க்கு நான்கு புத்திரருளர். பின்நாளிலே புத்திரர்களும் ஆசிரியர்களாக இருந்து அவ்வித்தியாசாலையிற் கற்பித்து வந்தனர். அவ்வித்தியாசாலை இப்பொழுது அரசினரால் நடத்தப்படுகிறது. இவர் புதல்வர்களுள் முதற் புதல்வராகிய சந்தரமூர்த்தி ஐயரென்பவர் தாம் விவாகம் செய்த ஊராகிய தெல்லிப்பழையிலே ஒரு தமிழ் வித்தியாசாலையைத் தாபித்து தாமே தலைமையாசிரியராகவிருந்து நடாத்தி அரசினர் நன்கொடையும் பெறச் செய்தனர். அஃது இப்பொழுதும் நடந்து வருகிறது. புத்தூர், சிறுப்பிட்டி, அச்செழு, ஊரெழு, ஏழாலை, மயிலிட்டி, தையிட்டி, மாவிட்டபுரம், வயாவிளான், பலாலி முதலிய ஊர்களிலிருந்து பலர் இவரிடம் கற்று அறிஞர்களாயினர்.

**கதிர்காமையர் தொடர்பான மேலும் சில தகவல்கள்:–**

- இவரது சகோதரர் சின்னையர் என்பாரது புதல்வரே வித்துவ சிரோமணி கணேசையர் ஆவார்.
- இவரது சகோதரி கௌரியம்மா என்பார் குப்பிழான் என்னும் கிராமத்தில் சின்னையா ஐயர் என்பவரைத் திருமணம் செய்தார். கௌரியம்மாவின் புதல்வரே பெருந் தமிழறிஞராக விளங்கிய காசிவாசி செந்திநாதையராவார்.
- இவரது மற்றுமொரு சகோதரியான மாணிக்கம்மா (1855-1941) என்பார் ஐயாத்துரை ஐயர் என்பாரைத் திருமணம் செய்து புன்னாலைக்கட்டுவனிலேயே வாழ்ந்தார். மாணிக்கம்மாவின் புத்திரர் துரைச்சாமி ஐயர் என்பார் புன்னாலைக்கட்டுவனில் ஓர் ஆங்கில வித்தியாலத்தை ஸ்தாபித்தார். அது இன்று அரசாங்கத்தினரால் புன்னாலைக்கட்டுவன் மத்திய மகாவித்தியாலயம் என்ற பெயருடன் நடத்தப்படுகிறது.

- கதிர்காமையரின் புத்திரர்களுள் ஒருவரான செல்லையர் என்பாரின் புத்திரரே கே.சி.பி.ஐயர் என்னும் பெயருடன் விளங்கிய பாலசுப்பிரமணிய ஐயர் ஆவார். இவரது பெரும் முயற்சியாலேயே அக்காலத்தில் பெரும் அரசியல் செல்வாக்குடன் விளங்கிய சேர் பொன் இராமநாதனின் உதவியோடு புன்னாலைக்கட்டுவனில் அரசினர் தமிழ்ப் பாடசாலைக்கான புதிய கட்டிடம் நிறுவப்பட்டது. உப தபாற் கந்தோர், அரசினர் வைத்தியசாலை என்பன ஆரம்பிக்கப்பட்டன.

❑

# 10

# காசிவாசி செந்திநாதையர்

**பு**ன்னாலைக்கட்டுவன் சங்கரையரின் மகளான கெளரியம்மாவுக்கும் ஏழாலையைச் சேர்ந்த சின்னையர் என்பவருக்கும் 02-10-1848இல் காசிவாசி செந்திநாத ஐயர் பிறந்தார். ஏழாலையில் பிறந்த இவருக்கு சம்புநாத ஐயர், பொன்னையர் என்னும் இரு சகோதரர்கள் உடன் பிறந்தனர்.

இவர் வித்தியாரம்பம் செய்யப் பெற்று தனது தாய்மாமனாராகிய புன்னாலைக்கட்டுவன் கதிர்காமையரிடம் ஐந்துவயதுமுதல் பத்து வயதுவரை தமிழுஞ் சமஸ்கிருதமும் கற்றார். அதன்பின்னர் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் ஆங்கிலம் கற்றார். தனது இருபதாம் வயதிலே ஆங்கிலக் கற்றலைவிடுத்து நல்லூர் சம்பந்தப்புலவரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்று அவற்றில் வல்லவனானார். 1871ஆம் ஆண்டில் தந்தையாரோடு இந்தியாவுக்குச் சென்று சிதம்பரம் முதலிய தலங்களைத் தரிசித்துமீண்டார். 1872இல் வண்ணார்பண்ணையில் நாவலரால் தாபிக்கப்பட்ட சைவவித்தியாசாலையிலே ஆறு வருடமும் அவருடைய ஆங்கில வித்தியாசாலையில் ஒருவருடமும் ஆசிரியராகவிருந்து கற்பித்தார். அக்காலத்தில் நாவலருடைய சமயப்பிரசங்கங்களைத் தவறாது கேட்டுவந்தார். நாவலரின் நன்மாணாக்கனானார். நாவலர் எழுதிய ‘விவிலியகுற்சிதம்’ என்னும் நூலையும் இவரே அச்சிட்டு வெளியிட்டார்.



காசிவாசி செந்திநாதையர்

அக்காலப்பகுதியில் வண்ணார்பண்ணை விசுவநாதஐயர் என்பவரது புதல்வி சிவகாமி அம்மையாரை மணந்து மீனாட்சியம்மை என்னும் ஒரு புதல்வியைப் பெற்றார். சில ஆண்டுகளில் (1878ஆம் ஆண்டு) மனைவி தேகவியோகமடைந்தார்.

இம்மறைவால் மனமுடைந்த ஐயரவர்கள் அதேயாண்டில் இந்தியா சென்று சுப்பாசாஸ்திரி என்பவரிடத்திலும் அங்குள்ள

அரண்மனைச் சாஸ்திரியாரிடத்தும் காவியம், தர்க்கம், வியாகரணம் முதலிய வடமொழிக் கருவிநூல்களைக் கற்றுத் தேறினார்.

ஏறக்குறையப் பத்தாண்டுகள் தமிழ்நாட்டில் சைவப்ணி செய்தபின் கொழும்பு திரும்பி தம்பையா சத்திரத்தில் ஆறுமாதகாலம் சைவப்பிரசங்கங்கள் செய்தார்.

1882ஆம் ஆண்டு மீண்டும் தமிழ்நாடு திரும்பினார். 1884ஆம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர சிவாசாரியசுவாமிகளிடம் நிருவாண தீட்சையும் ஆச்சாரியாபிடேகமும் பெற்று 'அகோரசிவாசாரியார்' என்னும் தீட்சாநாமமும் பெற்றார்.

அதனைத் தொடர்ந்து முருகப் பெருமானின் தலங்கள் பலவற்றை முறையாக வணங்கிவந்த ஐயரவர்கள் 'கந்தபுராணநவநீதம்' என்னும் பெயரில் ஒரு நூலை எழுதினார்.

1887இல் இணுவில் நடராசஜயர் என்பவரிடம் குருமுறையாகப் பாடங்கேட்டுச் சிவஞானசித்தியாரில் ஆழ்ந்த அறிவுள்ளவரானார். சைவசித்தாந்தத்துறை கைவந்தபின் மீண்டும் சென்னைக்குச் சென்று பிரசங்கங்கள் செய்தார்.

1888ஆம் ஆண்டில் அமிர்தபோதினி என்ற வாரவெளியீட்டை நடத்தினார். சில நூல்களையும் வெளியிட்டார்.

1888ஆம் ஆண்டு முதல் 1898ஆம் ஆண்டுவரை பத்தாண்டு காலம் காசியில் தங்கிவாழ்ந்து படித்தார். அதனால் இவர் 'காசிவாசி' செந்திநாதஜயர் என்னும் மதிப்புக்குரிய பெயரினைப் பெற்றார். இக்காலத்தில் பலகட்டுரைகளை எழுதினார். அதன்பின்னர் ஐயரவர்கள் தமிழ்நாடு வந்து தொடர்ந்து சைவப்பணி ஆற்றினார்.

1902ஆம் ஆண்டில் திருப்பரங்குன்றத்தில் 'வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த வித்தியாசாலை' என்னும் பாடசாலையை நிறுவி ஆங்கிலம், தமிழ், வடமொழிகளிலுள்ள நூல்களைக் கற்பித்துவந்தார்.

1906ஆம் ஆண்டில் 'செந்திநாதசுவாமியந்திரசாலை' என்னும் அச்சகத்தை நிறுவி நூல்கள் பலவற்றை வெளியிட்டார்.

1924ஆம் ஆண்டு மேமாத 5ஆம் திகதி காலமானார்.

**காசிவாசி செந்திநாதையர் பெற்ற சிறப்புகள்:**

- ஆரணிநகர அரச சமஸ்த்தான வித்துவான்
- சைவசித்தாந்தசஞ்ஜீவினி சபை கௌரவ உபாந்நியாசகர்
- வேதாந்தபிரசங்க சபை கௌரவஉபாந்நியாசகர்
- பிரபலவித்வசிகாமணி
- சித்தாந்தபாநு
- 1897-12-12 மாயாவாதிகளை வென்றவர்

ஐயரவர்கள் வெளியிட்ட நூல்கள் 45 என அறியமுடிகிறது. அவற்றில் பின்வரும் 20 நூல்களே தற்போது கிடைக்கக்கூடியதாக வுள்ளன. அவையாவன:-

1) கந்தபுராணநவநீதம், 20) ஞானரத்தினாவளி, 3) சைவ வேதாந்தம், 4) தேவாரம்வேதசாரம், 5) தத்துவவிளக்கம்: மூலமும் உரையும் 6) சிவஞான போதவசனாலங்காரதீபம் 7) வஜ்ரடங்கம், 8)வச்சிரதண்டம்) சாண்ஷத்திரியப்பிரசண்டமாருதம், 10)ஞானபோத விளக்கச்சூறாவளி, 11) சிவனுந் தேவனாஎன்னும் தீயநாவுக்குஆப்பு, 12) வீரபத்திராஸ்திரம் 13) விவிலியகுற்சிதக் குறிப்பு, 14) தாந்திரிகதுண்ட கண்டனகண்டனம், 15) மகாவுக்கிரவீரபத்திராஸ்திரம், 16) வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்தபபாடம், 17) வைதிகசுத தாத்துவிதசைவசித்தாந்ததத்துவப்படவினாவிடை, 18) ஸ்ரீ சீகாழிப் பெருவாழ்வின் ஜீவகாருண்யமாட்சி, 19) நீலகண்டபாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பு, 20) வைதிக சைவசுத்தாத்துவித சைவசித்தாந்தசமயம்.

**உசாத்துணை:**

(1) ஈழநாட்டுப் தமிழ்ப்புலவர் சரிதம், - சி. கணேசையர்

(2) காசிவாசிசெந்திநாதஐயர் ஸ்ரீக.சி. குலரத்தினம்

❑

# 11

# 'இயலிசைவாரிதி' 'மகாவித்துவான்' பிரம்மஶ்ரீ ந.வீரமணிஐயர் (6.08.1931 - 07.10.2003)

ஈழத்துத் தமிழிசை உலகில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த ந.வீரமணிஐயர் அவர்கள் பிரம்மஶ்ரீ நடராஜஐயர் சுந்தரம்பாள் தம்பதிக்கு 1931ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி இணுவில் கிராமத்தில் பிறந்தவர்.

புன்னாலைக்கட்டுவன் முதலியார் சோமசுந்தரஐயரின் புதல்வி ருக்மணி அம்மாவைத் தனது 27ஆவது வயதில் திருமணம் செய்த வீரமணி ஐயர் அவர்கள் தனது வாழ்வின் பெரும்பகுதியை (38 வருடங்கள்) புன்னாலைக்கட்டுவனிலேயே வாழ்ந்து இவ்வூருக்குப் பெருமை சேர்த்தவர்.

தனது ஆரம்பக்கல்வியை தான் பிறந்த கிராமத்திலும் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் பெற்றுக் கொண்ட ஐயரவர்கள் இந்தியா சென்று சென்னை அடையாறு கலாஷேத்திரா நாட்டியக்கல்லூரியில் சேர்ந்து நடனக்கலையைக் கற்கத் தொடங்கினார். ஶ்ரீமதி ருக்மணி அருண்டேல் அவர்கள் ஐயருக்கு ஆசிரியராகக் கிடைத்தார். இக்கால கட்டத்தில் பாபநாசம் சிவன், எம்.டி.ராமநாதன் ஆகிய பாடகர்களைத் தமது குருவாகக் கொண்டு இசைக்கலையையும் பயின்றார். சங்கீதம் நடனம் இரண்டிலும் திறமைச் சித்திபெற்று வித்துவான் பட்டத்தைப் பெற்றார்.

இவர் தனது இருபத்தைந்தாவது வயதில் குற்றாலக் குறவஞ்சியைப் பின்பற்றி, திருமயிலைக் கபாலீஸ்வரர், கற்பகாம்பாளைத் தலைவன் தலைவியாகக் கொண்டு இயற்றிய 'திருமயிலைக் குறவஞ்சி' நூல் ஐயருக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தது. இக்குறவஞ்சியில் இடம்பெற்ற 'கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்.....' என்ற பாடல் இவரை ஓர் உன்னத இசைக் கவிஞராக உலகின் முன் நிறுத்தியது. மயிலாப்பூர் கற்பகாம்பாள் சந்நிதியில் கற்பொறிப்பிலே இப்பாடல் பொறிக்கப்பட்டுள்ளமை ஐயரது திறமைக்குச் சான்று பகர்கின்றது. இப்பாடல் உலகப்புகழ்பெற்ற பாடகர் டி.எம்.சௌந்தரராஜனின் குரலில் உலகெங்கும் ஓங்கி ஒலித்து இன்றளவும் வீரமணி ஐயரின் புகழை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

இலங்கை திரும்பிய ஐயர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இசை நடன ஆசிரியராக நியமனம் பெற்றார். அதன் பின்னர் ஆசிரிய பியற்சிக்கலாசாலையில் நியமனம் பெற்று ஆயிரக் கணக்கான கலைத்துறை ஆசிரியர்களை உருவாக்கி அதன்மூலம் பாரிய ஒரு கலைப் பாரம்பரியத்தை உருவாக்கினார்.

சில சாதனைகளை வீரமணிஐயர் செய்துள்ளார். ஒட்டுமொத்தமான முப்பத்தைந்து இராகங்களிலும் நூற்றெழுபத்தைந்து தாளங்களிலும் தமிழிசைப் பாடல்கள் பாடிய சாஹித்ய கர்த்தா வீரமணிஐயர் ஒருவர்தான். அதேபோல திருமயிலைக் கற்பகாம்பாளின் புகழ்பாடும் எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகத்திலமைந்த கீர்த்தனைகளையும் இவர் ஆக்கியுள்ளார்.

ஐயரவர்கள் பல்துறை விற்பன்னராக இருந்தபோதிலும் நாட்டிய நாடகத் துறையிலேயே முத்திரைபதித்த விற்பன்னராகத் திகழ்ந்தார். ஏறத்தாழ முந்நூறு நாட்டிய நாடகங்களை இவர் ஆக்கியுள்ளார். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் தொடர்புபடுத்தி பல்வேறு விதமான இசைக்கோலங்களுடன் பல்வேறு மாற்று வடிவங்களையும் பயன்படுத்தி புதுப்புது மெட்டுக்களும் புதுப்புது ஜதிகளும் பொலிவு சேர்க்க இவர் ஆக்கித் தந்திருக்கும் நாட்டிய நாடகங்கள் என்றும் ஐயரது புகழைச் சாற்றி நிற்கின்றது.

சுமார் அறுபதுக்கு மேற்பட்ட ஆலயங்களுக்கு ஐயரவர்கள் ஊஞ்சற்பாடல்கள் பாடியுள்ளார். ஐம்பது ஆலயங்களுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடியுள்ளார். முப்பதுக்கும் மேற்பட்ட ஆலயங்களுக்குக் கீர்த்தனைகள் இயற்றியுள்ளார்.

ஐயரவர்களைப் பாராட்டி பல நிறுவனங்கள் கௌரவித்துள்ளன. அதேபோன்று, தனி மனிதர்களும் விருதுகள் வழங்கியும் பாராட்டுப்பத்திரங்கள் வழங்கியும் பட்டங்கள் வழங்கியும் கௌரவித்துள்ளனர்.

1999இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஐயருக்கு முதுமாணிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை ஐங்கரன் மீது தீராத பக்தியும் பேரன்பும் கொண்ட வீரமணிஐயர் அவர்கள் எம்பெருமான் மீது பெருந்தொகையான பாடல்களைப் பாடியுள்ளார். 1972இல் 'ஆயாக்கடவையான் கீர்த்தனைகள்' என்ற தலைப்பில் 21 பாடல்களை இயற்றியுள்ளார். சகலரும் இலகுவாகப்பாடும் வண்ணம் தாள, ராக பேதங்களை வகுத்து இக்கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.

சீர்காழி கோவிந்தராஜன் எமது ஆயாக்கடவை ஐங்கரன் கோவிலில் வந்து இசைமழை பொழிந்து, ஐயரவர்கள் இயற்றிய பாடல்கள் சிலவற்றையும் பாடிச் சிறப்பித்தார்.

ஆயக்கடவையானுக்கு முதன் முதலில் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களை இயற்றிப் பாடியவரும் வீரமணி ஐயர் அவர்களே. அத்தோடு ஆயாக்கடவையானுக்கு திருவூஞ்சற் பாடல்களையும் இயற்றியுள்ளார்.

இந்தப் பாடல்களும் தென்னிந்தியப் பிரபல பாடகர் டி.எம். சௌந்தரராஜனால் பாடப்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயாக்கடவை ஐங்கரன் ஆலயத்தின் பல்வேறு நிகழ்வுகளிலும் ஐயர் பங்குபற்றிச் சிறப்பித்துள்ளார். பல நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கியும் சிறப்பித்துள்ளார்.

ஐயரவர்கள் எழுதிய நூல்களில் அச்சுருவம் பெற்றவை:

1. நல்லைக் குறவஞ்சி நாட்டிய நாடகம்
2. கதிர்காமக் கந்தன் குறவஞ்சி
3. அர்ஜுனன் தவம்
4. அஷ்டலக்ஷ்மி
5. பக்தப் பிரகலாதன்
6. சுபத்திராபரிணயம்
7. கர்ணன்
8. ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்
9. நவரஸ இராமாயணம்
10. ராதையின் நெஞ்சம்
11. திருஞானசம்பந்தர்
12. விஸ்வரூப தர்சனம்
13. திருவாசகம் தந்த மணிவாசகர்
14. ஸத்யம் சிவம் சுந்தரம்
15. கண்ணப்பர் குறவஞ்சி நாட்டிய நாடகம்.

❏

# 12

# பிரம்மஸ்ரீ கா.அப்பாச்சாமி ஐயர்

**நூ**லறி புலவர் யான் நுவன்ற பாடலின்
மாலுறு வழுவமர்ந் தாலு மாற்றிநன்
கேலுறத் திருத்துவ ரென்னு மாசையுண்
மேலெழு மன்பினால் மெய்ம்மை கூறுகேன்.

எனத் தமிழ் மரபு வழிவந்த புலமையாளர்களுக்குரிய தன்னடக்கத்துடன் அறுநூற்றியிருப்பத்தெட்டு விருத்தங்களாலியன்ற நகுலகிரிப் புராணத்தைப் பாடிய பிரம்மஸ்ரீ அப்பாச்சாமி ஐயர் அவர்கள் கி.பி 1845ஆம் ஆண்டளவில் புன்னாலைக்கட்டுவனிலே சைவ அந்தணர்குல திலகராகிய காசிநாதையருக்கும் பொன்னம்மாவுக்கும் அருமகனாகத் தோன்றினார். அங்குள்ள ஆயாக்கடவை ஐங்கரன் ஆலயச் சூழலிலே பரம்பரையாகத் தமிழறிவிற் பெருமையும் புகழும் படைத்த குடும்பத்திலே தோன்றிய பிரம்மஸ்ரீ ச.கதிர்காம ஐயரிடம் இளமைக் கல்வியை முறையாகப் பெற்றார்.

பிரம்மஸ்ரீ ச.கதிர்காம ஐயர் அவர்கள் அக்காலத்திலே தமிழார்வம் உடையோரால் நன்கு அறியப்பட்ட ஒருவராவர். வடமொழியிலும் தமிழிலும் நிரம்பிய பாண்டித்தியம் பெற்ற ஐயரவர்கள்




ஊரெழு மயில்வாகனப் புலவரிடம் கல்வி கற்றவர். கந்தபுராணம், பெரியபுராணம், பாரதம் என்னும் இலக்கியங்களில் அதிக பயிற்சி உடையவர். நீர்வேலி சிவசங்கர பண்டிதர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுன்னாகம் முருகேச பண்டிதர், இணுவில் நடராசையர் போன்றோருடன் கெழுதகைமை பூண்டொழுகிய கதிர்காமஐயர் அவர்களின் கல்விச் சூழலிற் பயிற்சி பெற்ற அப்பாச்சாமி ஐயர் அவர்கள் மரபு வழி அறிவு நிரம்பப் பெற்ற அந்தணாளராக முதிர்ச்சி பெற்றார்.

நாவலரின் மருகராகிய வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளையவர்கள் வண்ணார்பண்ணையில் உள்ள மறைத்திரு பிச்சுவையரவர்களின் இல்லத்தில் நடாத்திவந்த திண்ணைப் பள்ளியிலே தொடர்ந்து மாணவனாகவிருந்து பாடங்கேட்ட அப்பாச்சாமி ஐயர் அவர்கள் ஆற்றொழுக்குப் போலக் கவிபாடும் ஆற்றல் வாய்ந்தவராக விளங்கினார். பிரம்மஸ்ரீ ச.சோமையரின் புத்திரியைத் திருமணம் புரிந்து வசாவிளான் ஞான வைரவர் கோயில் அர்ச்சகராக வாழ்ந்து வந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஆறுமுக நாவலரின் பெருமுயற்சியால் கீரிமலைச் சிவன்கோவில் புனருத்தாரணம் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1878ஆம் ஆண்டு கீரிமலைச் சிவன்கோவிலைப் புனருத்தாரணம் செய்து சிவலிங்கப் பிரதிட்டை செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி நாவலரவர்கள் ஒரு விஞ்ஞாபனம் வெளியிட்டார்கள். இதனைத் தொடர்ந்து 1880ஆம் ஆண்டுவரைவில் பிரம்மஸ்ரீ கு.கார்த்திகேயக் குருக்களும், அவர்கள் புத்திரராகிய சபாபதிக் குருக்கள், தியாகராசாக்

குருக்கள் ஆகியோரும் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாகக் கீரிமலையில் நகுலாம்பிகா சமேத நகுலேசுவரப் பெருமானின் அட்டபந்தன மகா கும்பாபிஷேகம் மன்மத வருடம் ஆனி மாதம் (கி.பீ. 1895) நடைபெற்றது. அப்பாச்சாமி ஐயர் அவர்கள் ஏறக்குறைய இதேகாலப் பகுதியின் முன்பின்னாக நகுலேசுவரப் பெருமானின் பேரருள் செழித்த சூழலின் பிரதிபலிப்பாக நகுலகிரிப் புராணத்தைப் பாடியிருக்க வேண்டும். தட்சண கைலாய மான்மியத்திற் காணப்படுங் கதை மரபுகளை விரித்துத் தலபுராண மரபிற் கேற்பச் சொற்சுவை, பொருட்சுவை, பக்திச்சுவை ஆகியன நிரம்ப நகுலகிரிப் புராணத்தைப் பாடிய ஐயரவர்கள் 'வலனுறும் வெயிலவன் மருங்கு நிற்குபு நிலவுதாண் கதிர்விட நினைத்தல் போலுமே' என அறிவடக்கத்துடன் பாடியுள்ளமை பண்பட்ட கவியுள்ளத்தின் முழுமையை இனங்காட்டுவதாகும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் சென்ற நூற்றாண்டிலே ஏற்படுத்திய விழிப்புணர்ச்சியின் பயனாக ஆலயங்கள் தோறும் நித்திய நைமித்தியக் கிரியைகளும், புராணபடன மரபும் செழித்தோங்கின. கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், திருச்செந்தூர்ப் புராணம் ஆகியவற்றிற்குப் பொருள் சொல்வதில் வல்லவராக விளங்கிய அப்பாச்சாமி ஐயரவர்கள் ஏடுகளில் விரைவாகவும் தெளிவாகவும் எழுதும் ஆற்றலும் பெற்றவராக விளங்கினார். காலந்தோறும் ஏடுகளைப் பிரதி செய்வதிலும், வெள்ளேடு தயாரிப்பதிலும், மாணவர்களுக்குப் பாடஞ் சொல்வதிலுமே தமது பெரும்பாலான நேரத்தைச் செலவு செய்து வந்தார்.

கல்லடி வேலுப்பிள்ளையென வழங்கும் ஆசுகவி வேலுப்பிள்ளை சுதேசநாட்டியப் பத்திராதிபர், சு.நல்லதம்பி ஆகியோர் ஐயரவர்களின் நன்மாணாக்கருள் குறிப்பிடத்தக்கோராவர். வித்துவசிரோமணி சி.கணேசையர் அவர்கள் இந்நூலாசிரியரின் மைத்துனர் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். கணேசையர் அவர்களைப் போலவே இவருக்கும் புத்திரபாக்கியம் கிடைக்கவில்லை.

தமிழிற்கும் சைவத்திற்கும் அருந்தொண்டாற்றிய ஐயரவர்கள் கி.பி1925ஆம் ஆண்டளவில் இறைவன் திருவடிநிழலை அடைந்தார்.

**மேலதிக குறிப்பு**

(1) கா. அப்பாச்சாமி ஐயரின் தாயார் பொன்னம்மா, ச. கதிர்காம ஐயரின் சகோதரியாவார் என்பது இங்கே நோக்கற்பாலது.

(2) கா. அப்பாச்சாமி ஐயர் தனது தாயின் சகோதரரான பிரம்மஸ்ரீ. சோமையரின் புத்திரியை மணஞ் செய்தவர்.

(3) கா. அப்பாச்சாமி ஐயரின் தந்தை காசிநாத ஐயர், வசாவிழான் ஞானவைரவர் கோயிலின் பூசகராக இருந்தவர் என்பதும், புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவையைச் சேர்ந்த சங்கரையரின் மகள் பொன்னம்மாவைத் திருமணம் செய்தவர் என்பதும் சான்றாதாரங்கள் மூலம் பெற முடிகிறது.

(4) கா. அப்பாச்சாமி ஐயர் அவர்கள் வசாவிழான் ஞானவைரவர் கோயிலின் வடக்கே அமைந்த தனது சொந்தக் காணியில் நீண்டகாலமாக வாழ்ந்துள்ளார்.

❏

## புன்னாலைக்கட்டுவன் தெற்கு பூதராயர் ஆலயம்



## புன்னாலைக்கட்டுவன் தெற்கு அன்னமார் ஆலயம்



# 13

# ஈவினை கற்பகவிநாயகர் ஆலயம்

**ஆ**லயம் ஒரு கிராமத்தின் சிறப்புக்கும் புனிதத்திற்கும் காரணமாக அமைகிறது. அதனாலேதான் எம்முன்னோர்கள் ஊர்தோறும் ஆலயங்களை அமைத்துத் திருக்கோயில் பண்பாட்டினைப் பேணி வந்துள்ளார்கள். எமது மனம் புலன்வழி செல்லாது ஒருமுகப்பட்டு இறைவழிபாட்டில் ஈடுபடுவதற்கு ஆலயங்களும் அவற்றின் புனிதச் சூழலும் துணைபுரிகின்றன. ஈவினைக் கிராமத்தில் அமைந்திருக்கும் கற்பக விநாயகர் ஆலயம் அக்கிராம மக்களின் வழிபாட்டிற்கும் சமயமரபையும் கலை மரபையும் பேணுவதற்கும் ஏற்ற இடமாக இருந்து வந்திருக்கிறது. இந்த ஆலயம் ஏறத்தாழ இருநூறு வருடங்களுக்கு முன்னர் தோன்றியதற்கான வரலாற்றுத்தகவல்கள் கிடைக்கின்றன. அதற்குப் பலகாலத்திற்கு முன்னரே இங்கு விநாயகர் வழிபாடு இருந்திருக்க வேண்டும்.

தற்போது கோயில் இருக்கும் இடத்துக்கு மேற்குப் புறத்தில் ஒரு குளம் இருந்திருக்கிறது. இன்றும் அந்தக்குளக்கட்டின் ஒரு பகுதியைக்காணலாம். அந்தக் குளக்கட்டில் பயறிமரங்களும் கொண்டல் மரங்களும் செழித்திருந்தன. ஊர்மக்கள் அவற்றின்கீழ் ஒரு கல்லை வைத்து விநாயராகப் பாவித்து வழிபட்டுவந்தனர். குளத்தங்கரையில் விநாயகர் வழிபாடு செய்வது மரபு.

அத்தோடு அதேகாலப்பகுதியில் குளத்தில் சலவைத் தொழில் செய்த தொழிலாளர்கள் பெரிய தம்பிரான் தெய்வத்தை வைத்து வழிபாடு செய்து வந்தனர்.

இக்காலத்தில் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை ஐங்கரன்கோவிலின் பூசகரான சங்கரஐயர் ஈவினைக்கு வந்து விசேடகாலங்களில் விநாயகருக்கு பூசைகள் ஆராதனைகள் செய்து வந்துள்ளார்.

பிற்காலத்தில் குளம் சரியாகப் பராமரிக்கப்படாமல் தூர்ந்து போக, சலவைத் தொழிலாளர்கள் தாம் ஆராதனை செய்துவந்த பெரியதம்பிரான் தெய்வத்துடன் மேற்காக ஏழாலைப் பகுதியை நோக்கி இடம்பெயர்ந்தனர்.

ஊர்மக்கள் தூர்ந்துபோன குளத்தில் இருந்து கிழக்குப் புறத்தில் ஒரு சிறிய மடாலயம் ஒன்றை அமைத்து அங்கு முன்னர் குளத்தில் வழிபட்ட விநாயகர் உருவத்தை வைத்து பூசை வழிபாட்டில் ஈடுபட்டனர். விசேடகாலங்களில் பொங்கிப்படைத்து வழிபாடு ஆற்றத் தொடங்கினர்.

காலக்கிரமத்தில் சங்கர ஐயர், தான் பூசைசெய்துவந்த கோயிலின் பூசை உரிமையையும் கோயிலுக்கு தெற்குப்பக்கத்தில் தனக்குச் சொந்தமாக இருந்த மூன்று பரப்புக் காணியையும் தனது மகள் மாணிக்கம்மா என்பவருக்கு சீதனமாக எழுதிக் கொடுத்தார். (1875ஆம் ஆண்டு சித்திரை முதலாம் திகதி நொத்தாரிசு ச. தம்பையர் முகதாவில் 54ஆம் இலக்கத்தில் ஒப்பேறிய சீதன உறுதி) மாணிக்கம்மாவின் கணவன் ஐயாத்துரைஐயர் சிலகாலம் ஆயாக்கடவையிலிருந்து வந்து பூசை செய்துவந்தார். அவர் இளம்வயதில் அமரத்துவம் அடைந்துவிட அவரது மகன் துரைச்சாமி ஐயர் பூசை செய்து வந்தார்.

துரைச்சாமி ஐயர் தமது நாற்பத்தோராவது வயதில் சிவபதமடைந்தார். அப்போது அவருக்கு மூன்று குமர்ப் பெண்களும் இரு ஆண்பிள்ளைகளும் இருந்தனர். அவர்கள் யாவரும் தாயாரின் அரவணைப்பிலும் பாட்டியாராகிய மாணிக்கம்மாவின்

## சித்தி விநாயகரும், கற்பக விநாயகரும்






## ஈவினை கற்பக விநாயகர் தேவஸ்தானம்

பராமரிப்பிலும் வளர்ந்தனர். இந்நிலையில் பரம்பரை பரம்பரையாக பூஜித்து வந்த பிள்ளையாருக்கு யார் பூசை செய்வது? மூத்தவர்கள் மூவரும் பெண்களாக இருக்கிறார்களே என்ன செய்வது? என்ற பிரச்சினை எழுந்தது. மூத்த புதல்வரான குமாரசாமி ஐயருக்கு ஏழுவயது, அவர் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தார். இளைய புதல்வரான தியாகராஜா ஐயருக்கு வயது நான்கு.

தோணியப்பரைக்காட்டி தோடுடைய செவியன் தேவாரம்பாடிய ஞானசம்பந்தக் குழந்தையின் வயதிலிருந்த கடைக்குட்டி தியாகராஜனைத் தமது இடையிலும் தோளிலுமாக மூன்று பெண்களும் மாறிமாறிச் சுமந்து தினமும் புன்னாலைக்கட்டுவனிலிருந்து ஈவினைக்கு வந்து அக்குழந்தையைப் பிள்ளையாரின் முன் இருத்தி குழந்தையின் பிரதிநிதிகளாகத் தம்மைப் பாவனை செய்து பிள்ளையாரை அபிஷேகித்து பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி தீபமேற்றிப் பூசிப்பதை தினம்தினம் பார்த்த குழந்தையும் அக்காமார்களுடன் சேர்ந்து கைகூப்பி வணங்கத் தொடங்கியது. ஏறத்தாழ நான்கு வருடங்கள் அவர்கள் இத்தகைய பூசை வழிபாட்டினை ஆற்றினர்.

இந்நிலையில் 1917ஆம் ஆண்டளவில் துரைச்சாமி ஐயரின் இரண்டாவது மகளான பொன்னம்மா என்பாரை ஆயாக்கடவை கோயிலின் பிரதம குருவாக இருந்த சிவானந்த ஐயர் திருமணம் செய்தார். இவர் ஆயாக்கடவையிலும் ஈவினையிலும் கோயில் பூசகராக இருந்த சங்கரையரின் பீட்டன் ஆவார். மனைவி பொன்னம்மா சங்கர ஐயரின் பீட்டி ஆவார். இத்திருமண பந்தம் காரணமாக சிவானந்த ஐயர் அவர்களுக்கு ஈவினைப் பிள்ளையார் கோவிலை பராமரித்து பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு ஏற்பட்டது. தனது மனைவியின் தம்பியார் தியாகராஜா ஐயர் உரிய பருவம் அடைந்து கோவிலைப் பொறுப்பேற்கும்வரை கோவிலை மேற்பார்வை செய்து கையளிக்க வேண்டிய கடப்பாடு இருந்தது.

தியாகராஜா ஐயர் வளர்ந்து உரிய பருவம் எய்தியபோது 1918ஆம் ஆண்டில் அவருக்கு பிரம்மோபதேசம் எனப்படும் பூணூல் போடும் வைபவம் நடைபெற்றது. அன்றிலிருந்து அவர்




பிள்ளையாருக்கு பூசைசெய்யும் பெரும் பேற்றினைப் பெற்றிருந்தார். அவரும் ஆயாக்கடவையிலிருந்தே ஈவினைக்கு வந்து பூசைசெய்துவந்தார்.

ஆயாக்கடவை பிள்ளையார் கோவிலில் முதன்முதலில் 1920 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் இடம்பெற்றது. கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்தியவர் சிவானந்த ஐயர் ஆவார்.

கும்பாபிஷேகம் முடிந்த பின்னர் அதுவரைகாலமும் ஆயாக்கடவையில் வழிபட்டுவந்த மூலவிக்கிரகத்தை அவர் ஈவினைப் பிள்ளையார் ஆலயத்துக்கு வழங்கினார். அதற்கு முக்கிய காரணம் அக்காலத்தில் ஈவினைப்பிள்ளையார் ஆலயத்தில் விக்கிரகம் இருக்கவில்லை. குளத்தின் அருகே வைத்து வணங்கப்பட்ட திருவுருவமே இருந்தது.

அதன்பின்னர் ஈவினைப்பிள்ளையார் கோயிலின் கல்லிலாலான கட்டுமானப் பணிகள் ஆகம நியதிப்படி அமையப்பெற்றன. ஊர்மக்கள் பலரும் கோவிலைக் கட்டி எழுப்புவதற்கு பொருளுதவி புரிந்தனர்.

எமது தந்தையார் தியாகராஜ ஐயருக்கு 19 வயதாக இருக்கும் போது, 1928ஆம் ஆண்டு முதன் முதலில் கோவிலின் மஹா கும்பாபிஷேகம் இடம்பெற்றது. அப்போதுதான் தற்போதுள்ள மூலவரது விக்கிரகம் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டுப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதற்குமுன்னர் ஆயாக்கடவை ஐங்கரன் ஆலயத்தில் இருந்து தருவிக்கப்பட்ட ஆறங்குல உயர முள்ள திருவுருவமே மூலவிக்கிரகமாக இருந்தது.

கும்பாபிஷேகம் நடந்த காலத்திருந்து ஏறத்தாழ முப்பது வருடம் சிவானந்தக்குருக்களே ஈவினை கற்பகவிநாயகர் ஆலய (நைமித்திய) உற்சவகாலக் குருவாக விளங்கினார்.

தியாகராஜா ஐயரது காலத்தில் 1928, 1958, 1978 ஆகிய காலப்பகுதிகளில் எம்பெருமானுக்குக் கும்பாபிஷேகங்கள் நடந்தேறியுள்ளன.

ஆயாக்கடவை ஆலயத்திலிருந்து சிவானந்த ஐயரால் வழங்கப்பட்ட சிறிய விக்கிரகம் தற்போது ஈவினைப் பிள்ளையார் கோயில் மூலவரின் அருகே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இத்தகவலை ஈவினை கற்பக விநாயகர் ஆலய பிரதமகுருவாக இருந்த எனது தந்தையார் என்னிடம் கூறியுள்ளார்.

இந்த விக்கிரகம் ஈவினை கற்பக விநாயகர் ஆலயத்தில் பிரதிஷ்டைசெய்யப்பட்டு ஆலயமும் கட்டியெழுப்பப்பட்ட நிலையில், ஆயாக்கடவை சங்கர ஐயர் கதிகாம ஐயரின் மகன் செல்லையர் என்பார் ஈவினை கற்பக விநாயகர் ஆலயத்தில் தமக்குப் பங்கும் உரிமையும் உண்டு என வழக்கொன்றைத் தொடர்ந்தார்.

தமது பரம்பரையினரே அங்கும் பூசை செய்வதும் ஆண்டாண்டு காலமாகத் தமது பரம்பரையினால் வழிபட்டு வந்த மூலவரே தற்போது ஈவினை கற்பக விநாயகர் ஆலயத்தில் மூலமூர்த்தியாக இருப்பதும் அவர் வழக்குத் தொடரக் காரணமாக அமைந்தன.

ஆனாலும் ஈவினைப் பிள்ளையார் ஆலய பூசை உரிமை பெண்வழிச்சொத்து என்ற காரணத்தால் வழக்குத் தள்ளப்பட்டதாக எனது தந்தையார் தியாகராஜா ஐயர் எனக்குக் கூறியுள்ளார். அதே போன்று ஆயாக்கடவை பிள்ளையார் கோயில் பூசை உருத்தாளரான தங்கசாமி ஐயர் லட்சுமி அம்மாவும் இத்தகவலைத் தனது மாமியார் தன்னிடம் கூறியதாக எனக்குத்தெரிவித்துள்ளனர். (லட்சுமி அம்மாவின் கூற்று ஒலி, ஒளிவடிவத்தில் இக்கட்டுரை ஆசிரியரிடம் உள்ளது)

ஐயா எங்கள் தாயாரை 1935ஆம் ஆண்டில் திருமணம் செய்தார். அன்று முதல் அம்மா, பத்தாவுக்கேற்ற பதிவிரதையானார். அவர்கள் இருவரும் தெய்வ வாழ்க்கை வாழ்ந்தார்கள். ஈவினைக் கிராமமக்கள் எல்லோருக்குமே அவர்கள் அன்னையும் தந்தையுமானார்கள்.

'முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கடியேன்' என்பார் சுந்தரமூர்த்திநாயனார். தமது ஒன்பதாவது வயதிலிருந்து சிவபதம்

அடையும்வரை எழுபத்தைந்து ஆண்டுகள் எம்பெருமானது திருமேனியைத் தீண்டி அபிஷேகித்து, மலர்சாத்தி, அர்ச்சித்து வாழ்ந்த எங்கள் ஐயா பிள்ளையாருடன் கொண்டிருந்த உறவு ஆத்மார்த்தமானது. அதனை எண்ணிப் பார்க்கும்போது இப்போதும் என் மெய்சிலிர்க்கிறது. பிள்ளையார் ஐயாவுக்குத் தெய்வம் மட்டுமல்ல, அவரது தெய்வக் குழந்தை! ஒரு குழந்தையைப் பேணுவது போல் பிள்ளையாரை அவர் பேணிவந்தார்.

ஐயா பிள்ளையாரை எப்படி நேசித்தாரோ அதேபோன்று சக மனிதர்களையும் நேசித்தார். தன்னோடு தொடர்புடைய எந்தவொரு காரியமும் மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது, நட்டத்தை ஏற்படுத்தக்கூடாது என்பதில் அவர் எப்போதும் கவனமாக இருந்தார். நெஞ்சுக்கு நேர்மையாக வாழ்ந்தார். அந்தப் பண்பைத் தனது பிள்ளைகளாகிய எமக்கும் கற்றுத் தந்தார்.

அவர்களது காலம் வேறு, இன்றைய காலம் வேறு.

கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப மனிதவாழ்க்கை அமைந் துள்ளது. உலகமயமாதலின் தாக்கங்கள் கிராமமட்டத்திலும் உட்புகுந்துவிட்டன. பலர் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். புலம் பெயர்ந்தவர்கள் தமது பிறந்த மண்ணை, தமது குலதெய்வங்களை மறந்துவிடவில்லை. அதேபோன்று உள்ளூரில் இருப்பவர்களும் போரினால் பாதிக்கப்பட்டுத் தெய்வமொன்றே துணை என வாழத்தலைப்பட்டுள்ளனர். இதன் பெறுபேறாகக் கிராமங்கள் தோறும் கிராம முன்னேற்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. கோயில்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகங்கள் நடைபெறுகின்றன.

ஓர் ஆலயத்தைப் புதுப்பித்துப் பிரதிஷ்டை செய்யும்போது எத்தனையோ வகையான நடவடிக்கைகள் இடம்பெறும். தற்போது தேர்ந்த சிற்பக் கலைஞர்களின் கைவண்ணத்தில் ஆலயம் புதுப் பொலிவுடன் திகழ்கிறது. பக்தர்களின் ஈடுபாட்டினால் திருப்பணிவேலைகள் செம்மையுறுகின்றன. சிவாச்சாரியர்களின் கிரியை விசேடத்தினால் ஆலயத்தில் தெய்வீக சாந்நித்தியம் மேலோங்குகிறது. அடியார்களின் உள்ளங்கள் பக்திப்பரவசத்தில்

திளைக்கின்றன. கிரியை, மந்திரம், பாவனை, நாத உபாசனை, தோத்திரம் அடியவர்களின் பஜனை யாவும் ஒன்றிணைந்து கருவறையில் வீற்றிருக்கும் மூலவர், பிரதிஷ்டையின்போது சாந்நித்தியம் கொள்கிறார். இப்படியாகப் பல்வேறு விடயங்களையும் ஒன்றிணைக்கும் தன்மை கும்பாபிஷேகக் கிரிகைகளுக்கு உண்டு. ஆலயத்தின் அருளாட்சி நிறைந்து "சர்வேஜனா சுஹினோ பவந்து" என்னும் சகல மக்களுக்கும் சுகமாக வாழும் நிலைமை ஏற்படுகிறது.

எமது சகோதரரும் ஆலயத்தின் பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ தி.கெங்காதரக்குருக்கள் காலத்தில் கோயில் பெருவளர்ச்சி கண்டுள்ளது. அவர் இக்கோயிலின் ஐந்தாவது பரம்பரைக்குரு ஆவார். தம்பியாரது காலத்தில் *1999, 2012* ஆண்டுகளில் எம்பெருமானுக்கு கும்பாபிஷேகங்கள் நடந்தேறியுள்ளன. 2012ஆம் ஆண்டில் நடைபெற்ற கும்பாபிஷேகத்திற்குப் பிரதிஷ்டாகுருவாக அவர் இருந்து மஹாகும்பாபிஷேகத்தை நடத்திவைத்தது எங்களது பரம்பரையில் எவருக்குமே கிட்டாத பெரும்பாக்கியம். எங்கள் குலப் பெருமையையெல்லாம் அவர் தன்பெருமையாக்கிக் கொள்ளும் பேற்றினை பிள்ளையார் அவருக்கு வழங்கியிருக்கிறார்.

தற்போது தி. கெங்காதரக் குருக்களின் இளைய மகன் திரு. பாலேஸ்வர சர்மா கோவிலின் ஆறாவது பரம்பரைக்குருவாக விளங்குகிறார்.

சுபமஸ்த்து!

❏

## ஈவினைப் பதிக் கற்பக விநாயகர்
## ஊஞ்சற் பதிகம்

### காப்பு
### விநாயகர் துதி (எழுசீர் விருத்தம்)

*பூவினன் பூவார் கண்ணனே புராரி புங்கவர் போகியே யோகர்*
*பூவினர் போற்றின் புரிசெயல் நிறைவு பொருந்திட அருள்புரி - புனிதன்*
*ஈவினை நகரில் எழுந்தருள் எந்தை ஏரம்பற் கோதுமிவ் வூஞ்சற்*
*பாவினை நிறையப் பாலிக்கும் காப்பாம் கற்பக விநாயகன் பதமே.*

### ஊஞ்சற் பதிகம்
### (தாண்டக விருத்தம்)

*பொற்காலில் புணர்வயிர விட்டம் பூட்டி*
*புகழ்முத்த வடம்பூண்டு மணிகள் போர்த்த*
*விற்காலும் பலகைமிசை விரவும் பூவேய்*
*விரையணைசேர் வியனூஞ்சல் மேவி வைகிச்*
*சொற்பாலும் பொருட்பாலும் தொடர்ந்து நின்றே*
*தோன்றாத துணையாய்த்தோன் றுயிரை யெல்லாம்*
*நற்பாலில் நடத்தியு வினையில் நண்ணும்*
*நாயகரே கற்பகரே ஆடீர் ஊஞ்சல்*

*முன்னையுமை மகிழ்விக்க முடியிற் குட்டி*
*மும்முறைதாழ்ந் தெழுமடியார் முகமே சுட்டும்*
*உன்னதரு ளொழுக்கவரை முழுதும் ஆட்ட*
*உண்மகிழும் உவர்கண்ணீர் திருத்தா ளாட்ட*
*அன்னயுமை அத்தனிரு பால்நின் றாட்ட*
*ஆறுமுகன் அணைந்திடையே ஊக்க மூட்டச்*
*சொன்னவிலும் ஈவினையூர்ச் சோதி துங்கத்*
*தும்பிமுகக் கற்பகரே ஆடீர் ஊஞ்சல்*

*நந்திதிரு மால்நயத்து முழவங் கொட்ட*
*நாடுசுர நாரியர்களின் நடன மாடக்*
*கந்தருவ ராதியர்கள் கானம் பாடக்*
*கமலத்தன் முனிகணத்தர் சாமம் ஓதக்*
*கந்தனரன் கௌரியுளம் களிப்பில் நீடக்*
*காசினியொர் பாற்கருணை கலந்தூ டாடக்*

கந்திபயி லீவினையூர்க் கருணை பூத்த
கற்பகவி நாயகரே ஆடீர் ஊஞ்சல்.

சந்தரனுந் தபனனுமேற் கவிகை தாங்க
சலபதிகால் வட்டமொடு கவரி தாங்க
இந்திரன்வான் இயமன்செங் கோல்கை ஏந்த
இருநிதிக்கோன் நிருதிகா ளாஞ்சி ஏந்த
அந்தரர்கள் பொழியுமலர் மாரி தூங்க
அருங்கவிஞர் அடியார் சொல் வாழ்த்தும் ஓங்கக்
கந்திகள்சூழ் ஈவினையூர் காப்பா மேவும்
கற்பகவி நாயகரே ஆடீர் ஊஞ்சலே

பக்திவளர் பலதரவும் தாழாற் சூழப்
பயில்சினைக்க பன்மலர் தூய்ப் பாதந்தாழ
வித்திவளர் பயிர்விளைந்து வணங்கச் சென்னி
விளங்குதகும் பினம்வேத கீதம் பண்ண
ஒத்துவளர் வாழைகமு குபசா ரங்கன்
ஒருங்கேந்த உளமுருகிச் சபரி செய்யும்
பத்தரன ஈவினைக்கற் பகரே பாங்கில்
பயில்வல்ல வைப்பதியே ஆடீர் ஊஞ்சலே.

ஈவினையான் அயனீந்த உலகத் தீங்கே
இன்சொல்லும் பணிவுமெனும் இவற்றின் மேலும்
ஈவினையால் இரப்போரைப் புரப்போர் வாழும்
இயல்பதனால் இயற்பெயர்கா ரணப்பே ராக்கித்
தீவினையாறொழுகாத திருத்தக் கோர்க்குத்
தினமுமருள் சித்திவிநா யகரே தேவர்
காவனைய ஈவினைக்கே காப்பாயுள்ள
கற்பகவி நாயகரே ஆடீர் ஊஞ்சலே.

இருவினையால் இருண்மலத்தோ டியாக்கப் பட்டே
இருநிலத்திற் பிறப்பிறப்பினிடையாட் டோயாக்
கருவினைநே ருயிரெல்லாம் கதிபெற் றேறக்
கர்மபய னீவினையால் ஊசலாட்டும்
பெருவினையை மேற்கொள்ளும் பெற்றி காட்டப்
பிறங்குதுதிக் கையூசல் ஆட்டும் எங்கள்
கரிமுகவ ஈவினைக்கோர் கதியே தெய்வக்
கற்பகவி நாயகரே ஆடீர் ஊஞ்சல்.

அரனாட அகிலமுடன் சேர்ந்தங்காட
அறுமுகனோ டாடுமயில டிநின் றோடி
அரணாகத் துதிக்கைநுழை அரவைப் போக்க
அவண்குனகூத் தளவிறப்ப வியந்து நின்றே
முரணான முறையெவரும் நேடச் சேர்த்த
முருகனூர் மயிலீர்ப்ப முன்போ லாடும்
திரனாகி ஈவினைசேர் திருவே எந்தாய்
சித்திபுத்தி நாயகரே ஆடீர் ஊஞ்சல்.

மதியேறு மௌலியருள் வியோடாட
மருங்குகுழை மாறாட மலர்த்தா ராடத்
துதியேறு தொந்தியொடு துதிக்க ஆடச்
சுடருமணி வடந்தோன்று முடுவோ டாடப்
பதியேறு பாதமலர் அணிகள் ஆடப்
பரவசமாம் பத்தரடி பற்றி ஆடக்
கதியேற ஈவினையார்க் கருணீர் ராட்டும்
கராசலகற் பகரேபொன் னூஞ்சல் ஆடீர்.

அஞ்சுமுகன் தருமானை முகத்தீர் ஆடீர்
ஆறுமுதற்கா யானையுரு வுகந்தீர் ஆடீர்
அஞ்சுமுத் தபமருள் கரத்தீர் ஆடீர்
ஆறுமுக மருள்வரக கரத்தீர் ஆடீர்
கஞ்சனெழுத் தமித்தெழுதும் வரத்தீர் ஆடீர்
கனகவரைக் கோடெழுதும் உரத்தீர் ஆடீர்
கஞ்சநிகர் ஈவினையிற் கவினார் கோவிற்
கற்பகவி நாயகரே ஊஞ்சல் ஆடீர்.

## வாழ்த்து (எழுசீர் விருத்தம்)

வாழிய மறையோர் ஆனினம் மகங்கள் வான்மழை பொழிகபூ விளைக
வாழிய தரும தானமும் தவமும் வளர்கவை திகசைவ நெறிகள்
வாழிய அரச நீதியெவ் புலகும் மங்களம் பொலிகஎன் றென்னும்
வாழியீ வினையில் விநாயக வரதன் வழிவழி அடியவர் தமிழே.

## எச்சரிக்கை

திருமால்மரு கெனமுன்வரு தேவே எச்சரிக்கை
சிவனார்தரு கரிமாமுகச் சேயே எச்சரீக்கை
பொருமால்கரி அரசுற்பொடி பகவா எச்சரீக்கை
புகலானவர் இடரைப் பொடிப்பவனே எச்சரீக்கை

கருமப்பயன் அருள்மோதகக் கையா எச்சரீக்கை
கடலேழையும் முகந்தேயுமிழ் கையா எச்சரீக்கை
தருமப்பணி புரிவார்க்கருள் தாதா எச்சரீக்கை
தலையாகிய குடிலைதொடர் தாளா எச்சரீக்கை

பரிமாமயி லவன் முன்வரு பாலா எச்சரீக்கை
பயிலும் பல கணமும்பரி பாலா எச்சரீக்கை
வரியார்வழி வலவைக்கொரு வரனே எச்சரீக்கை
வளரீவினை மகிழ்கற்பகப் பரனே எச்சரீக்கை

## பராக்கு

ஆருதனை யூருமரு ளாள பராக்கு
ஆருயிர்கள் ஆளுமிகு தாளா பராக்கு
ஆகுதிசெய் அந்தணருக் கன்பா பராக்கு
ஆலமமு தாக்கினருக் கின்பா பராக்கு

மானீன்ற மதகளிறாம் மைந்தா பராக்கு
மன்னுமருள் ஈயுங்கை ஐந்தா பராக்கு
தேனீன்ற செய்யதமிழ்க் கோவே பராக்கு
தெய்வமறை தேடரிய தேவே பராக்கு

ஆதார சக்தியென்னும் ஐயா பராக்கு
ஆராத அமுதன்ன மெய்யா பராக்கு
வேதாள பூதகண வேந்தே பராக்கு
வென்றயீ வினைமேவும் எந்தால் பராக்கு

## மங்களம்

ஓங்கார ரூபருக்கு மங்களம் - என்றும்
உயர்ஞான தீபனுக்கு மங்களம்
ஆங்காரம் மாய்ப்பவற்கு மங்களம் - யார்க்கும்
ஆதார மாயவதற்கு மங்களம்

வேட்கையறுத் தாள்பவற்கு மங்களம் - ஏதும்
வேண்டினருள் ஈபவற்கு மங்களம்
பூட்கைமுகத் தீசனுக்கு மங்களம் - முத்திப்
போதமருள் தேவிகற்கு மங்களம்
காவிரியைத் தந்தவற்கு மங்களம் - தேவர்
காவலனைக் காத்தவர்க்கு மங்களம்
ஈவினையில் கற்பகற்கு மங்களம் - எங்கள்
ஈசனுக்கு நேசனுக்கு மங்களம்.

தத்திமுகத் தெந்தைதனில் தணியாக்காதல்
தகித்திடவுந் தாங்காது தவிதவித்துப்
பந்தமறிப் பாரிலுளோர் பரவிப்போற்றிப்
பலகாலும் பரிந்துருகிப் பாடியுய்யச்
செந்தமிழிற் தேனொழுகு தெய்வப்பாடல்
திருவூஞ்சல்தித்தித்துத் தெவிட்டச் செய்தான்
கந்தனது கடிநாமம் கனியப்பூண்ட
கவினுறுசுப் பிரமணிய கவிவலோனே.

ஆக்கியோன் :

**இயலிசைவாருதி மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்**

✧✧✧

## ஈவினை மதுரையம்பதி மீனாட்சி அம்மன் ஆலயம்





# 14

# புன்னாலைக்கட்டுவன் ஐயனார் ஆலயம்

**பு**ன்னாலைக்கட்டுவனில் தோன்றிய அதிபழமைவாய்ந்த கோயிலாக இந்த ஐயனார் ஆலயம் கருதப்படுகிறது. குப்பிளான், ஏழாலை, ஈவினை, புன்னாலைக்கட்டுவன் ஆகிய கிராமங்களின் எல்லையில் காக்கும் தெய்வமாக விளங்கும் ஐயனாரின் இந்த ஆலயம் டச்சுக்காரர்களால் இடித்து அழிக்கப்பட்டதாக இந்துக்கலாசார அமைச்சினால் வெளியிடப்பட்ட “இலங்கைத் திருநாட்டின் இந்துக்கோவில்கள்” என்ற நூலிலே சான்றுகள் காணப்படுகின்றன.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வாலயம் தோன்றிய காலத்தில் அயற்கிராமங்களில் பெரிய அளவிலான ஆலயம் எதுவும் தோன்றவில்லை. அயலூரில் இருந்து கிராம மக்கள் பலர் திருவிழாக் காலங்களில் இக்கோவிலில் பெருந்தொகையாக வந்து கலந்து கொள்வார்கள். அக்காலத்தில் தேரோடிய கோவிலாக சிற்ப வேலைகள் கொண்ட திருத்தலமாக விளங்கிய இக்கோவிலில் வாணவேடிக்கைகளும் பெரிய அளவில் இடம்பெற்றன என செவிவழிச்செய்திகள் மூலம் தெரியவருகிறது.

மேலும் இவ்வாலயத்தின் ஸ்தூபியில் பொருத்தப்பட்ட முடி பொன்னால் இழைக்கப்பட்டிருந்தது என்பதையும் கல்லடி வேலுப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்னும் நூலிலிருந்து அறியமுடிகிறது.

டச்சுக்காரரால் அழிக்கப்பட்ட பின்னர் இந்த ஆலயம் இருந்த இடம் காடு நிறைந்து மனித சஞ்சாரம் அற்றுப் போனது. ஆனாலும் ஆடு, மாடு மேய்க்கும் சிறுவர்கள் அங்கு செல்வது வழக்கமாக இருந்தது. பெரியதம்பி இரத்தினசிங்கம், பொன்னையா நாகலிங்கம் ஆகிய சிறுவர்கள் கோவிலின் இடிபாடுகளைக் கண்டு அங்கு இருந்த ஆறடி நீளமான நீள்சதுர வெள்ளைக்கல்லின் மேல் கற்பூரம் கொளுத்தி வழிபடத் தொடங்கினார்கள். சில காலத்தின் பின்னர் கோவிலின் மேற்குப்புறத்தில் உள்ள ஆலமரத்தின் அடியில் தெருவால் செல்லும் வழிபோக்கர்கள் கற்பூரம் கொளுத்தி வழிபடத் தொடங்கினர்.

காலப்போக்கில் அங்கு இருந்த வெள்ளைக்கலின் அருகில் ஒரு திரிசூலம் அமையப்பெற்று அயலில் உள்ள விவசாயிகள் வழிபாடாற்றத் தொடங்கினர். 1950ஆம் ஆண்டளவில் அருகே உள்ள ஆங்கிலப் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள், அங்குவந்து சரஸ்வதி பூஜை வழிபாடுகள் செய் வதற்கு அங்குள்ள சைவசமய ஆசிரியர்கள் ஊக்கப் படுத்தினர். விவசாயிகள் நேர்திக்கடன்கள் வைத்து விஷேட நாட்களில் பொங்கிப்படைத்து வழிபாடாற்றினர்.

திரு. இரத்தினசிங்கம் என்பவரின் முயற்சியில் முன்னர் ஆலயம் இருந்த இடத்தில் ஒரு சிறிய மடாலயம் அமைக்கப்பட்டது. அங்கு தெய்வங்களின் திருவுருவங்கள், வேல், சூலம் ஆகியன நிர்மாணிக்கப்பட்டு தினசரி பூஜைகள் இடம் பெற்றன. பிரம்மஸ்ரீ தியாகராஜா ஐயர், அவரது மகன் கெங்காதரக்குருக்கள் ஆகியோர் இக்கோவிலின் பூசைகளை செய்து வந்தனர். பௌர்ணமி நாட்களில் விஷேட பூஜைகள் இடம்பெற்றன. பக்தர்களின் தொகை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. 1975 - 1980 காலப்பகுதியில் திரு. இரத்தினசிங்கம் அவர்களின் உதவியுடன் கெங்காதரக்குருக்கள் ஒரு ஆலயத்தை ஆகம முறைப்படி அமைத்தார். கட்டிட வேலைகள் தொடர்ந்து நடைபெற்ற வேளையில் 1987ஆம் ஆண்டு ஈழப்போர் இடம்பெற்ற வேளையில் இந்திய இராணுவத்தினரினால் கோயில் மீண்டும் இடிக்கப்பட்டது.

இக்கோவிலின் எச்சங்கள் 1964 - 1965 காலப்பகுதியில் இக்கிராமத்து இளைஞர்களால் வீதிபுணரமைப்பு செய்யப்பட்ட

போது நிலத்தடி சுடுமண் பாவைகள் பல கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் யானை உருவ சிற்பங்கள் பல காணப்பட்டன. அவை அக்காலத்தில் கோயிலைச்சுற்றி அமைக்கப்பட்ட மதில்களில் பொருத்தப்பட்டிருக்கலாம் என சிவாச்சாரியார்கள் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

2004இல் இரத்தினசிங்கம் அரிகரன் மேற்கொண்ட பெரு முயற்சியால் ஐயப்பன் ஆலயமாக அடிக்கல் நாட்டப்பட்டு முறைப்படி வடிவமைக்கப்பட்டு 03/06/2011இல் கும்பாபிஷேகம் இடம்பெற்றது. தொடர்ந்து, நித்திய, நைமித்திய பூஜைகள் இடம்பெறுகின்றன. இக்கோவிலில் பிரம்மஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் ஸ்ரீகுகந்தன சர்மா அவர்கள் பூஜை வழிபாடுகளை செய்துவருகிறார். இவரது மூதாதையர்களான இரத்தினேஸ்வர ஐயர், கதிர்காமையர், கடவுள் ஐயர் ஆகியோரே ஆதிதொட்டு அந்தணர்களாக இந்த ஆலயத்தின் பூசை வழிபாடாற்றி வந்துள்ளனர் என்பதற்கான சான்றாதாரமாக கோவிலின் வடபகுதியிலும் மேற்குப்பகுதியிலும் அவர்களுக்கு உரித்தான காணிகள் சமீபகாலம் வரை இருந்துள்ளன.

கோவில் இடிபட்ட பின்னர் அவர்கள் அக்காணிகளில் குடியிருக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்க வேண்டும் இந்திய ராணுவத்திரால் 1987இல் கோயில் இடிக்கப்படும்போது எஞ்சிய சிற்பங்கள் (பூதங்கள்) தற்போதுள்ள கோவிலின் மதில் சுவரில் பொருத்தப்படுள்ளன. 1980களில் புதிய நிர்மாண வேலைகளுக்காக அத்திவாரம் இட்டபோது அங்கு கண்டெடுக்கப்பட்ட கோயில் கொடிஸ்தம்பதின் அடிப்பகுதி, ஆதிகாலத்தில் இக்கோவிலில் கொடியேற்றி திருவிழாக்கள் நடைபெற்றதை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

இக்கோவிலில் கார்த்திகை மாதத்தில் ஐயப்ப பக்தர்கள் மாலையணிவது வழக்கமாக உள்ளது. அவர்களில் சிலர் சபரிமலை சென்று மகரஜோதி தரிசனம் பெற்று தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதாக அறியமுடிகிறது. மேலும் இவ்வாலயத்தின் மகரஜோதி திருவிழா வருடம் தோறும் நடைபெறுகிறது.

ஆதிகாலத்தில் அமைந்த கோவிலின் திருமஞ்சனக்கிணறு தற்போதும் பாவனையில் உள்ளது. ஐயனார் தீர்த்தமாடிய

தூர்ந்துபோன தீர்தக்கேணி கோவிலின் கிழக்குப்புறத்தில் 150 யார் தூரத்தில் தெருவின் வடபுறத்தில் காணப்படுகிறது.

ஐயனார் ஆலயத்தின் தீர்தக்கேணி தொடர்பான ஒரு கர்ண பரம்பரை கதை நிலவுகிறது. அக்காலத்தில் திரு. சுப்பிரமணியம் என்பார் கப்பல் ஓடி வியாபாரத்தில் ஈடுபடுபவர். அவர் ஐயனாரது தீர்தக்கேணியை மண்ணினால் நிரப்பிவிட்டு அவ்விடத்தை தனது விவசாய நிலமாக்கயுள்ளார். ஓரிரு நாட்களில் அவரது வியாபாரக்கப்பல் நடுக்கடலில் தீப்படித்து எரிந்து சாம்பலானது. ஐயனாரின் கோபத்துக்குத் தான் ஆளானதை உணர்ந்த அவர் அக்கேணியை சுற்றி சீமெந்தினால் எல்லைகட்டி ஐயனாரின் தீர்தக்கேணியாக அடையாளப்படுத்தியிருக்கிறார்.

முற்காலத்தில், இக்கோவிலில் நடுநிசியில் பலதேவ கணங்கள் பூசை செய்வதை ஊர்வாசிகள் பலரும் கண்டுள்ளதாக செவிவழிச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் கோலிலின் தெருவோரமாக உள்ள ஆலமரத்தில் இரவு நேரங்களில் தீப்பிழம்புகள் மேலும் கீழும் ஓடி எரிந்து அணைவதை பலர் கண்டுள்ளனர். இதனை எனது மூதாதையர்கள் பலர் கண்டதாக என்னிடம் கூறியுள்ளனர்.

புன்னைநகர் காவல் தெய்வமாக விளங்கிய ஐயனார் தற்போது ஐயப்பன் தெய்வமாக மக்களால் பயபக்தியுடன் வழிபாடு செய்யப்படும் தெய்வமாக விளங்குகிறார்.

❑



உ

ஸ்ரீ அரிஹரபுத்திரர் துணை.

# புன்னாலைக் கட்டுவன் – வடக்கு ஸ்ரீ அரிஹர புத்திரர் திருவூஞ்சல்

## காப்பு
## (ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் ஸ்துதி)

பூந்தமிழின் புலவர்களும் புரவ லர்கள்
புடைசூழும் நன்னகராம் புன்னை தன்னில்
காந்தமிகு தொன்மைதவழ் ஆல யமாம்
கவின்ஐய னார்கோயில் எழுந்த ருளிச்
சாந்தமொடு நல்லருளைப் பொழியும் ஐயன்
சாஸ்தாவாம் அரிஹர புத்திர னார்
பாந்தமிகு தமிழூஞ்சல் தனிலே ஆடப்
பரன்ஆயாக் கடவைவிநா யகர்காப் பாமே.

## நூல்

1. பவளத்தூண் நான்கும்நால் வேத மாகப்
பாலிக்கும் விட்டம்ஆ கமமு மாக
நவமான கலைஞானம் கயிற தாக
நாதஓங் காரமே பீட மாகத்
தவமான செந்தமிழின் ஊஞ்சல் வைகித்
தவழ்தொன்மை ஆலயமும் அமைந்த ஊராம்
அவிழ்மலரின் புன்னைநகர் வடபால் மேவும்
அரிஹர புத்திரரே ஆடீர் ஊஞ்சல்.

2. மேதினியில் பக்திநாற் றூண்நி றுத்தி
மேலான புலனைந்தை விட்ட மாக்கிச்
சோதிமிகு நாற்கரண வடங்கள் மாட்டிச்
சோபனஞ்சேர் திருவருளாம் பலகை தேக்கி
நாதிதரும் முத்தியெனும் ஊஞ்ச லாட
நல்லருளை ஆத்மாவுக் கருளும் தேவா!
ஆதிதவப் புன்னைநகர் வடபால் மேவும்
அரிஹர புத்திரரே ஆடீர் ஊஞ்சல்.

3. ரத்தினஞ்சேர் மணிமுடியின் கிரீட மாட
இலங்குசுரிக் குஞ்சியொடு குழைக ளாட
வித்தகஞ்சேர் செங்கமல வதன மாட
விழிகளிலே அருள்பொழியும் கருணை ஆடச்
சித்தியருள் செவ்விதழில் முறுவ லாடச்
சீராட நூலாட அருளும் ஆட
அத்திருவூர் புன்னைநகர் வடபால் மேவும்
அரிஹர புத்திரரே ஆடீர் ஊஞ்சல்.

4. பொருந்துமலர்க் கொன்றைமணி மாலை ஆடப்
பூங்கரத்தில் ஞானமுத் திரையும் ஆட
இருந்தஇடை தனில்யோக வடமு மாட
இலங்கிடும் தவிசாட வாசி ஆடச்
சுருண்டகுழல்ப் புட்கலைபூ ரணையா ராடச்
சோபிதம்சேர் அம்பரமும் நூலும் ஆட
அருந்தலமாம் புன்னைநகர் வடபால் மேவும்
அரிஹர புத்திரரே ஆடீர் ஊஞ்சல்

5. திருவடியில் செஞ்சதங்கை கொஞ்சி ஆடத்
திருமேனிச் சந்தனகுங் குமமும் ஆடப்
பெருவரங்கள் தரும்ஞானக் கரமு மாடப்
பேரருளைத் தரும்நயன விழிக ளாட
அருகினிலே பூரணைபுட் கலையா ராட
அரியாட அரனாட அயனும் ஆட
அருள்மலியூர் புன்னைநகர் வடபால் மேவும்
அரிஹர புத்திரரே ஆடீர் ஊஞ்சல்.

6. ஞானந்த னையருளும் கரமு மாட
ஞாலத்தில் பக்தர்வீழி நீரு மாட
மோனந்த வழ்மலரின் செண்டு மாட
முகிழ்மகர ஜோதியது மிளிர்ந்தே ஆடக்
கானந்த னைப்பாடி அடிய ராடக்
கனிந்தருளைப் பொழிகின்ற அய்ய னாரே!
ஆனந்தப் புன்னைநகர் வடபால் மேவும்
அரிஹர புத்திரரே ஆடீர் ஊஞ்சல்

7. ஞாயிறுவும் திங்கள்வெண் குடையை ஏந்த
ஞாலத்தில் ஐயப்பன் செவ்வாய் பூக்கப்
பாயிரம்நா ராதர்பாடப் பூத கணம்
பணிவோடு இசைக்கொம்பு தன்னை ஊதத்

தோயுவியா மூன்பூணூல் தரித்து வெள்ளித்
தவிசினிலே ஆசனிக்கும் தர்ம ஸாஸ்தா!
ஆயகலைப் புன்னைநகர் வடபால் மேவும்
அரிஹர புத்திரரே ஆடீர் ஊஞ்சல்

8. மணிகண்டன் வதனமதில் அருளும் பூப்ப
மலர்க்கரத்தில் யோகமுத் திரையும் காட்டித்
தணியாத தாகவிழிக் கருணை காட்டித்
தரணியிலே எமையெல்லாம் காக்கும் ஐயன்
அணியோக வடம்புனைந்து வெண்ணூல் பூண்டு
ஆட்கொண்டு அருளுகின்ற ஐய னாரே!
அணியீழப் புன்னைநகர் வடபால் மேவும்
அரிஹர புத்திரரே ஆடீர் ஊஞ்சல்

9. கழலாடக் கலையாட மானும் ஆடக்
கரங்களிலே அம்புவிற் படையு மாடத்
தழலாடப் புட்கலைபூ ரணையா ராடத்
தவழிடையில் யோகவடம் திகழ்ந்தே ஆடக்
குழலாடக் கோவிந்தன் மகிழ்ந்தே ஆடக்
குஞ்சரனும் குமரனும் சிவனு மாட
அழகான புன்னைநகர் வடபால் மேவும்
அரிஹர புத்திரரே ஆடீர் ஊஞ்சல்.

10. சிவனரியாம் சின்மயனே ஆடீர் ஊஞ்சல்
செண்டேந்தும் திருக்கரனே ஆடீர் ஊஞ்சல்
நவத்தந்தி வாகனத்தோய் ஆடீர் ஊஞ்சல்
நவில்மகர ஜோதியே ஆடீர் ஊஞ்சல்
புவனிப்புலிப் பால்கறந்தோய் ஆடீர் ஊஞ்சல்
புல்லன்மா காளன்காலா ஆடீர் ஊஞ்சல்
அவனியிலே புன்னைநகர் வடபால் மேவும்
அரிஹர புத்திரரே ஆடீர் ஊஞ்சல்

## வாழி

11. வேதியரும் தேவரொடு மாரி வாழி!
விளங்குபசு வினம்வேந்தன் செங்கோல் வாழி!
மேதினியில் சைவநெறி தமிழும் வாழி!
மேன்மைமிகு ஆன்மநெறி மிளிர்ந்து வாழி
போதனைசெய் ஐயப்பன் போதம் வாழி!
பூவையரின் கற்புநெறி ஞானம் வாழி!

ஆதிதலப் புன்னைநகர் நீடு வாழி!
அரிஹர புத்திரனார் வாழி! வாழி!

## எச்சரீக்கை

1. வெண்வாகனம் இவர்வோய் மணி கண்டா எச்ச ரீக்கை
வியன்ஞானத்தின் கரத்தோய்தர்ம ஸாஸ்தாஎச்ச ரீக்கை
தண்யோகத்தின் வடம்சூடிடும் ஸாஸ்தா எச்ச ரீக்கை
தலப் புன்னையின் வடபால்வளர் நாதா எச்ச ரீக்கை

2. மாகாளனின் அகந்தைதனைத் தொலைத்தாய் எச்ச ரீக்கை
மகரஜோதிப் பிரகாசனே ஸாஸ்தா எச்ச ரீக்கை
தேகாரோக்யம் தரும்தெய்வமே தீபா எச்ச ரீக்கை
தலப்புன்னையின் வடபால்வளர் நாதா எச்ச ரீக்கை

3. அடியார்வேண்டும் வரங்கள்எல்லாம் அருள்வோய் எச்ச ரீக்கை
அய்யனாரே! தர்ம ஸாஸ்தாத் தேவா எச்ச ரீக்கை
மிடியாவையும் தீர்க்கும்மணி கண்டா எச்ச ரீக்கை
மிளிர் புன்னையின் வடபால்வளர் நாதா எச்ச ரீக்கை

4. பதமேகதி எனும்பக்தருக் கருள்வோய் எச்ச ரீக்கை
பாதாம்புஜம் தரும்நாயகா ஸாஸ்தா எச்ச ரீக்கை
நிதமே உந்தன் கதியேஅருள் தேவா எச்ச ரீக்கை
நிழற் புன்னையின் வடபால்வளர் நாதா எச்ச ரீக்கை

## பராக்கு

1. பூரணபுட் கலையான் நாதா பராக்கு
புலிப்பால் கறந்தவனே தேவா பராக்கு
நாராணன் சிவன்புதல்வா ஸாஸ்தா பராக்கு
நளினபுன்னை வாசாஐய னாரே பராக்கு

2. மகரஜோதித் தீபரூபா மகிபா பராக்கு
மங்களம் தருபவனே ஸாஸ்தா பராக்கு
அகமதிலே அமைதியையே அருள்வோய் பராக்கு
அழகுபுன்னை வாசஐய னாரே பராக்கு

3. அம்புவில் ஏந்திடும் படையோய் பராக்கு
    அழகுவெள்ளை யானையிலே வருவோய் பராக்கு
எம்பிறவி வினைதீர்க்கும் இறைவா பராக்கு
    இனியபுன்னை வாசாஐய னாரே பராக்கு.

4. வேண்டுவார் வேண்டுவதை ஈவோய் பராக்கு
    வீரமா காளனின் காலா பராக்கு
ஆண்டவனே ஐயப்ப தேவா பராக்கு
    அழகு புன்னை வாசஐய னாரே பராக்கு

## லாலி

1. இருமுடி யுடையார்க்கு லாலி சுப லாலி
    இனியதர்ம ஸாஸ்தாவுக்கு லாலி சுப லாலி
பெரும்சபரி மலையாருக்கு லாலி சுப லாலி
    பேராநந்தம் தருபவர்க்கு லாலி சுப லாலி

2. பதினெட்டுப் படியாருக்கு லாலி சுப லாலி
    பக்தர்ச காயருக்கு லாலி சுப லாலி
கதி எமக்கு அருள்பவர்க்கு லாலி சுப லாலி
    பதிபுன்னை வாசருக்கு லாலி

3. ஐயப்ப வள்ளலுக்கு லாலி சுப லாலி
    அரிஹர புத்திரர்க்கு லாலி சுப லாலி
மெய்யப்ப தேவனுக்கு லாலி சுப லாலி
    மணிகண்ட நாதருக்கு லாலி சுப லாலி

4. நன்னயங்கள் செய்பவர்க்கு லாலி சுப லாலி
    நாதன்தர்ம ஸாஸ்தாவுக்கு லாலி சுப லாலி
புன்னைப்பதி அமர்பவர்க்கு லாலி சுப லாலி
    புனிதஐயப் பஸ்வாமிக்கு லாலி சுப லாலி

**மங்களம்**

ராகம் : சுருட்டி தாளம் : ஆதி

**பல்லவி**

அரிஹர புத்திரர்க்கு
ஜெயமங்களம் - வெள்ளை
ஆனைவாக னத்தாருக்கும்
சுப மங்களம்

**அநுபல்லவி**

புர புன்னை நகருக்கும்
ஜெயமங்களம் - என்றும்
பிரான் சாஸ்தா பக்தருக்கும்
சுபமங்களம்.

**சரணம்**

ஆயாக்கடவை வாழும்
ஐங்கரர்க்கு மங்களம்
தூய ராஜேஸ்வரி அம்பாள்
துர்க்கைக்கும் மங்களம்
நேயமிகு பூதராயர்
மீனாஷிமனோன் மணிக்கும்
தூயபக்தர் யாவருக்கும்
தொண்டருக்கும் மங்களம்

சுபம்

**புன்னாலைக் கட்டுவன் வடக்கு ஸ்ரீ அரிஹரபுத்தரர்**
**திருவூஞ்சல்**
**எச்சரீக்கை – பராக்கு – லாலி – மங்களம்**
**முற்றும்.**

ஆக்கியோன் :
**இயலிசைவாருதி மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்**

✧✧✧

# 15

# புன்னாலைக்கட்டுவன் குளத்தடி நாச்சிமார் கோவில்

**ஏ**றத்தாழ முந்நூறு ஆண்டுகள் பழமைவாய்ந்த இக்கோவில் கிராமிய வழிபாடு சார்ந்ததாக இருந்து வந்துள்ளது. வடக்குப் புன்னாலைக்கட்டுவனில் இருந்த கட்டுக்குளத்தினருகே இக்கோவில் வழிபாடு ஆரம்பித்தாக அறியமுடிகிறது. இக்கோவிலின் தலவிருட்சமாக ஆலமரம் விளங்குகிறது. ஆதிகாலத்தில் இந்த ஆலமரத்தடியில் நாச்சியார் தெய்வமாக ஒரு கல்லினைப் பாவனை செய்து அருகிலுள்ள விவசாயிகள் வழிபட்டு வந்தனர். காலக்கிரமத்தில் கருங்கல்லினால் ஆன நாச்சிமார் சிலை ஒன்றை ஸ்தாபித்து வழிபாடாற்றினர். விவசாயிகள் இக்கோயில் வருடாவருடம் வைகாசி விசாக காலத்தில் பொங்கிப்படைத்து பறை மேள பேரிகை கொட்டி, தீமிதித்து வழிபாடு செய்வது வழக்கம். மாதாமாதம் பௌர்ணமி தினங்களில் விஷேட பொங்கல் பூசைகள் இடம்பெறுகின்றன. பலதரப்பட்ட நாச்சிமாரின் மகிமைக் கதைகள் இன்றும் மக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகின்றன.

இரவு வேளைகளில் சப்த கன்னிகைகள் நாச்சிமாரை வந்து வழிபடுவதாகவும் அவர்கள் வரும் சலங்கைச் சப்தத்தை பலர் கேட்டதாகவும் கோயிலின் அருகேயுள்ள விவசாயிகள் பேசிக்கொள்கின்றனர்.





கோவிலின் ஈசான மூலையில் ஒரு பெரிய கல் காணப் படுவதாகும் அக்கல்லில் பல்லாங்குழி விளையாடுவதற்குரிய ஏழுகுழிகள் அமைந்திருப்பதாகவும் சப்த கன்னிகைகள் இரவில் அக்கல்லின் அருகே அமர்ந்து பல்லாங்குழி விளையாடுவதாகவும் அறியமுடிகிறது.

அருகிலுள்ள விவசாயி ஒருவர் விதைத்திருந்த வரகு தானியத்தை இரவில் கள்வர்கள் திருடியபோது, அதனை நாச்சியார் விவசாயியின் கனவில் தோன்றி கூறியதாவும் அதனால் கள்வர்கள் கையும் களவுமாக பிடிபட்டதாகவும் அறிய முடிகிறது. அந்த விவசாயின் தோட்டம் “கள்வனைப்பிடித்த கலட்டி” எனும் பெயருடன் தற்போதும் விளங்கி வருகிறது.

முன்னொருகாலத்தில் கல்லடி வேலுப்பிள்ளையின் தந்தையார் நாச்சிமாரை வணங்காது குதிரை வண்டியில் யாழ்ப்பாணம் செல்கையில் கோயிலின் முன்னால் உள்ள தெருவின் மத்தியில் நாச்சிமார் வெள்ளைப் புடவையுடன் தோன்றியதால் குதிரைகள் பயந்து வெருட்சியடைந்து தரித்து நின்றதாகவும், அதனை அடுத்து கல்லடி வேலனாரின் தந்தையார் தனது தவறை உணர்ந்து நாச்சிமாரை வழிபாடு செய்த பின்னரே பயணத்தைதொடர முடிந்ததாகவும் கூறப்படுகிறது.

மேலும் இப்பகுதியிலே பாம்புகளின் அதிக நடமாட்டம் உள்ளதாகவும் மக்கள் கூறுகின்றனர்.



### ஸ்ரீ விஷ்ணு துர்க்காதேவி கோவில்

நாச்சிமாரின் பக்தர் ஒருவரின் கனவில் ஒரு அம்மனின் சிலை ஓர் கிணற்றினுள்ளே இருப்பதாக தோன்றியதால், அவர் அதனை கோவில் பிரதம குருக்களாகிய நடேச ஐயரிடமும் அவரது மகன் சபாரத்தினக்குருக்கள் அவர்களிடமும் தெரிவித்துள்ளார்.

அச்சிலை கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டு அதற்கான கோவிலமைத்து வழிபாடு செய்து வருகின்றனர். இந்நிகழ்வானது 1949/50 காலப்பகுதியில் நிகழ்ந்தது. மாதகல் நடாசக்குருக்கள் என்பார் இக்கோவில் கட்டுவற்கான நிலையத்தை அமைத்துக் கொடுத்தார். 1962ஆம் ஆண்டளவில் இக்கோவிலின் கட்டட வேலைகள்ஆரம்பமானது. 01/02/1967இல் மாதகல் சிவஸ்ரீ நா.நடராசக்குருக்கள் தலைமையில் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் 01/05/2015இல் சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்துள்ளது.

அதன்பின்னர் சபாரத்தினக்குருக்கள் கோவிலின் பிரதம குருவாக இருந்துவந்துள்ளார்.

கண்டெடுக்கப்பட்ட சிலையின் கரங்களில் சங்குசக்கரமும் சூலமும் ஒருகையில் அட்சய பாத்திரமும் காணப்படுகிறது. சிலையின் அடிப்பாகத்தில் எருமைத்தலையுடன் கூடிய வாகனம் காணப்படுகின்றது. இச்சிலை மகிஷவர்த்தனி அம்பாளின் சிலையாகும். இதற்கான கோவில் கட்டட நிர்மாண வேலைகள் நிறைவடைந்து *08/10/1985* கும்பாபிஷேகம் நிகழ்ந்துள்ளது.

கோவிலின் பின்புறத்தில் பழைய நாச்சிமாருக்கான கோவிலும் புதிதாக அமைக்கபட்டுள்ளது. வருடம்தோறும் மாசிமாதத்தில்வரும் பொளர்ணமியன்று தீர்த்தம் நடைபெறுகிறது. தமிழ் ஈழப்போரின் போது இலங்கை இராணுவத்தினர் இக்கோவிலை நெருங்க விடாது பாம்புகள் பாதுகாத்ததாக அறியமுடிகிறது. இந்தக் கோவில் சபாரத்தினக்குருக்களின் சொந்தமான காணியில் அமைக்கப் பெற்று அவரது மகன் ஸ்ரீ குகந்தன சர்மாவுக்கு கையளிக்கப்படதாக அறியமுடிகிறது.

❑

## யாழ்.புன்னாலைக்கட்டுவன் வடக்கு
## ஸ்ரீ விஷ்ணு துர்க்கா தேவி
## திருப்பொன்னூஞ்சல்

### காப்பு

*ஞானமத வாரணனே உமையாள் மைந்தா*
*நான்மறைப் பொருளமுதை மேருவெற்பில்*
*தானமுயர் ஒரு கொம்பால் வரைந்த செல்வா*
*தற்பரனே விக்கினங்கள் தீர்க்கும் தேவே*
*மானமுயர் வடபுன்னைப் பதியமர்ந்த*
*மகாசக்தி விஷ்ணுதுர்க்கை ஊஞ்சல்பாட*
*கானமுயர் முத்தமிழின் அழகுச் செல்வக்*
*கணபதியே நின்திருத்தாள் காப்பதாமே.*

**1.** *சோதிவடி வானவளே பரமன் பாகச்*
*சுந்தரியே அகிலாண்ட கோடி யீன்ற*
*ஆதிசிவ நாயகியே அம்பலத்தில்*
*ஆடியுயிர் காத்தருளும் உமையே சைவ*
*நீதிநெறி வளர்த்தவளே தமிழ் செழிக்க*
*நெடு மதுரை யரசாட்சி புரிந்த தாயே*
*வேதமுயர் வடபுன்னைப் பதியின் மேவும்*
*விஷ்ணு துர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்.*

**2.** *உளங்குளிரும் நான்குமறை கால்களாக*
*உயர்ந்த சிவா கமங்களெல்லாம் நாண்களாக*
*வளங்குளிரும் திருமுறைகள் பீடமாக*
*மருவிய எண் ணெணகலைகள் மாடமாக*
*களங்கமிலாப் புராணங்கள் விட்டமாக*
*கருதுதத் துவங்களுயர் வட்டமாக*
*விளங்கு தமிழ் வட புன்னைப் பதியின் மேவும்*
*விஷ்ணுதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்*

**3.** *பருதியொடு சந்திரனும் குடைகள் தாங்க*
*பரவுஜயை விஜயைகுழாம் படைகள் தாங்க*
*சுருதிதரு மயன்மாயன் இசைகள் கூட்ட*
*தொழுவாணி கமலமகள் வடந் தொட்டாட்ட*
*எருதமரும் இறைவனெழில் மாலை சூட்ட*
*இபமுகனும் குருபரனும் வரிசை நாட்ட*

விருது மிகு வடபுன்னைப் பதியின் மேவும்
விஷ்ணுதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்.

4. தண்ணளிசேர் சப்தகன்னி நாச்சிமாரின்
தலைவியெனத் தவமுடையான் பூசையேற்று
தண்ணமுறு வரங்கொடுத்துப் பிணிகள் நீக்கி
சிந்திப்பர் பந்தவினை பறித்து வேண்டும்
வண்ணமுடன் அடியாரின் கழுத்தில் தோன்றி
மனங்குளிர ஞானமருந் தருள்வா யம்மா
விண்ணனைய வடபுன்னைப் பதியின் மேவும்
விஷ்ணுதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்.

5. கருந்துளபக் கண்ணனது தங்கையென்று
கரங்களிலே நெடுநேமி சங்கு தாங்கி
பொருந்துசுக வளஞ்சுரந்து வறுமை போக்கிப்
பொன்மாரி பொழிந்தவளே, குருந்தின் கீழே
இருந்தவனின் வாக்குரைக்கும் கிளியே, எங்கள்
இன்னலெலாம் நின்கணவற் கியம் பொழுதோ
விருந்துதரு வடபுன்னைப் பதியின் மேவும்
விஷ்ணுதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்.

6. பான்முலையீந் தொருகுழந்தை பாடவைத்தாய்
பயில்தவத்தால் சிவன்பாதி கூட வைத்தாய்
ஊன்மலிந்த வசுரரொழிந் தோட வைத்தாய்
உதைந்தன்று வருநமனை வாட வைத்தாய்
தேன்மலர்வாய்ச் சரவணனைத் தந்தணைத்தாய்
திருத்தொண்டர்க் கிரங்கிமணிக் கோயில் வந்தாய்
மேன்மைதரு வடபுன்னைப் பதியின் மேவும்
விஷ்ணுதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்.

7. உரையுணரா ஓங்காரத் தொளிவிளக்கே
உண்மையள வானந்தக் கருணைத் தேனே
கரையறியாத் துவாதசாந் தத்தின் மத்திக்
கதிர்மதியாய்க் கனிரசமாய்ச் சுவைக்கும் பாகே
வரையுடையான் மகளாகிக் கைலை யானை
மணம் பூண்டு மன்னுயிரை வாழ் வித்தாயே
விரை பொழிவார் வடபுன்னைப் பதியின் மேவும்
விஷ்ணுதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்.

8. காரணியாம் மதிகாட்டிக் காட்சிதந்தாய்
காமாட்சி யாய்க்கம்பைத் தவமிருந்தாய்
ஆரணியாய்ச் சிலம்பொன்று தந்து காத்தாய்
அடல்மகிடன் உடல்சீண்டித் தருமம் பூத்தாய்
நாரணியாய் நன்னாகம் பூசை செய்ய
நயந்த கட்டுக்குளத்தருகே கொலுவிருந்தாய்
வீரசிவ வடபுன்னைப் பதியின் மேவும்
விஷ்ணுதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்.

9. மதியேறு சடையாட மணித்தோடாட
மலர்கமல முகமாட விழிகளாட
துதியேறு கரமாட துவர்வா யாட
துலங்குமங் கலமாட தொடையலாட
நிதியேறு துகிலொடுநூ லிடையுமாட
நிரைதரளச் செஞ்சிலம்பாரடி களாட
விதியாறும் வடபுன்னைப் பதியின்மேவும்
விஷ்ணு துர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்.

10. நாடுதமிழ் வடிவினளே யாடீரூஞ்சல்
நவபூதப் படையினளே யாடீரூஞ்சல்
தேடுமறைப் பொருளாளே யாடீரூஞ்சல்
சிங்கத்தில் வருவாளே யாடீரூஞ்சல்
வாடுமெனமக் காப்பவளே யாடீரூஞ்சல்
வஞ்சனையைத் தீர்ப்பவளே யாடீரூஞ்சல்
வீடு தரும் வடபுன்னைப் பதியின் மேவும்
விஷ்ணுதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்.

## வாழி

பொறுமை தரு சமுதாய மக்கள் வாழி
பொருந்து தமிழ் மொழி வாழி தருமம் வாழி
சிறுமையிலாச் சைவநெறி வாழி அன்புத்
திறல்வாழி கொடைநீதி வாழி பண்பின்
அறமுயரும் ஆலயங்கள் வாழி தொண்டின்
அடியார்கள், அந்தணர்கள், சிறந்து வாழி
விறலதிக புன்னாலைக் கட்டூர் வாழி
விஷ்ணு துர்க்கை திருவடிகள் வாழி வாழி.

## மங்களம்

*மங்கள மேசுப மங்களமே*
*மங்கள மேசுப மங்களமே*

*ஐங்கர நாதற்கு மங்களமே*
*அறுமுக வேலற்கு மங்களமே*
*சங்கர சிவனுக்கு மங்களமே*
*சாரங்க பாணிக்கு மங்களமே*

*(மங்களமே)*

*பங்கயச் செல்விக்கு மங்களமே*
*பாரதி வாணிக்கு மங்களமே*
*கெங்கரச் சூலற்கு மங்களமே*
*ஸ்ரீ விஷ்ணு துர்க்கைக்கு மங்களமே.*

*(மங்களமே)*

*ஆக்கியோன் :*
**அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்**
**08.10.1985**

✧✧✧

# 16

# கட்டுக்குள கந்தசாமி ஆலயம்

**ஏ**றத்தாழ முன்னூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைகக் கொண்டது இந்த ஆலயம்.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சோழவள நாட்டில் இருந்து வந்த காசிப கோத்திர அந்தணர்களும் முதலிவழி மாப்பாணர்வழி வேளாண்குல திலகர்களும் புன்னாலைக்கட்டுவன் வடக்கில் மாப்பாண வளவிலும் தெற்கிலும் குடியேறினர். சிலர் அயலில் உள்ள குப்பிளான் கிராமத்தில் குடியேறினர். அந்தண சிரேஷ்டராகிய குப்பிளான் இரத்தினேஸ்வர ஐயர் என்பார், வடக்குப் புன்னாலைக்கட்டுவன் கட்டுக்குளத்தினருகே வியாகப் பள்ளப்பிலம் என்ற அவருக்கு சொந்தமான காணியில் ஒரு கந்தசாமி ஆலயத்தை மடாலயமாக ஆரம்பித்தார். காலக் கிரமத்தில் அவரது வழித்தோன்றல்களான கதிர்காம ஐயர் கடவுள் ஐயர் என்பார் இக்கோவிலை ஆகம






முறைப்படி கட்டியெழுப்பினார். 44 பரப்பிலமைந்த இக்கோவில் காலக் கிரமத்தில் பெருவளர்ச்சி கண்டது.

டச்சுக்காரர் இலங்கையிலுள்ள கோவில்களை தரைமட்டாக அழித்தபோதும் தெய்வாதீனமாக இக்கோவில் அவர்களின் கண்களிலிருந்து தப்பியது. ஆனாலும் 1987இல் தமிழ் ஈழப்போரில் இந்த ஆலயம் இலங்கை இராணுவத்தினரின் செல் வீச்சில் அகப்பட்டு பெரும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளது (சேதமடைந்த கோவில் இடிபாடுகளின் புகைப்படம் தற்போது கோவிலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இடிபாட்டின் எச்சங்களும் கோவில் அருகாமையில் காணப்படுகின்றன. ஆனாலும் கோவிலின் மணிக்கூண்டுக் கோபுரமானது. பெரும் சேதத்துக்கு உட்படாது இன்றும் காட்சிதருகிறது.) கதிர்காமையர் வழிவந்த கடவுள் ஐயர் என்பார் அவரது மூத்த புதல்வரான துரைச்சாமி ஐயர் (ஆறுமுக ஐயர்) என்பாருக்கு சகல சொத்துரிமைகளையும் உறுதிமூலம் எழுதிவைத்தார். துரைச்சாமி ஐயர் கோவிலை ஏறத்தாழ 40




வருடங்கள் பரிபாலித்தார். அவர் சந்ததியின்றி இறந்து போனதும் அவரது சகோதரர் நடராசையர் அவர்களுக்கு கோவில் உரித்தானது. பின்னர் அவரது வழிவந்த சபாரத்தினக்குருக்கள் அவரது மகன் ஸ்ரீ குகந்தன சர்மா அவர்களுக்கு சொத்துரிமை உரித்தானது.

❏

இரத்தினேஸ்வர ஐயர்
↓
கதிர்காமைஐயர்
↓
கடவுள் ஐயர்
↓

துரைச்சாமிஐயர் (ஆறுமுகஐயர்) | செல்லையாஐயர் | நடராசஐயர் | பொன்னம்மா

நடராசஐயர்
↓
சபாரத்தினக்குருக்கள்
↓
ஸ்ரீ குகந்தனசர்மா

# 17

# புன்னைநகர் நூல் ஆசிரியர்கள்

- பிரம்மஸ்ரீ அப்பாச்சாமி ஐயர் (பக்கம் – 98)
- வித்துவசிரோமணி சி.கணேசையர் (பக்கம் – 47)
- காசிவாசி செந்திநாதையர் (பக்கம் – 90)
- பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் (பக்கம் – 94)
- பிரம்மஸ்ரீ சி.சுவாமிநாத ஐயர் (பக்கம் – 61)

- **வைத்தியகலாநிதி தி. ஞானசேகர ஐயர்**

தி. ஞானசேகரன் என்ற பெயரில் இவர் இதுவரை 21 நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய புதிய சுவடுகள் (1977)என்ற நாவல் புன்னாலைக்கட்டுவன் சூழலைக் களமாகக் கொண்டது. இலங்கை அரசின் தேசிய சாஹித்திய விருதினைப் பெற்றது.

இவர் எழுதிய குருதிமலை (1979) என்ற நாவல் இலங்கை தேசிய சாஹித்திய விருதினைப்பெற்றது.

குருதிமலை நாவல் 1992-1993 காலப்பகுதியில் தமிழக மதுரை அமெரிக்கன் கல்லூரியில் எம்.ஏ.வகுப்பிற்குப் பாட நூலாக விளங்கியது.

அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும் என்ற இவரது சிறுகதைத் தொகுதி கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இலங்கை

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பி.ஏ. (சிறப்பு) வகுப்பிற்குப் பாடநூலாக விளங்குகிறது.

இவர் எழுதிய 'எரிமலை' என்ற அரசியல் நாவல் தமிழக கரிகாற்சோழன் விருதினைப் பெற்றது. சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

'ஞானம்' என்ற மாதாந்த கலை இலக்கியச் சஞ்சிகையை 2000ஆம் ஆண்டிலிருந்து இவர் நடத்திவருகிறார். புன்னை நகர் வரலாற்றில் இவரே ஒரேயொரு சஞ்சிகையாசிரியராவார்.

இலங்கை அரசு இவருக்கு 2005இல் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவித்தது.

தி. ஞானசேகர ஐயர் நூல்கள்:

1) காலதரிசனம் - சிறுகதைத்தொகுப்பு (1973)
2) புதியசுவடுகள் - நாவல் (1978)
3) குருதிமலை - நாவல் (1980)
4) லயத்துச் சிறைகள் - நாவல் (1994)
5) கவ்வாத்து - நாவல் (1996)
6) அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும் - சிறுகதைத்தொகுப்பு (1998)
7) புரிதலும் பகிர்தலும் - நேர்காணல்கள் (1999)
8) அவுஸ்திரேலியப் பயணக்கதை - பயண இலக்கியம் (1999)
9) ஞானசேகரன் சிறுகதைகள் - சிறுகதைத் தொகுப்பு (2005)
10) வடஇந்தியப் பயண அனுபவங்கள் - பயண இலக்கியம் (2013)
11) எனது இலக்கியத் தடம் : பாகம் 1 - தன் வரலாறு (2013)
12) இலண்டன் பயண அனுபவங்கள் - பயண இலக்கியம் (2015)
13) ஐரோப்பிய பயண அனுபவங்கள் - பயண இலக்கியம் (2016)
14) எரிமலை - நாவல் (2018)
15) ஞானசேகரன் முன்னுரைகள் - 22 நூல்களுக்கு வழங்கிய முன்னுரைகளின் தொகுப்பு (2018)

16) சரித்திரம் பேசும் சாகித்திய ரத்தினா விருதாளர்கள் - கட்டுரைகள் *(2018)*
17) பகிர்தலும் புரிதலும் (தேர்ந்தெடுக்கப்பட்ட ஞானம் ஆசிரியத் தலையங்கங்கள் - *(2018)*
18) கனடா பயணம் ஓர் அனுபவம் - பயண இலக்கியம் *(2018)*
19) தி. ஞானசேகரன் வழங்கிய நேர்காணல்கள் *(2018)*
20) ஈழத்து நவீன இலக்கிய வளம் - ஆய்வுக் கட்டுரைகள் *(2019)*
21) புன்னை நகர் மான்மியம் *(2021)*

## ❍ திருமதி ஞானலட்சுமி ஞானசேகர ஐயர்

இவர் கீரிமலை ராமஐயர் காமாட்சி அம்மாள் தம்பதியின் மகளாவார். தந்தை ராமஐயர் திருவனந்தபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மகா மகோபாத்தியாய பட்டம் பெற்றவர். அத்தோடு பி.ஏ. (லண்டன்)பட்டமும் பெற்றவர். இராமநாதன் கல்லூரி சமஸ்கிருத ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.

ஞானலட்சுமி தனது ஆரம்பக் கல்வியை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் பெற்றவர். திருமணத்தின் பின்னர் 1976ஆம் ஆண்டில் புசல்லாவ செளலி பெருந்தோட்டப் பாடசாலை ஆசிரியரானார். அங்கிருந்து ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் (இந்து சமயம்) பயிற்சி பெற்றார். அதன்பின்னர் புசல்லாவை சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் ஆசிரியரானார். அங்கிருந்து கண்டி இந்து உயர்தர பாடசாலைக்கு மாற்றம் பெற்றார். ஆசியராக இருந்த காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொண்டு B.A. பட்டம் பெற்றார். அதன்பின்னர் பட்டப் பின்படிப்பை மேற்கொண்டு Dip.in Edu. பட்டம் பெற்று பதவி உயர்வு பெற்று மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் இந்து சமயபாட ஆசிரிய ஆலோசகராகவும் இந்து சமயபாட இணைப்பாளராகவும் கடமையாற்றினார். அக்காலகட்டத்தில் தேசிய

தொலைக்கல்வி நிறுவனத்தின் சமயபாட ஆசிரியர்களின் வழிகாட்டி நூல்களின் ஆசிரியராகவும் விரிவுரையாளராகவும் கடமைபுரிந்தவர். அத்தோடு உயர்கல்வி அமைச்சின் சமயபாடத்திட்டக் குழுவில் அங்கத்தவராக விளங்கியவர். இந்து கலாசார அமைச்சின் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பாடத்திட்டங்களைத் தயாரிக்கும் குழுவின் உறுப்பினராகப் பணியாற்றியவர். 2000ஆம் ஆண்டில் பணியிலிருந்து இளைப்பாறினார்.

இவர் எழுதிய நூல்கள்:

1) இந்து மதம் என்ன சொல்கிறது - பாகம் 1
2) இந்து மதம் என்ன சொல்கிறது - பாகம் 2
   (மங்கலப் பொருட்களின் மகத்துவம்)
3) இந்து மதம் என்ன சொல்கிறது - பாகம் 3
   (தத்துவசாரம்)
4) இந்து மதம் என்ன சொல்கிறது - பாகம் 4
   (இறைநோக்கிய பயணம்)
5) இந்து மதம் என்ன சொல்கிறது - பாகம் 5
   (ஒன்பதாம் திருமுறையின் மகத்துவம்)
6) இந்து மதம் என்ன சொல்கிறது - பாகம் 6
   (யாவர்க்குமாம் வாழ்வு நெறி)
7) இந்து மதம் என்ன சொல்கிறது - பாகம் 7
   (மனிதப்பிறவியும் வேண்டுவதே...)
8) இந்து மதம் என்ன சொல்கிறது - பாகம் 8
   (ஆன்மிகம்)
9) இந்து மதம் என்ன சொல்கிறது - பாகம் 9
   (சனாதன தர்மம்)
10) இந்து மதம் என்ன சொல்கிறது - பாகம் 10
   (இந்துநெறி மான்மியம்)

இலங்கை அரசு இவரது இலக்கிய சமயப் பணிகளுக்காக 2014இல் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவித்தது.

### ❍ ஞானசேகர ஐயர் பாலச்சந்திரன்

இவர், 21-05-81 பிறந்தவர். புசல்லாவை ஓல்ட்பீக்கொக் தமிழ்ப்பாடசாலை, கண்டி இந்து சிரேஷ்ட வித்தியாலயம், கண்டி புனித அந்தோனியர் கல்லூரி, கொழும்பு டி.எஸ். சேனநாயகா கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றவர். பின்னர் அவுஸ்திரேலிய "சாள்ஸ் ஸ்ருவேர்ட்" பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு "கணினி தகவல் தொழில் நுட்ப பொறியியலாளர்" பட்டம் பெற்றவர். தற்போது "டயலொக்" நிறுவனத்துடன் இணைந்த Axiata நிறுவனத்தின் கணினி தொழில் நுட்பப் பாதுகாப்பு பிரிவுத் தலைவராகத் தொழில் புரிகின்றார்.

இவர் எழுதிய நூல்கள்:

1) அங்கோர் உலகப் பெருங்கோயில் - பயண இலக்கியம் (சாஹித்திய விருது பெற்ற நூல்)
2) மணிவாசக அணியமுதம்
3) உருத்திராக்க நவநீதம்.

ஈழமும் தமிழும் தொடரில் வெளியான நூல்கள்:

1) யாழ்ப்பாண மன்னர் நிறுவிய தமிழ்ச் சங்கம்
2) சைமன் காசிச்செட்டியின் அகராதி முயற்சிகள்
3) கிரகசார எண்ணல் (கி.பி.1506)
4) தாலவிலாசம்
5) மெல்ஹொ பாதிரியார் மொழிபெயர்த்த புதிய ஏற்பாடு (கி. பி. 1759)
6) சித்திரக் கவித்திரட்டு
7) சமூகம் வழங்கிய புலமைத்துவ அடையாளங்கள் (கி. பி.1900 வரை)

நாவல்:

(1) பொய்மையும் வாய்மையிடத்து...

எல்லாமாக 11 நூல்களை எழுதியுள்ளார்.

## ❍ பிரம்மஸ்ரீ சோ.நடராஜ ஐயர்

சோமசுந்தரஐயர் மனோன்மணியம்மா தம்பதிகளின் மூத்த புதல்வராகப் பிறந்த சோ.நடராஜ ஐயர் புன்னாலைக்கட்டுவன் தமிழ்ப் பாடசாலை, உரும்பராய் இந்துக்கல்லூரி ஆகியவற்றில் தனது கல்வியைப் பெற்றவர். வருமானவரித் திணைக்களத்தில் நீண்டகாலம் பணிபுரிந்தவர்.

30 வருடங்களுக்கு மேலாக ஒலிபரப்புத் துறையிலும் 20 வருடங்களுக்கு மேலாக ஒளிபரப்புத் துறையிலும் பணியாற்றியவர். வானொலி அறிவிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக, நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, வானொலி மாமாவாக அரும்பணி ஆற்றிய இவர் ஆலய கும்பாபிஷேகம், தேர்த்திருவிழா என்பவற்றின் நேர்முக வர்ணனையாளராகவும் இருந்துள்ளார்.

இவர் எழுதிய நூல் : (1) திரைமறைவுக் கலைஞர்கள்.

## ❍ பிரம்மஸ்ரீ சோ. குகானந்த சர்மா

இந்து வித்தியாநிதி, சிவாகம பண்டிதர் பிரம்மஸ்ரீ சோ. குகானந்த சர்மா அவர்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஓய்வு நிலை பாடநூல் உற்பத்தி அதிகாரியாகப் பணியாற்றியவர்.

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தானம், கொழும்பு சிவகாமி அம்பிகா சமேத பொன்னம்பல வாணேஸ்வரர் தேவஸ்தானம், திருகோணமலை பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் ஆகியவற்றின் குருவாக விளங்கிய இவர், பத்துக்கும் மேற்பட்ட ஆன்மீக நூல்களை எழுதியுள்ளார்.

தனது ஆரம்பக் கல்வியை புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்ப் பாடசாலையிலும் மெதடிஸ்ற் ஆங்கில பாடசாலையிலும் பெற்ற இவர், இடைநிலைக்கல்வியை உரும்பராய் இந்துக் கல்லூரியிலும் கொழும்பு இந்துக்கல்லூரியிலும் பெற்றபின் உயர்கல்வியை திறந்த பல்கலைக்கழகத்தில் பயின்று பத்திரிகைத் துறையில் டிப்ளோமா பட்டம் பெற்றார்.

இவர் வீரகேசரி பத்திரிகையில் எழுதிய கட்டுரைகள் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஆற்றிய சொற்பொழிவுகள் பல நூலுருப்பெற்றுள்ளன.

இவரது 'குஞ்சிதபாதம்' என்ற இந்து மத தத்துவங்களை விளக்கும் நூல் ஆன்மீக உலகில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

இவர் எழுதிய பிரதோஷம் மற்றும் சிவராத்திரி விரத விளக்கங்கள் ஆகியன கேள்வி பதில் வடிவத்தில் அமைந்த விளக்கம் தரும் நூல்களாக அமைந்தன.

### ❍ பிரம்மஸ்ரீ தியாகராஜா ஐயர் கெங்காதரக்குருக்கள் ஜே.பி

தியாகராஜா ஐயர் பாலாம்பிகை அம்மா தம்பதியினரின் மகனான இவர் 05/04/1950 அன்று பிறந்தவர். புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் பாடசாலை, ஆங்கிலப் பாடசாலை, உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்ற இவர் ஹோமியோபதி வைத்திய கலாநிதி ஆவார். ஈவினை கற்பகவிநாயகர் தேவஸ்தான பிரதம குருவும் பிரபல சோதிட விற்பன்னருமாகிய இவருக்கு அரசினால் சாமஸ்ரீ தேசமானிய விருது வழங்கப்பெற்றது.

இவர் கீரிமலை ராமஐயரின் புதல்வி விஜயலட்சுமியைத் திருமணம் செய்தவர்.

**கற்பகம்** ஈவினை மத்தி அருள்மிகு ஸ்ரீகற்பக விநாயகர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேக சிறப்புமலரின் கௌரவ ஆசிரியர் கெ. சர்வேஸ்வர சர்மா, கெ. கமலேஸ்வர சர்மா, கெ. பாலேஸ்வர சர்மா ஆகியோர் மேற்படி சிறப்பு மலரின் தொகுப்பாசிரியர்கள் ஆவர்.

### ❍ பிரம்மஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்

குமாரசாமி ஐயர் நீலாம்பிகை அம்மா தம்பதிகளின் புதல்வரான இவர் 29/11/1953 அன்று பிறந்தவர். புன்னாலைக்கட்டுவன் தமிழ் பாடசாலை, உரும்பராய் இந்துக்கல்லூரி, சென். ஜோன்ஸ் அக்கடமி ஆகியவற்றில் கல்விபயின்ற இவர் 1976ஆம் ஆண்டில் சித்தாந்த பண்டிதர் பரிட்சையில் சித்தி பெற்றவர். ஜப்பான்

பல்கலைக்கழக கலாநிதி பட்டம் பெற்றவர். அரசினால் இவருக்கு சாமஶ்ரீ தேசமானிய விருது வழங்கப்பட்டது. இவர் ஈவினை மதுரையம்பதி மீனாட்சி அம்மன் ஆலய பிரதம குருவும், அறங்காவலரும் ஆவார்.

இவர் பின்வரும் நூல்களை எழுதியுள்ளார்.

1) விநாயகர் வழிபாடு

2.) ஆனைமுகத்தவன் ஆதிமுதலானவன்

### ❍ பா. சுந்தரராஜ சர்மா

இவர் பாலகிருஷ்ண சர்மா, புவனேஸ்வரி தம்பதியின் ஏக புத்திரன் ஆவார். மகாஜனாக்கல்லூரியில் கல்வி பயின்றவர். இவர் தந்தையாருடன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயப் பணிகளில் ஈடுபட்டு கோவிலின் பரம்பரைக் குருவானார். கோவிலின் ஆதீனகர்த்தாவாகவும் விளங்குகிறார். கைலாசப்பிள்ளையார் கோயில் பிரதமகுரு குமாரசாமிக்குருக்கள் - சாவித்திரி அம்மா தம்பதியின் மூன்றாவது புதல்வி ஜெயலெச்சுமி (கௌரி)யைத் திருமணம் செய்தார். இவருக்கு மைத்திரேய சர்மா, வாத்ஷேய சர்மா ஆகியோர் பிள்ளைகளாவர். சுந்தரராஜ சர்மா இந்து குருமார் ஒன்றிய நிர்வாக உறுப்பினராகவும் விளங்கி பல சமயப்பணிகளை ஆற்றி வருகிறார்.

இவர் வெளியிட்டநூல்: **வித்துவ கணேசமணி** (புன்னாலைக் கட்டுவன் பிரம்மஶ்ரீ. சி.கணேசையர் அவர்களின் வருத்தலை விளான் நினைவாலய பாண லிங்கஸ்தாபன சிறப்புமலர்)

### ❍ இளையதம்பி தர்மலிங்கம் (13.08.1913 – 28.04.1981)

மயிலிட்டி நரசிங்க தேவன் வழி வயாவிளான் சின்னத்தம்பி இளையதம்பி அவர்களுக்கும் புன்னாலைக்கட்டுவன் உலகு தோள முதலிவழி வள்ளிப்பிள்ளைக்கும் திரு. தர்மலிங்கம் சிரேஷ்ட புத்திரனாகப் பிறந்தார். இவர் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்

கல்லூரி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றவர். மற்றிக்குலேசன் சித்திபெற்றவர்.

மயிலணி சைவவித்தியாசாலையில் ஆசிரியராகவும் (1934-1938) பின்னர் சுகாதாரப்பரிசோதகராகவும் (1938 -1968) சுகாதாரப் போதனாசிரியராகவும் பணியாற்றியவர். 1943இல் மலேரியா தடுப்பு நிகழ்வுக்காகத் தங்கப்பதக்கம் பெற்றவர்.

இவர் எழுதிய நூல்களில் அனேகமானவை மாணவர்களுக்கான பாடநூல்களாகும். பின்வரும் நூல்களை அவர் எழுதியுள்ளார்.

1) நாட்டு சீவன சாத்திரம் (G. C. E)
2) சரித்திர கதாவாசகம் (2ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை)
3) சுகாதார வாசகம் ( 2ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை)
4) சுகாதார போதினி (2ஆம் வகுப்பு முதல் G.C.E. O/L வரை),
5) சரித்திரம் (6ஆம் வகுப்பு )
6) நாமும் நமது சூழலும் (2ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை)
7) இயற்கை பொருட்பாடமும் தோட்ட வேலையும் (5ஆம் வகுப்பு முதல் 6ஆம் வகுப்பு வரை)
8) விவசாய போதினி (6ஆம் வகுப்பு)
9) சரித்திரச் சுருக்கம் (6,7,8 ஆம் வகுப்புகளுக்கு உரியவை)
10) இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும் (பகுதி-1 5ஆம் வகுப்பு, பகுதி 2 - 6ஆம் வகுப்பு)
11) மனையியற்கலை (6 முதல் O/ L வரை)
12) சுகாதாரமும் உடற்கல்வியும் (6 முதல் O/L வரை)
13) மனையியற்கலை வினாவிடை (6 முதல் O/L வரை)
14) சுகாதார, வினாவிட (O/L)
15) சரித்திர வினாவிடை (6,7,8 ஆம் வகுப்புகளுக்குரியது)

இவர் எல்லாமாக 54 புத்தகங்களை வெளியீடு செய்தார் என அறிய முடிகிறது.

## ❍ எஸ்.ஆர்.முத்துக்குமாரு

**Tamil Studies in Ceylon**

**A review essay of 1968 by S. Vithiananthan**

**(Reader, Department of Tamil, University of Ceylon, Peradeniya)**

**Dictionaries of Technical Terms**

When the Madras Province Tamil sangam set out to compile technical terms in Tamil, it was Swami Vipulananda of Batticaloa, Ceylon, who was asked to be the chief editor of this work. Under his direction was published the work Kalaiccorkal which contained the Tamil equivalents of English terms in mathematics, physics, chemistry, botany, zoology, physiology and hygiene, geography, history and chemistry[208].

There are two books, one containing mathematical terms in English and Tamil[209] and another anatomy terms in English and Tamil[210], compiled by S.R. Muttukumaru of Punnalaikkadduvan, Jaffna. These are in manuscript form at the Jaffna College library. They do not appear to have been printed but they are of very rare value.

## ❍ ஆ. தா. ஆறுமுகம் (அமரர்)

1925ஆம் ஆண்டு புன்னாலைக்கட்டுவனில் பிறந்த இவர், தெல்லிப்பளை மேற்கில் வளர்ந்து பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயத்தில் கல்வியைப் பெற்றவர். இளவாலையில் திருமணம் செய்தவர்.

பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகி, பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான், கலைமாணி (B.A.) பட்டங்கள் பெற்றவர். அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றி 1985இல் மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலிருந்து ஓய்வு பெற்றவர்.

போர்ச் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து நியூசீலாந்தில் வாழ்ந்து இயற்கை எய்தியவர்.

இவர் எழுதிய நூல்கள்:

1) வீட்டில் விஞ்ஞான விளையாட்டு
2) நியூசீலாந்தில் தமிழன் பதித்த சுவடுகள்
3) நொடிகள்
4) மனதில் மலர்ந்தவை -1
5) நம்மக்களின் மனக்கணக்குகள்
6) ஒரே மையவித்தைச் சதுரங்கள் ஆக்குதல்

**❍ திரு.பொன் பூலோகசிங்கம்**

இலங்கை உயர்நீமன்ற சட்டத்தரணி, சத்திய ஆணையாளர் பிரசித்த நொத்தாரிசு ஆகிய தகைமைகள் கொண்ட இவர் இரட்டைப் பட்டப்படிப்புத் தகுதிபெற்றவர். இவர் கீழ்க்காணும் நூல்களை எழுதியுள்ளார்.

1) தேன்பொழுது
2) பலதுறை சார்ந்த கலைஞர்களின் செவ்வித் தொகுப்பு

**❍ டாக்டர் இளையதம்பி நன்னித்தம்பி (07.04.1907 – 19.10.2008)**

மயிலிட்டி நரசிங்க தேவன் வழி வயாவிளான் சின்னத்தம்பி இளையதம்பி அவர்களுக்கும் புன்னாலைக்கட்டுவன் உலகு தோள முதலிவழி வள்ளிப்பிள்ளைக்கும் இவர் மூன்றாவது புத்திரனாகப் பிறந்தார். இவர் குரும்பசிட்டி பொன் பரமானந்தா வித்தியாசாலை, புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றவர். மற்றிக்குலேசன் சித்திபெற்றவர். பின்னர் கொழும்பு மருத்துவக்கல்லூரியில் பயின்று வைத்தியராக வெளியேறினார். 01-01-1945 கண்டி வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சியை முடித்து வைத்தியராக நியமனம் பெற்றார். வெளிமாவட்டங்கள் பலவற்றிலும் தொழில் புரிந்து பின்னர் 1965இல் புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகத்திற்கு மாற்றலாகி வந்தார். 1972இல் இளைப்பாறியபின்னர் தனியார் வைத்தியசாலை அமைத்துப் பணி புரிந்தார்

இவர் புன்னாலைக்கட்டுவன் கணேச சனசமூக முன்னாள் தலைவரும், ஆயாக்கடவை சித்தி விநாயர் தேவஸ்தான பரிபாலன சபையின் முன்னாள் உபதலைவரும புன்னாலைக்கட்டுவன் நலன் புரிச் சங்கத்தலைவரும், புன்னாலைக்கட்டுவன் அரசினர் மத்திய வைத்தியசாலை அபிவிருத்தி சபையின் போஷகரும் அகில இலங்கை சமதான நீதவானும் சமயப் பெரியாருமாவார்.

இவர் வெளியிட்ட நூல்கள் :

1) புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச் சித்தி விநாயகர் சரணாகதி மலர் *(1991)*
2) விநாயகர் தோத்திரத்திரட்டு

### ❍ திரு. ம. துஷ்யந்தன்

*28-10-1975* அன்று பிறந்த இவர், தனது ஆரம்பக்கல்வியை தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியிலும், இடை நிலைக்கல்வியை யாழ். யூனியன்கல்லூரி, புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றிலும் பெற்றவர். *1996*இல் யாழ். பல்கலைக்கழகம் சென்று சமூகவியல் இளமானிப்பட்டம் பெற்றவர். *2014*இல் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாக முதுமாணிப் பட்டம் பெற்றவர்.

*2004*இல் வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தில் வவுனியா மாவட்ட சமூக அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர். *2008*இல் இருந்து மனித நேயப்பணியாளராக புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தில் கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் பணியாற்றியவர். *2009*இல் இருந்து இலங்கை திட்டமிடல் சேவையில் இணைந்து உதவிப் பணிப்பாளராக வடக்கு மாகாண சபை திட்டமிடல் பிரிவில் பணியாற்றுகிறார்.

இவர் தொகுத்தளித்த நூல்கள் -

1) கணேச சனசமூக நிலையத் திறப்பு விழா மலர் *(2002)*

2) ஆயாக்கடவையான் பதிகங்கள் (2007)

3) சீர்காழி எஸ் கோவிந்தராஜன் பாடிய ஆயாக்கடவை ஐங்கரரே பாடல்களின் தொகுப்பு இறுவட்டு (இதற்கு நிதியுதவி வழங்கியவர் இ. ஸ்ரீபாஸ்கரன் (U. K.)

## ❍ நாகநாதர் கிருஷ்ணதாசன்

நாகநாதர் அன்னம்மா தம்பதியின் மகனாக 16-07-1951இல் பிறந்த கிருஷ்ணதாசன் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்ப் பாடசாலை, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைமாணி பட்டம் பெற்றவர். அச்செழு மெதடிஸ்ற் மிஷன் பாடசாலை, வேரவில் இந்துக் கல்லூரி, கிளிநொச்சி இந்துக்கல்லூரி, ஆகிய பாடசாலைகளில் ஆசிரியப் பணிபுரிந்த இவர் கொழும்பு இஸுப்பத்தானை கல்லூரியில் உப அதிபர் பதவி வகித்து ஓய்வு பெற்றவர் இவர் கோயில் நிர்வாக சபை செயலாளர், சனசமூக நிலைய செயலாளர், கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர், இந்து இளைஞர் மன்றச் செயலாளர், பறக்கும் கழுகுகள் விளையாட்டுக்கழக பொருளாளர் ஆகிய பதவிகளை வகித்தவர்.

இவர் எழுதிய நூல்கள்:

1) விநாயகர் காரியசித்திமாலை

2) வரந்தரும் சித்திவிநாகர்

❏

**பின்னிணைப்பு:**

# புன்னை நகரின் அழிக்கப்பட்ட வரலாற்றுத் தடயங்கள்

## முந்நூறு ஆண்டு காலப் பழமைவாய்ந்த தீர்த்தக்கேணி

**த**ற்போது வித்துவ சிரோமணி சி. கணேசையரின் சிலை அமைந்திருக்கும் இடத்திற்கு மேற்குப்பக்கத்தில் வீதியோரமாக ஆயாக்கடவை ஐங்கரன் முதன் முதலில் தீர்த்தமாடிய தீர்த்தக்கேணி அமைந்திருந்தது. தூர்ந்துபோன நிலையில் காணப்பட்ட அந்தக்கேணியிலே பனை வடலிகளும் முட்புதர்களும் நிறைந்து காணப்பட்டன. கேணியின் வடபுறத்துக் கரையிலே ஒரு நெல்லிமரம் ஓங்கிவளர்ந்திருந்தது. அந்த நெல்லி மரத்திலே நாங்கள் சிறுவயதிலே கல்லெறிந்து காய்களை வீழ்த்தி உண்போம். கேணியின் உள்ளே வளர்ந்திருந்த பனை வடலிகளும் செடி கொடிகளும் அந்தக்கேணியின் முந்நூறு ஆண்டுக்கு மேற்பட்டகாலத் தொன்மையையும் ஆயாக்கடவையான் அந்தக் கேணியில் தீர்த்தமாடிய முன்னைச் சிறப்பையும் பறைசாற்றிபடி இருந்தன. தூர்ந்துபோன அக்கேணி 1969இல் சுவடு தெரியாமல அழிக்கப்பட்டதாக அறிய முடிகிறது

இலங்கையை ஆண்ட டச்சுக்காரர்கள் (1658 -1798) தமது கிறிஸ்தவ மதத்தைப் பரப்புபவர்களாகவும் சைவசமயக் கோயில்களை இடித்து அழிப்பவர்களாகவும் சைவ வழிபாடு செய்பவர்களை கடுமையாகத் தண்டிப்பவர்களாகவும் இருந்தனர். இக்காலப்பகுதியிலேயே புன்னாலைக்கட்டுவனில் முதன் முதலில் தோன்றியதாகக் கருதப்படும் ஐயனார் ஆலயம் டச்சுக்காரரால் தகர்த்து அழிக்கப்பட்டது. டச்சுக்காரரின் மத அழிப்பு நடவடிக்கைகள்

காரணமாக ஆயாக்கடவை ஐங்கரன் கோயில் வழிபாடுகளும் சிலகாலம் தடைப்பட்டிருக்க வேண்டும். அக்காலகட்டத்திலேதான் இந்தக் கேணியும் பாவனையின்றி கைவிடப்பட்டிருக்க வேண்டும் என்பதை அனுமானிக்க முடிகிறது.

## நூறு ஆண்டுகாலம் சமூக இயங்கு தளமாக விளங்கிய கோயிலார் மடம்

ஆயாக்கடவையில் முதன் முதலில் கட்டப்பட்ட மடம் இது. ஏறத்தாழ நூறு வருடகாலம் இந்த மடம் புன்னாலைக்கட்டுவன் சமூகத்தின் இயங்கு தளமாக இருந்துவந்திருக்கிறது. ஆரம்பத்தில் இந்த மடம் திருவிழாக்காலத்தில் அன்னதான மடமாகத் திகழ்ந்தது. அதேநேரம் விவசாயிகள் இளைப்பாறுவதற்கும் வழிப்போக்கர்கள் தங்கிச் செல்வதற்கும் பயன்பட்டது. அத்தோடு சமூக ஒன்று கூடல்களுக்கும் பயன்பட்டுவந்தது. 1946ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இந்த மடத்திலேதான் முதன் முதலில் வாசிகசாலை ஆரம்பிக்கப்பட்டது. கோயிலார் மடத்தின் கூரையைத்தாங்கி நிற்கும் கைவளைகளில் வெள்ளை எழுத்துக்களில் பளிச்சென்று தெரியும்படி அறிவுசார் வசனங்கள் எழுதப்பட்டிருந்தன. 'கல்வியே கருந்தனம்', 'வாசிப்பு ஒருமனிதனை முழு மனிதனாக்கும்', ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" போன்ற வசனங்கள் எழுதப்பட்டிருந்தன. பிற்பட்ட காலத்தில் (1945-1950)இங்கு இரவுப்பாடசாலைகள் சி. தங்கசாமி ஐயர், து. குமாரசாமி ஐயர் ஆகியோரால் நடத்தப்பட்டன. ஏறத்தாழ தொடர்ச்சியாக 20 மாணவர்கள் வரை அங்கு கல்வி பயின்று வந்தனர். நானும் அந்த மடத்தில் இயங்கிய இரவுப் பாடசாலையில் கல்வி பயின்றிருக்கிறேன்.

## ஆஸ்பத்திரியாகவும், வாசிகசாலையாகவும் இயங்கிய தாமர்மடம்

கோயிலார் மடத்தின் கிழக்குப்புறமாக தாமோதரம்பிள்ளை என்பவரால் கட்டப்பட்ட மடம் இது. ஆயாக்கடவை திருவிழாக்

காலங்களிலும் சந்நிதியான் திருவிழாக்காலங்களிலும் தண்ணீர்ப் பந்தல் அமைத்து தாமர் பக்தர்களின் தாகசாந்தி செய்து வந்தார். இந்த மடத்துக்கு முன்னால் ஒரு சுமைதாங்கி இருந்தது. தலைச்சுமையோடு வருபவர்கள் தங்கள் சுமைகளை இறக்கிவைத்து இளைப்பாறிப் போகும் இடமாகவும் இருந்தது. அத்தோடு விவசாயிகள் பகற்பொழுதில் இளைப்பாறும் இடமாகவும் விளங்கியது. எங்கள் ஊரில் இங்குதான் முதன்முதலில் ஆஸ்பத்திரி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் வைத்தியசாலைக்கெனத் தனிக்கட்டிடம் இருக்கவில்லை. கிழமைக்கு மூன்று நாட்கள் தூர இடத்திலிருந்த வைத்தியர் ஒருவர் வந்து மருந்து கொடுத்துக் கொண்டிருந்தார். பின்னர் அகிலேச உடையார் என்பவரின் கட்டிடத்துக்கு மாற்றப்பட்டபின் தினசரி இங்கு வைத்திய சேவை இடம்பெறத் தொடங்கியது. பின்னர் தாமர் மடத்தில் தற்போதுள்ள சனசமூக நிலையம் 10-10-1946இல் மாற்றப்பட்டது. அடுத்த வருடத்தில் 1947இல் வாசிகசாலை **A** தரத்துக்கு உயர்த்தப்பட்டு அரசாங்கத்தின் அன்பளிப்பாக வானொலிப் பெட்டி ஒன்று வழங்கப்பட்டது. அக்காலத்தில் வானொலிப் பெட்டியைக் காண்பது அரிது. இதனால் எங்களூரின் புகழ் அயற்கிராமங்களுக்கும் பரவி அங்குள்ளவர்களும் வானொலி கேட்க வருவது வழக்கமாகியிருந்தது.

(மேற்குறிப்பிட்ட இரண்டு மடங்களும் புன்னாலைக்கட்டுவன் உயர்குடி வேளாளப் பெருமக்களின் பரோபகார சிந்தையின் அடையாளமாகத் திகழ்ந்தவை. இந்த மடங்கள் சமூக எழுச்சியின் வரலாற்றோடு பின்னிப்பிணைந்த தளங்களாக விளங்கியவை.)

### கதிர்காமையர் பாடசாலை

கோயிலார் மடத்தின் அருகாமையில் மேற்குப்புறமாக கதிர்காமையர் பாடசாலை அமைந்திருந்ததற்கான ஆதாரமாக ஏறத்தாழ நான்கு அடிச் சுற்றளவும் ஐந்து அடி உயரமும் கொண்ட இரு தூண்கள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டன. நூற்றாண்டுப் பழமை வாய்ந்த அந்தத் தூண்கள் உருளை

வடிவத்தில் பழங்காலக் கட்டிட மரபில் தோற்றமளித்தன. இவற்றையெலாம் புன்னை நகரின் அறுபது வயதைத் தாண்டிய இன்றைய மூத்த புன்னைநகர் வாசிகள் அவதானித்திருப்பர். இவற்றை நாமும் பார்த்திருக்கிறோம். சிறுவயதில் இங்கே விளையாடியும் உள்ளோம். இவையாவும் கோவில் சுற்றாடல் நிர்மாணத்தின்போது அழிக்கப்பட்டுவிட்டன.

## செல்லப்பா என்பார் அமைத்த தெருக்கிணறும் தண்ணீர்த் தொட்டியும்

ஆயாக்கடவை கோயிலுக்கு நேராக சற்று வடக்குப்புறம் தள்ளி தெருவோரமாக ஒரு பொதுக்கிணறு இருந்தது. இக்கிணறு 1910ஆம் ஆண்டளவில் திரு. செல்லப்பா என்பவரால் அமைக்கப்பட்டது. கோயிலுக்கு வருபவர்கள் இக்கிணற்றில் தண்ணீர் இறைத்து கைகால்முகம் கழுவியபின் கோயிலுக்குச் செல்வார்கள். கிணற்றிலிருந்து சிறிது தூரத்தில் ஆறடி நீளமும் நான்கு அடி அகலமும் கொண்ட கல்லில் பொழியப்பட்ட நீர்த்தொட்டி ஒன்றும் இருந்தது. சமூக அக்கறை கொண்டோர் அந்தத் தொட்டியைத் தினமும் கழுவிச் சுத்தம் செய்து கிணற்றிலிருந்து நீரெடுத்து நிரப்புவார்கள். அக்காலத்தில் இப்போதுள்ளது போல பஸ்களோ கார்களோ அதிகம் இருக்கவில்லை. மாட்டுவண்டில்பாவனையே அதிகம். மாட்டுவண்டிலில் வருபவர்கள் கோயிலின் முன்னாள் உள்ள தாமர்மடத்தில் இளைப்பாறி மாடுகளை இந்தத் தொட்டியில் நீர் அருந்தச் செய்து தமது பயணத்தைத் தொடர்வர். இங்கு ஒரு சுமைதாங்கியும் இருந்தது. தலைச்சுமையாக வருபவர்கள் அதில் தமது சுமையை இறக்கிவைத்து சிரமபரிகாரம் செய்தபின் தமது பயணத்தைத் தொடர்வர். இந்தக்கிணறு புன்னாலைக்கட்டுவன் மக்களின் பரோபகாரச்சிந்தையின் அடையாளமாகத் திகழ்ந்தது.

❑

# நினைவுத் தடங்கள்

## எங்களூர் நாடகக் கலைஞர்கள்

**எ**ங்களூர் தமிழ்ப் பாடசாலையில் ஏ.டபிள்யூ. முருகேசு என்பார் அதிபராக இருந்த (1933-1942) காலம் முக்கியமானது. அவர் இப்பாடசாலையில் இரவுப் பாடசாலையை ஆரம்பித்து முதியோர் கல்வியை நடத்திவந்தார் என அறிய முடிகிறது. இவரது காலத்தில் செல்வநாயகம் என்பவர் உதவி ஆசிரியராக இருந்தார். அவர் ஒரு நாடகப்பிரியர். எங்கள் ஊரில் இருந்த கலையுள்ளம் கொண்ட இளைஞர்களை இரவு நேரங்களில் பாடசாலைக்கு வரவழைத்து நாடகங்கள் பழக்கி பாடசாலை மண்டபத்திலேயே மேடையேற்றினார். காலத்துக்குக் காலம் வெவ்வேறான புராண இதிகாச நாடகங்கள் பாடசாலை மண்டபத்தில் மேடையேறின. இந்த நாடகங்களில் நடித்த நடிகர்களுக்கு அவர்கள் நடித்த நாடகப் பாத்திரங்களின் பெயர்களே காரணப் பெயர்களாக அமைந்துவிட்டன. சீனித்தம்பி 'சிவபெருமான்' ஆனார். தம்பிராசா 'ஐயனார்' ஆனார். இராமங்கலட்டி சீனியர் "கோவலன்' ஆனார். மாடத்தாரின் வேலுப்பிள்ளை 'முன் அரிச்சந்திரன்', கந்தம்மான் வேலுப்பிள்ளை 'பின் அரிச்சந்திரன்', மாடத்தார் நன்னித்தம்பி 'சந்திரமதி', தம்பர் 'பபூன்'. இவர்கள் யாபேருமே பெரும் நாடக நடிகர்களாக எங்களூர் வீதிகளிலே உலாவி வந்தவர்கள். இன்னென்ன நாடகங்கள் எங்களூரில் நடைபெற்றன என்பதற்குச் சான்றாக விளங்கியவர்கள். பிற்பட்ட காலத்தில் இந்த நாடகக் கலைஞர்கள் யாபேருடனும் உறவாடும் பாக்கியம் பெற்றவன் நான்.

## சவுக்கு மரம்

தற்போது வித்துவ சிரோமணி கணேசையர் சிலை இருந்த இடத்தில் முன்னர் ஓங்கி உயர்ந்து கிளைபரப்பிய ஒரு சவுக்கு மரம் இருந்தது. அந்தச் சவுக்கு மரத்தில் கோயிலுக்குச் சொந்தமான இரண்டு மயில்கள் அமர்ந்திருப்பதை அடிக்கடி காணலாம். இந்த

மரம் அங்கு நின்றதன் காரணமாக அந்தக்காலத்தில் ஆயாக்கடவை ஐங்கரன் கோயில் சவுக்கு மரத்தடிப் பிள்ளையார் கோயில் என்ற காரணப் பெயருடன் குறிப்பிடப்பட்டுவந்தது.

அதே போன்று இன்னுமொரு சவுக்கு மரமும் தெருவின் கிழக்குப் புறத்தில் கோவில் வாசலுக்கு நேராக இருந்தது.

**ஆயாக்கடவை ஐங்கரன் குளிர்த்தித் திருவிழா 1946–1949**

எங்களூரில் சங்கக் கடையொன்று சிறப்பாக இயங்கிவந்தது. அதன் மனேஜராக திரு. சின்னத்துரை அவர்களும், பொருள் விநியோகிப்பவராக சீனித்தம்பி என்பவரும் பணியாற்றினர். ஊரில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் அதில் அங்கத்தவராக இருந்தனர். ஒவ்வொரு வருடமும் இதில் கிடைக்கும் இலாபத்தில் சங்கக் கடையிலிருந்து உணவுப் பொருட்களான அரிசி, பருப்பு, சமையற்பொருட்கள் வழங்கப்பெற்று அவற்றைக் கொண்டு பெரிய அளவில் ஆயாக்கடவையானின் குளிர்த்தித் திருவிழா நடைபெறும். இக்குளிர்த்தித் திருவிழாவில் பெரிய பாய் விரித்து அதில் சோறு மலைபோல் குவித்து படைத்து பெருவிழாவாகக் கொண்டாடப்படும். எவ்வித வேறுபாடுமின்றி சகலரும் இக்குளிர்த்தித் திருவிழாவில் பங்குபற்றி மகிழ்வர்.

**புராணபடனம்**

ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் புராண படனத்தை ஆரம்பித்து வைத்தவர் பிரம்மஸ்ரீ சோமையர் குமாரசாமி ஐயர் ஆவார். கந்தஷ்டி காலங்களில் திருச்செந்தூர் புராணமும் அடுத்துப் பிள்ளையார் கதையும் திருவம்பாவை காலத்தில் திருவாதவூர் அடிகள் புராணமும் படிப்பது வழக்கம். திரு தி. கதிரிப்பிள்ளை, திரு. அப்பாப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை, திரு. அப்பாப்பிள்ளை சிவசம்பு, நா. அப்பாத்துரை, ஆசிரியர் அருளம்பலம், வே. இராசையா, மலாயன் பென்ஷனியர் திரு.இ. செல்லப்பா ஆகியோர் ஆரம்பகாலத்தில் புராணப்படிப்பில் ஈடுபட்டவர்கள்.

பிரம்மஸ்ரீ து. குமாரசாமி ஐயர் தொடர்ந்து 60 வருடகாலம் ஆயாக்கடவை சித்திவிநாகர் ஆலயத்தில் கந்தபுராணப்படிப்பில் ஈடுபட்டமைக்காகப் பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புராணபடனம் எவ்வித தடங்கலுமின்றி தொடர்ந்து நடைபெறுவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்துவைத்தவர் நா. அகிலேசர். இவரது மகன் சிவசம்பு தனது தந்தையாரின் ஆஸ்தியில் ஒரு பகுதியை விற்று அப்பணத்தை நீதிமன்றச் சேமிப்பில் இட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து காலத்துக்குக் காலம் கந்த புராணப்படிப்புக்கு உதவும் வண்ணம் ஏற்பாடு செய்துள்ளார்.

**புன்னாலைக்கட்டுவனில் அமைந்த முதலாவது தபாற்கந்தோர்**

ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்தின் வடக்குப்புறமாக தெருவின் மேற்கே கே. சி. பி. ஐயரின் இல்லம் அமைந்திருந்தது. அங்குதான் புன்னாலைக்கட்டுவனில் முதன்முதலில் தபாற் கந்தோர் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது தபால் அதிபராக கே.சி.பி. ஐயரின் சகோதரரான சோமசுந்தர ஐயர் பணியாற்றினார்.

**சிவன் கோயில்**

ஆயாக்கடவை சித்தி விநாயகர் கோவிலின் வடக்கே கே.சி.பி. ஐயர் வாழ்ந்த இல்லத்தின் பின்புறத்தில் ஒரு சிவன் கோயில் அமைந்திருந்தது. கே.சி.பி. ஐயர் கிழக்கிலங்கையைச் சேர்ந்த தம்பலகாமம் என்ற ஊரில் திருமணம் செய்தவர். அங்கு கோயில்கொண்டிருந்த சிவலிங்கம் மற்றும் அம்பாள் விக்கிரகங்கள் கே.சி.பி.ஐயரால் கொண்டு வரப்பட்டு இக்கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்டன. தற்போது அந்தச் சிவன் கோயில் அழிக்கப்பட்டுவிட்டது.

**விஷகடி வைத்தியர் – மலையாள மாந்திரீகர் கிருஷ்ணபிள்ளை**

இவர் புகழ் பெற்ற விஷகடி வைத்தியராகத் திகழ்ந்தவர். புன்னாலைக்கட்டுவன் தெய்வானைப்பிள்ளையின் மகள் நல்லம்மா என்பவரைத் திருமணம் செய்தவர். இவர்களது இல்லம் ஆயாக்கடவை ஐங்கரன் கோவிலின் வடமேற்கு மூலையில் அரைமைல் தூரத்தில் இருந்தது. யாழ் மாவட்டத்தில் இருந்தும் வெளிமாவட்டங்களிலிருந்தும் விஷகடி வைத்தியத்திற்கு மக்கள் இவரைத்தேடி வருவார்கள். குறிப்பாக பாம்புகடி விஷத்தை மந்திர உச்சாடனத்தில் இறக்கக் கூடிய வல்லமையை இவர் பெற்றிருந்தார். பலர் இவரது வீட்டில் தங்கியிருந்து வைத்தியம் செய்வார்கள். நான் சிறுவனாக இருந்தபோது இவரது வீட்டிற்குச் சென்று இவரது வைத்திய முறைகளைப் பார்த்திருக்கிறேன்.

❑

### திரிபுபடுத்தப்பட்ட

### புன்னைநகர் தொடர்பான வரலாறுகள்

# புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய தோற்ற வரலாறு

மேற்குறிப்பிட்ட தலைப்பிலான கட்டுரை ஒன்று 30-04-1999 அன்று வெளியிடப்பட்ட ஆயாக்கடவை சித்திவிநாயகர் இராஜகோபுர புனருத்தாரண மகாகும்பாபிஷேக மலரில் இடம்பெற்றுள்ளது. அக்கட்டுரையில் பின்வரும் தகவல் காணப்படுகிறது:

**"இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் பிறைசூடி என்ற வர்த்தகர் வன்னியிலிருந்து மூன்று சிலைகளை வடக்கே கொண்டுவந்தார். அதில் ஒன்றை நீர்வேலி வாய்க்காற்தரவையிலும், ஒன்றை ஆயாக்கடவையிலும் வைத்தார். மற்றச்சிலை குப்பிளானில் உள்ள கற்கரைப் பிள்ளையார் ஆலயத்தில் உள்ளது.**

**ஆயாக்கடவையில் விடப்பட்ட சிலையை பொதுமக்கள் கண்டெடுத்து விதானையார் கந்தர் என்பவரிடம் கொடுத்தனர். அவர் அதனை கொட்டில் அமைத்து பூஜித்துவந்தார். பிற்பட்ட காலத்தில் குப்பிளானில் வசித்துவந்த சங்கரஐயர் என்பவரை வரவழைத்து ஆகமவிதிப்படி பூஜை செய்ய அர்ச்சகராக நியமித்தனர்"**

மேற்குறிப்பிட்ட வரலாறு ஆண்டாண்டு காலமாக வழங்கிவந்த வரலாற்றிலிருந்து மாறுபட்டதினாலும் எழுத்து மூலமான சான்றாதாரங்கள் எதுவும் அக்கட்டுரையில் காணப்படாத காரணத்தினாலும், இந்தப் புதிய வரலாற்றை ஆய்வுசெய்ய வேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டது.

நீர்வேலி வாய்க்காற்றரவை கோயில் வரலாறு மற்றும் குப்பிளான் கற்கரைப் பிள்ளையார் கோயில் வரலாறு ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆய்வு செய்தேன்.

"நீர்வேலி வாய்க்காற்றரவை பிள்ளையார் கோயிலுக்குரிய மூலவர் சிற்பமும் வன்னிப்பிரதேசத்திலிருந்து நெல் மூடைக்குள் மறைத்து வைத்த நிலையிலேயே கொண்டுவரப்பட்டது" என்று குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா (யாழ். பல்கலைக்கழக வரலாறு தொல்லியற்றுறை)- நீர்வேலி வாய்க்காற்றரவை தேவஸ்தானம் மஹா கும்பாபிஷேகமலர் -பக்கம் 45. (2008). (இந்நூலின் பின்னிணைப்பு பக். 163ஐப் பார்க்கவும்).

மேற்குறிப்பிட்ட மலரில் பிரம்மஸ்ரீ பிட்சாடனக்குருக்கள் 1962இல் எழுதிய கோயில் வரலாறு மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இவரது கட்டுரையிலும் ஒரேயொரு சிலை மட்டும் வன்னியிலிருந்து நெல்மூடைக்குள் வைத்துக் கொண்டுவரப்பட்தான தகவல் காணப்படுகிறது. (கும்பாபிஷேக மலர் - பக்கம் -16) இந்நூலின் பின்னிணைப்பு பக் 164ஐப் பார்க்கவும்).

குப்பிளான் கற்கரைப் பிள்ளையார் ஆலய வரலாற்றினை ஆராய்ந்தபொழுது பின்வரும் தகவல் காணப்படுகிறது:

குப்பிளானைச் சேர்ந்த அடுகாஞ்சி, படுகாஞ்சி என்ற இரண்டு சகோதரர்கள் மன்னார் சென்று வியாபாரம் செய்துவிட்டுத் திரும்புகையில் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களிடம் அகப்பட்டனர். அவர்களிருவரும் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களுடன் தாமும் சேரப்போவதாக நடித்து சிலகாலம் வழிப்பறிகாரர்களுடன் தங்கியிருந்து அவர்கள் கொள்ளையிட்டு வைத்திருந்த பொருட்களையும் திருடிக்கொண்டு ஊர்வந்து சேர்ந்தனர். ஆனாலும் கொள்ளைப் பொருட்கள் தமது குடம்பத்துக்கு ஆகாது என்றெண்ணி தற்போது ஆலயம் அமைந்த இடத்தில் இறக்கிவைத்தனர். அச்சமயம் கொள்ளைக் கூட்டத்தலைவன் குதிரையில் வந்து அவர்களைக் கைதுசெய்து கொள்ளைப்பொருட்களை தூக்க முயன்றான். கொள்ளைப் பொருட்கள் தூக்கமுடியாதனவாக கல்லாகத் தோற்றமளித்தன. கொள்ளைத் தலைவன் மனம்மாறி அந்த இடத்திலே ஆலய வழிபாடு செய்து தன் இழி தொழிலையும் கைவிட்டான். இந்த திவ்விய இடமே இந்த ஆலயத்தின் இருப்பிடமாகும்".

மேற்குறிப்பிடப்பட்ட வரலாறு குப்பிழான் கற்கரைக் கற்பகவிநாயகர் ஆலய புனருத்தாவர்த்தன கும்பாபிஷேக, சங்காபிஷேகமலரின்(1973) 18ஆம் பக்கத்தில் காணப்படுகிறது. இந்த வரலாறு 'ஆலயம்... இன்றுவரை.. என்ற தலைப்பில் தலைமை ஆசிரியர் செ. கதிரவேலு என்பவரால் எழுதப்பட்டுள்ளது. (இந்நூலின் பின்னிணைப்பு பக்கம். 162ஐப் பார்க்கவும்).

ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய இராஜகோபுர மலரில் காணப்படும் பிறைசூடி என்பவர் மூன்று சிலைகளைக் கொண்டுவந்த செய்தி எந்தக்கோயில் வரலாற்றிலும் காணப்படவில்லை.

மேலும் சங்கரஐயர் ஆயாக்கடவைக்கு குப்பிளானில் இருந்து வரவழைக்கப்பட்டவர் என்பதற்கு ஆதாரத்தைத் தேடியபோது அவர் மூன்று தலைமுறைகளாக புன்னாலைக்கட்டுவனில் வாழ்ந்ததற்கான எழுத்து மூலமான ஆதரங்களே உள்ளன.

எனவே ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய இராஜகோபுர மலரில் எழுதப்பட்டிருக்கும் கட்டுரை ஆதாரமற்றது என்பது நிரூபணமாகிறது. ஏன் இத்தகைய வரலாற்றுத் திரிபான கட்டுரை எழுதப்பட்டது? அதன் நோக்கம் என்ன? என்பது சிந்தனைக்குரியது.

## திரிபுபடுத்தப்பட்ட பாடசாலை வரலாறு

**"1910ஆம் ஆண்டில் கோயிலார் என்பவர், தான் கட்டிய மடத்தில் ஒரு பாடசாலையை உருவாக்கி அந்தணர்களைக் கொண்டு கல்வி போதிக்கச் செய்தார். இப்பாடசாலையே 1927இல் அரசினர் தமிழ் கலவன்பாடசாலையாக இன்றைய இடத்தில் நிலைபெற்றது"**

என்ற குறிப்பு 2005ஆம் ஆண்டு பாடசாலையால் வெளியிட்டப்பட்ட 'பவளம்' என்ற சிறப்பு மலரில் பக்கம் 16இல் காணப்படுகிறது. இது புனைந்து எழுதப்பட்ட தவறான கருத்து என்பதை இந்த நூலில் உள்ள 'புன்னைநகர் கல்விசார் முயற்சிகள்" என்ற கட்டுரையை வாசிப்போர் அறிந்து கொள்வர்.

❑

## பின்னிணைப்பு:

# ஆலயம் ...... இன்றுவரை

**செ. கதிரவேலு,** தலைமை ஆசிரியர்

"கற்கரைக் கற்பக விநாயக னடிதொழ
அற்புத மானநல் வாழ்வது வருமே."

விநாயகப் பெருமான் துணை கொண்டு, இந்த ஆலயம் தோன்றிய வரலாற்றினை ஓரளவு ஆராய்ந்து அறிந்து எழுதுவதற்கு விரும்பினேன். ஆனால் வரலாற்றினை நன்கறிந்த கற்றோரும் மற்றோரும் மறைந்துவிட்ட காரணத்தினாலே சரியாக அறியமுடியாவிட்டாலும், எம்பெருமான் அற்புதத்தை அடிக்கடி பலரும் பேசிக்கொள்ளுவதால் கற்கரைக் கற்பக விநாயகன் 'அருள்கொண்ட அண்ணலே' என்பதைத் துணிந்து கொண்டதோடு, அவர் மூர்த்தியாக அமைந்த கதையை முதியவர் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

சில நூற்றாண்டுகளுக்கு முன் தொடங்கி இற்றைக்குச் சில ஆண்டுகள் வரை எம்மூரவர் சிலர் மன்னார் (முன்பு மாதோட்டம்) வியாபாரிகளாக இருந்தனர். மாதோட்டம் என்னும் பெயர் சரித்திரகாலப் பெயராகவும், நாயன்மார் வாய்ச்சொல்லாகவும் வந்திருப்பதைக் கற்றோர் அறிவர். எம்மூரவர் 'மாதோட்டம் செல்லுகிறோம்' என்று கூறுவதை இன்றும் கேட்கலாம். வீதிகள், வாகனங்கள் இன்றிப் பிரயாண வசதியற்ற அக்காலத்தில் இங்கிருந்து கால்நடையாகக் கொழும்புத்துறை சென்று, அங்கே தோணி ஏறிப் பூநகரித்துறையிலே இறங்குவார்கள். அங்கிருந்து செம்பன்குண்டு, பல்லவராயன்கட்டு, முழங்காவில், வெள்ளாங்குளம், இலுப்பைக்கடவை, ஆத்திமூட்டை, பாப்பாமூட்டை வழியாக மாந்தை சென்று வியாபாரம் செய்து கால்நடையாகவே மீள்வர். அக் காலத்தில் சங்ககாலத்தில் கூறப்பட்ட ஆறலைகள்வர் கூட்டம் கூட்டமாக நாடுகளுக்குள் மறைந்து வழிப்பறி செய்து வாழ்ந்தனர்.

எம்மூர்ப் பெரியார் அடுகாஞ்சி, படுகாஞ்சி என்ற இரு சகோதரர் நடைப் பயணம் செய்தபோது வழிப்பறி செய்வோர் அவர்களை மறித்துத் தலைச்சுமையாகக் கொண்டுசெல்பவற்றைப் பறித்துத் துன்புறுத்தினர். சோதரர் இருவரும், தாமும் அவருடன் சேரவந்ததாகக் கூறித் தம் பொருட்களைக் காப்பாற்ற முனைந்தனர். அவர்களுடன் சேர்ந்து அவர்களுக்கு உணவு சமைத்தும் காவல்செய்தும் சில மாதங்களைக் கழித்தனர். ஒருநாள் இரவு கொள்ளைப் பொருட்களை அள்ளிக் கொண்டு இருவரும் அவர்களிடமிருந்து தப்பி ஓட்டமும் நடையுமாக வந்து ஊரை அடைந்தனர். கொள்ளைப் பொருள் குடும்பத்திற்குதவாது என்றெண்ணி, அதனை ஆலயம் அமைக்கப் பயன்படுத்தத் தீர்மானித்தனர். இதுபோது ஆலயம் அமைந்த இடத்திலே தலையிற் கொண்டுவந்த பொருட்களை இறக்கிவைத்துக் களைப்பாறினர். அச்சமயம் கொள்ளைக்கூட்டத் தலைவன் குதிரையில் வந்து அவர்களைக் கைதுசெய்து கொள்ளைப் பொருட்களைத் தூக்க முயன்றான். கலக்கமடைந்த சகோதரர் விநாயகப்பெருமானை வேண்டினர். கொள்ளைப் பொருட்கள் தூக்கமுடியாதனவாகிக் கல்லாகத் தோற்றமளித்தன. கொள்ளைத் தலைவன் மனம் மாறி அந்த இடத்திலே ஆலயவழிபாடு செய்து தன் இழிதொழிலையும் விட்டான். இந்தத் திவ்விய இடமே இன்றைய ஆலயத்தின் இருப்பிடமாகும்.

கொள்ளைத் தலைவன் கும்பிட்ட கோயில் கொட்டிலாக இருந்து பக்தர்கள் பலரைத் தன்னிடம் ஈர்த்தது. நாளடைவில் வளர்ச்சியடைந்து பிரம்மஸ்ரீ பொன்னையாக் குருக்கள் பரம்பரையினரை அர்ச்சகராகக் கொண்டு வளர்ந்தது. அவர் காலத்தில் அவரின் மருமகன் செல்லையாக் குருக்கள் (காலஞ்சென்ற வைத்தீஸ்வர வித்தியாசாலை ஆசிரியர் சுந்தரசர்மாவின்

18

குப்பிழான் கற்கரைக் கற்பகவிநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர் - "கற்பக விநாயகன்" *1973 (பக். 16)*

பொருண்மியமும் ஒன்று கலந்திருந்த வகையில் புராதன சமூகவுருவாக்கத்திற்கு வழிகோலியிருப்பதனைக் காணலாம். இதற்காதாரமாக விஜயன் வருகையின்போது குவேனி பருத்திநூல் நூற்றுக் கொண்டிருந்த மரபு சிறந்தவொரு எடுத்துக்காட்டாகும். பருத்திப் பண்பாடும் மாம்பழக்கலாசாரமும் இங்கு தனித்துவமான சமூக - பொருண்மியக் கட்டமைப்பொன்றினை உருவாக்கிவிட்டிருந்த அதே நேரத்தில் நெல்லுற்பத்திப் பொருண்மியமும் மோதகப் பண்பாடும் நீர்வள நாகரீக சமூக உருவாக்கத்திற்கு வழிசமைத்துவிட்டிருந்த வகையைக் காணலாம். மத்தியகால இலங்கையின் கணபதி வழிபாட்டு மரபில் விளாங்கனிமரபு தோற்றம் பெற்றிருந்தமையைக் காணும்போது மேற்கூறிய இருமரபுகளும் ஒருபொதுமரபாக சிங்கள - பௌத்த மரபிற்குரிய கணபதி வழிபாட்டு மரபொன்று உருவாகிவிட்டிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். இப்பின்னணியிலே எதிர்காலத்தில் யாழ்ப்பாணக்குடாநாட்டில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருந்த விநாயகர் வழிபாட்டுமரபின் தோற்றம் பற்றிய ஆராய்வதே பொருத்தமான தாகும்.

### அடிக்குறிப்புக்கள்

1. கிருஷ்ணராசா.செ. தெல்லியமும் யாழ்ப்பாணத்தமிழர் பண்பாட்டுத் தொன்மையும் பக் 20. 1998, யாழ்ப்பாணம்.

2. கிருஷ்ணராசா, செ: தென் - தென்கிழக்காசிய நாடுகளில் கணபதி வழிபாட்டு மரபும் தொன்மையும், பத்மம் (prof. S.Pathmanathan Felicitation Valume) P5 2004. Chennai.

3. வன்னப்பிராந்தியத்திற்கும் யாழ்ப்பாணக்குடா நாட்டிற்கும் இடையில் சங்கால வாணிபத்தொடர்புகள் மிகவும் இறுக்கமாக இருந்தமையினை அண்மைக்காலத்தில் திரு. குணரட்ணம் என்பவர் மேற்கொண்டு வரும் தொல்லியல் கண்டுபிடிப்புக்களினூடாக உறுதிப்படுத்த முடிந்தது. தமிழ்ப்பிராமி வரிவடிவம் பொறித்த சங்கால மீன்வடிவ நாணயங்கள் பலவற்றை அவர் தனது சேகரிப்பில் கொண்டுள்ளார். நாகர் அல்லது நாக என்ற பெயருடன் அவை காணப்படுவது யாழ்ப்பாணமான நாகதீபத்திற்கும் வன்னிப்பிராந்திய வாணிபத்திற்குமிடையே இருந்திருக்கக்கூடிய தொடர்புகளை உறுதிப்படுத்த உதவியுள்ளது.

(நீர்வேலி வாய்க்காற்றரவை பிள்ளையார் கோயிலுக்குரிய மூலவர் சிற்பமும் வன்னிப்பிரதேசத்திலிருந்து நெல்மூடைகளுக்குள் மறைத்து வைத்த நிலையிலேயே எடுத்து வரப்பட்டது என்பதும் இங்கு நோக்கத்தக்கது .

4. கந்தரோடை :- மாகியப்பிட்டிக் கணமையில் அமைந்துள்ள அங்கணாவைக்கடவை என்று அழைக்கப்படும் புராதன கண்ணகையம்மன் ஆலயமே முதலாம் நிலைக்குரிய புராதன ஆலயமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படுகிறது. கண்ணகி தெய்வத்திற்க்கு எடுக்கப்பட்ட விழாவில் கலந்து கொள்ளச்சென்ற இலங்கைவேந்தனான முதலாம் கயவாகு மன்னனனே இலங்கைக்குத் திரும்பும்போது அக்கண்ணிகையம்மன் சிலையைக் கொண்டுவந்ததாக மரபுகள் குறிப்பிடுகின்றன. அங்கண் அம்மைக்கடவை என்பதே அதன் புராதன பெயர்.

5. தில்லையம்பலப் பிள்ளையார் வழிபாட்டுமுறையில் தனித்துவமான பல கூறுகள் காணப்படுகின்றன. கருவறை எண்பக்கக் கோணங்களையுடைய விசாலமான

45

*நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக மலர் 2008. (பக். 45)*

# கோயில் வரலாறு

*[ கோயில் தருமபரிபாலராகிய பிரம்மஸ்ரீ சு.பிட்சாடனக் குருக்கள் அவர்கள் 1962 ஆம் ஆண்டு எழுதியது. ]*

**ஸதா பாலரூபாபி விக்நாத்ரி ஹந்த்ரீ**
**மஹாதந்தி வக்த்ராபி பஞ்சாஸ்யமான்யா**
**விதீந்த்ராதிம்ருக்யா கணேசாபிதாமே**
**விதத்தாம் ஸ்ரீயம்காபி கல்யாணமூர்த்தி**

**இதன் பொருள் :** எப்பொழுதும் குழந்தை வடிவாக இருந்தாலும் விக்கினங்களாகிய மலையைப் பொடியாகச் செய்யும் சக்தியுள்ளவராயும், யானை முகத்துடன் கூடியவராய் ஐந்து முகத்தையுடைய பரமேசுவரனாலும் (திரிபுரசங்கார காலத்தில்) பூசிக்கத் தகுந்தவராயும் பிரம்மா முதலிய தேவர்களுக்கும் தங்கள் மனோரதத்தை பூர்த்தி செய்வதற்கு தேடத்தகுந்தவராயும் கணேசன் என்னும் பெயருடன் கூடினவராயும் மங்களகரமான சரீரத்துடன் கூடின பரம புருஷராயுமுள்ள விநாயகர் எமக்கு ஐஸ்வர்யத்தைக் கொடுக்கட்டும்.

வாய்க்காற்றரவை பிள்ளையார் கோயில் கொண்டிருக்குமிடம் பண்டுதொட்டு மூத்தநயினார் கோயில் வளவு என அழைக்கப்பட்டு வந்தது. இற்றைக்கு ஐந்நூறு வருடங்களுக்கு முன்னர் மூத்தநயினார் கோயில் வளவு மரங்கள் நெருங்கியுள்ள சோலையையும் மாடு ஆடுகள் நீர்குடிக்கத்தக்க கேணியையுமுடையதாயிருந்தது. போர்த்துக்கீசர் இலங்கையை ஆண்ட காலத்திலே குப்பிளான், குரும்பசிட்டி, கட்டுவன் முதலிய ஊர்களிலுள்ளவர்கள் வழிநடையாய் நீர்வேலிக்கூடாக வன்னிக்குச் சென்று கமம் செய்வதும், மீண்டும் தம்மூருக்குச் செல்வதும் நடைபெற்றது. அங்ஙணம் செல்பவர்கள் நீர்வேலியில் மூத்தநயினார் வளவில் தங்கிச் செல்வார்கள்.

மேலே குறிப்பிட்டவர்கள் ஒருமுறை வன்னிக்குச் சென்று கமம் செய்தபோது வயலொன்றில் ஒரு விநாயக விக்கிரகத்தைக் கண்டெடுத்தார்கள். அவ்விக்கிரகத்தை தங்கள் சொந்த ஊரிலே ஸ்தாபிக்க விரும்பி நெல்லுச்சாக்குக்குள்ளே வைத்துக்கொண்டு திரும்பிவரும் சமயத்தில் நீர்வேலியிலே மூத்தநயினார் கோயில் வளவிலே வழமைபோலத் தங்கினார்கள். தங்கியவர்கள் ஆயாசத்தைத் தீர்த்த பின்பு பிள்ளையார் விக்கிரகம் வைக்கப்பட்ட நெல்லுச்சாக்கைத் தங்கள் ஊருக்கு கொண்டு போவதற்காகத் தூக்கினார்கள். அச்சாக்கைத் தூக்கமடியவில்லை. பின்பு பலர் கூடித்தூக்கினார்கள், அதன் பின்பு அவர்கள் தங்களால் இயன்ற முயற்சிகளையெல்லாம் செய்தார்கள். எல்லாம் வல்ல இறைவன் வல்லமைக்கு முன் மனிதர் வல்லமை எம்மட்டு ! முடிவில் இது பிள்ளையார் விக்கிரகத்தின் திருவிளையாட்டென எண்ணி அந்நெல்லு மூட்டையை மூத்தநயினார் கோவில் வளவிலேயே விட்டுவிட்டு அச்சத்தோடும், ஆச்சர்யத்தோடும் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றுவிட்டனர்.

இவற்றைக் கேள்விப்பட்ட காணிக்குரிய சிறுப்பிட்டியைச் சேர்ந்த உயர் வேளாண் மரபினர் அக்காலத்திலே நீர்வேலியில் வசித்த பிரம்மஸ்ரீ சிவசாமிக் குருக்களோடு கலந்தாலோசித்து அவ்விடத்திலேயே கோவிலைக்கட்டி கும்பாபிஷேகம் செய்து விநாயகரை பிரதிஷ்டை செய்தனர். சில வருடங்கள் சென்ற பின்பு காணிக்குரியோர் கோயிற் பரிபாலனத்தை சிவசாமிக் குருக்களிடம் ஒப்படைத்தனர்.

16

*நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக மலர் 2008. (பக். 18)*

# குறிப்புகள்

# குறிப்புகள்



## கலாபூஷணம் டாக்டர் தி. ஞானசேகர ஐயர்

இலக்கியத்துக்கான அரச விருதுகளையும், கௌரவங்களையும் பெற்ற தி.ஞானசேகரன் எழுதிய சிறுகதைகள், நாவல்கள், இலங்கை இந்தியப் பல்கலைக்கழகங்களில் பாடநூல்களாகவும் பட்டப் படிப்புகளை நிறைவுசெய்ய உயர்வகுப்பு மாணவர்களால் எடுத்துக் கொள்ளப்படும் ஆய்வுக்குரிய படைப்புகளாவும் விளங்கு கின்றன.

இவர் நடத்திவரும் 'ஞானம்' கலை இலக்கியச் சஞ்சிகை, மற்றும் இவர் தமிழுக்குத் தொகுத்தளித்த ஞானம் சிறப்பிதழ்கள், கீரிமலை நகுலேஸ்வர ஆலய கும்பாபிஷேக மலரான 'நகுலநாதம்' ஆகியவை இவரது திறமைகளையும் பெருமை களையும் விண்டுரைப்பன.

இந்தச் செழுமைகளையெல்லாம் அருளியவர் புன்னைநகர் மன்னவரான ஆயாக்கடவைச் சித்திவிநாயகர். பல மேதை களையும் அறிஞர்களையும் சான்றோர்களையும் காலத்துக்குக் காலம் தொடர்ச்சியாக அருளிப் புன்னை நகரின் புகழ் ஓங்கச் செய்பவர் அவர்.

புன்னை நகர் மான்மியம் என்னும் இந்நூல் புன்னைநகர் மன்னவன் பற்றியும் அவரது ஆட்சிப்பிரதேசச் சிறப்புகள் பற்றியும் அங்கு வாழும் மக்களின் சான்றாண்மையையும் அன்பையும் பண்பையும், தியாகங்களையும், சேவைகளையும் ஆதார பூர்வமாக ஆவணப்படுத்துகிறது.

கணேசையர், செந்திநாதஐயர், தம்பிரான் சுவாமிகள், இவர்கள் வழிவந்த ஞானசேகரஐயர் ஆகியோரைத் தவிர்த்து தமிழ்கூறு நல்லுலகின் வரலாற்றை எழுதிவிடமுடியாது. இவ்வறிஞர்களின் பெருமைகளை, புன்னைநகரை விடுத்துக் கூறிவிடமுடியாது.

இத்தகைய புன்னைநகரின் மாண்புகளை ஆவணப்படுத்தும் வரலாற்று நூலாக அமைகிறது இந்தப் புன்னைநகர் மான்மியம்.

– ஞானம் பாலச்சந்திரன்